# ஐயை

## தனித்தமிழ்ப் பாவியம்



பெருஞ்சித்திரனார்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# ஐயை

பெருஞ்சித்திரனார்

| | | |
|---|---|---|
| பதிப்பு: முதல் பதிப்பு | : | தி.பி. 2008, சிலை : 17 (1-1-1978) |
| மறு பதிப்பு | : | தி.பி. 2029, கும்பம் : 26 (10-3-9 |
| நூல் தலைப்பு | : | ஐயை<br>(தனித்தமிழ்ச் சிறுபாவியம்) |
| ஆசிரியர் | : | **பாவலரேறு பெருஞ்சித்திரனா** |
| வெளியீடு | : | **தென்மொழி நூல்வெளியீட்டு விற்பனையகம்,**<br>5, அருணாசலத் தெரு,<br>திருவல்லிக்கேணி,<br>சென்னை - 600 005. |
| அச்சாக்கம் | : | தென்மொழி அச்சகம்,<br>சென்னை - 5 |
| உரிமை | : | தாமரை பெருஞ்சித்திரனார |
| தாள் | : | வெள்ளைத்தாள் (11.6) |
| பக்கங்கள் | : | 192 ( 12 + 56 + 124 ) |
| அளவு | : | மணிமுடி (கிரௌன்) |
| படிகள் | : | 1200 |
| விலை | : | உரு. 30.00 |

# முன்னுரை

**'ஐயை'** 'தென்மொழி' இதழில் வெளிவந்த பொழுது இதனைப் பாராட்டியவர் பலர். அன்பர் சிலர் இச்சிறு பாவியத்தைப் பாராட்டி நெடிய பல பாக்களையே எனக்கு விடுத்தனர். அவற்றைப் படித்து, அவர்தம் அன்புள்ளத்தையும் தமிழிலக்கியச் சுவை திறத்தையும் கண்டு வியந்தேன். உண்மையான தமிழ் வேட்கை இன்னும் மறைந்து போகவில்லை என்றுணர்ந்து மிகவும் மகிழ்ந்தேன்.

மாந்தர்தம் புறநிகழ்ச்சிகளில் முகிழ்த்தெழும் பாட்டு, கதை இவற்றின் வல்லமையைவிட, அவர்தம் அக நிகழ்ச்சிகளில் குமிழ்த்தெழும் மெய்யிலக்கியங்களுக்குத் தாம் எத்துணை ஆற்றல்!

'ஐயை' சிறையில் மலர்ந்த செழுமலர்! பெண்மையின் ஒளி நிரம்பிய உள்ள உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டும் உயிரோவியம். மூன்று இரவுகளில் ஏறத்தாழப் பதினெட்டு மணி நேரங்களில் வரிவடிவெடுத்த விரி வானின் முழு நிலவு ஐயை! உண்மையான காதல் உள்ளத்தின் ஏற்ற இறக்கங்களை ஐயையின் ஒவ்வோர் அடியிலும் காணலாம்.

"இதனை அச்சிட்டு நூலாக்கும் பொறுப்பை, என்னிடம் விட்டு விடுங்கள் ஐயா" என்று என் வினைப்பாடுகளில் பெருந் துணையாக இருக்கும் திரு. பாவை. நடவரசன் என்னிடம் கேட்டார். உள்ளத்தில் ஊன்றிய பல்லாயிரம் எண்ணக் கால்களை எண்ணியும் மாளாத எனக்கு, அவ்வேண்டுகோள் ஒரு பெருஞ் சுமையிறக்க மாகப் பட்டது. எனவே மகிழ்வோடு இசைந்தேன். விரைவில் இதனை நூலாக்கியும் முடித்தார். அவர்க்கு என் பாராட்டும் வாழ்த்தும்.

ஓவியர் திரு. சின்னையன் என் எண்ணத்துத்தோன்றிய 'ஐயை'யை வண்ணத்துக் காட்டி மகிழ்வூட்டியுள்ளார். 'ஐயை' வாழும் வரை அவர் ஓவியமும் வாழும்.

மெய்க்காதல் வாழ்வில் உய்வின்றி வெம்பிக் கசிந்த கன்னிக்கனி 'ஐயை'. உங்கள் அன்புள்ளத்தில் அடைக்கலம் வேண்டி உங்கள் முன் நிற்கின்றாள். அத் தாய்மைக் கொடிக்கு உங்கள் நெஞ்சையே பற்றுக் கோடாக்கி வாழ்வளியுங்கள். தமிழறமும் தாயன்பும் உங்களை வாழ்த்தும்.

கடலூர்-௧. அன்பன்,
சுறவம். ௧. தி. பி. ௧௯௯௯. பெருஞ்சித்திரன்.
15—1—68.

## இரண்டாம் பதிப்பு முன்னுரை

இவ்விரண்டாம் பதிப்பில், முந்திய பதிப்பில் விடுபட்ட 717-ஆம் அடி புதிதாகச் சேர்க்கப் பெற்றுள்ளது. எனவே பாவியத்தின் அடிகள் 985 ஆனது.

பெண்மைச் சிறப்பை உணர்த்தும் இப் பாவியத்தை மகளிர் பெரிதும் விரும்பிப் படித்து வருவது மிகவும் மகிழ்வூட்டுகின்றது. விரைவில் இப் பாவியம் ஆங்கிலப் பெயர்ப்புடன் வெளிவர விருக்கின்றது. என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கடலூர்-1 —பெருஞ்சித்திரன்.

## மூன்றாம் — நான்காம் பதிப்பு முன்னுரை

ஐயை—மூன்றாம் பதிப்பு இது. முன்னிலையில் வேறு மாற்றம் ஏதுமில்லை. ஆனால், பின்னிணைப்பாக திரு. ப. அடியார்க்.கருளி. வணி, இ. அவர்கள் எழுதிய திறனாய்வுக் கட்டுரைகளைச் சேர்த்திருக்கின்றேன். இடமின்மையால் வேறு சில கட்டுரைகளையும் இதில் சேர்க்க இயலவில்லை, பின்னர் தனித் திறனாய்வு நூல் வெளிவருங்கால் அதில் பலர் கட்டுரைகளையும் சேர்க்கலாம். வினையழுத்த நிலையில் சில அச்சுப் பிழைகள் நேர்ந்துவிட்டதற்கு வருந்துகின்றேன். திருத்தப் பட்டியின்படி முன்னர் அவற்றைத் திருத்திக் கொண்டு படிக்கக் கேட்டுக் கொள்கின்றேன்.

சென்னை-5 —பெருஞ்சித்திரன்

ஐயை-இரு பகுதிகளும் இணைந்த பதிப்பு இது. இதன் முதற் பகுதி வெளிவந்த பின் இரண்டாம் பகுதி ஒன்று வெளிவரும் என்று யாரும் நினைத்திருக்கவே முடியாது. நானும் நினைக்கவில்லை. இதுபற்றி இதன் இரண்டாம் பகுதி முன்னுரையில் கூறியுள்ளேன்.

ஐயை-ஒரு பாவியத்தலைவி மட்டுமல்லள். நம் உணர்வோடு பொருந்தி வாழும் ஓர் உயிர்ப் பிறவியாகவே—நாம் மதித்துப் போற்றக்கூடிய—போற்றிப் பின்பற்றத்தகும் தூய—முழுமை நிரம்பிய பெண் பிறவியாகவே—கருதிய அன்பர்கள் பலர். அத்தகைய அளவில் அவள் படைப்பு உயர்ந்தது; உயிர்மை சான்றது.

வாழ்க்கையில் பல பெண் பிறவிகளை நாம் பார்த்திருக்கின்றோம். ஆனால் ஐயை போலும் பெண்மை நிரம்பிய ஒரு தெய்வத் திருவுருவை—மெய்ம்மை சான்ற ஓர் அன்புள்ளத்தை—தாய்மை வடிவை நாம் அரிதாகவே பார்க்க வேண்டியிருக்கும். அத்தகைய பெண்களை நாம் கைதொழுது போற்ற வேண்டும். ஏனெனில் அவ்விறைமை சான்ற உள்ளங்களால்தாம் வாழ்க்கையே ஒருவகை மலர்ச்சி யெய்துகின்றது. வாழ்ந்தோம் என்ற நிறைவும் ஏற்படுகிறது.

ஐயையின் படைப்பை மெய்ம்மையாகக் கொண்டு, அவள்பால் அன்பும் இரக்கமும் பூணுகின்ற நல்லுளங்கள் இவ்வுலகில் மிகுதல் வேண்டும். அத்திருவுளங்களால் தாம் உலகமே பெருமை பெறுகிறது. கனிவும் காதலும் உண்மை அன்பும் நிரம்பிய பேருள்ளமாகப் பெண்மை மலர்ச்சியுறுமானால் வாழ்க்கையின் துன்ப நிழலைக்கூட பலர் உணரமாட்டார்கள்!

போலி நாகரிகமும் பொய்ம்மை நடைமுறைகளும் மலிந்து நிரம்பிய நம் வாழ்க்கையில், அன்பின் குளிர்ந்த நிழலை நம்மில் பலர் உணர முடியாத அழுத்தம் நிறைந்துள்ளது. இந்நிலையில் ஐயை-போலும் தெய்வ அன்புணர்வு பொதிந்த பெண்மைத் திருவுளங்களே நமக்கு நல்ல வழிகாட்டிகளாக விளங்க முடியும்.

ஐய்யையை அனைத்துத் தாய்மை உள்ளங்களும் உணர்ந்து படித்துச் சுவைத்தல் வேண்டும் என்பது என் பேரவல்!

சென்னை-5
1—1—1978.

அன்பன்
பெருஞ்சித்திரன்.

# ஐயை-இரண்டாம் பகுதி முன்னுரை

கடந்த 5—2—76 முதல் 26—1—77 வரை தில்லியரசின் அடக்குமுறை ஆளுமைக் கட்டிலில் அப்பொழுதிருந்த இருபதாம் நூற்றாண்டின் தன் முப்பதிகார வெறியின் மொத்த உருவமான இந்திராகாந்தியின் தடுப்புநிலை(மிசா)ச் சட்டத்தின் பிடியில் சிக்கிச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தேன். என்னைச் சிறைவைத்திருந்தது சட்டப்படி சரியில்லையோ, சரியோ எனக்குக் கிடைத்த முழு ஓய்வென்று கருதி, அச்சிறைவைப்பை முழு நிறைவுடன் ஏற்று ஒரு நொடிப்பொழுதும் வீணாக்காமல், பாடல்கள் பல எழுதியும், பற்பல நூல்களைப் படித்தும், திருக்குறள் வகுப்பெடுத்தும், ஐந்தாண்டுத்திட்ட திருக்குறள் மெய்ப்பொருளுரைக்காகப் பல அரிய நூல்களை ஆய்ந்தும் அவ் வோராண்டுப் பொழுதைக் கழித்தேன். சிறையதிகாரிகளும் என் நூலாய்வுக்கும், நூலுருவாக்கத்திற்கும் உதவியாகத் தனியறை அமைத்துக் கொடுத்தும் வேண்டிய பல நூல்களைத் தருவித்துக் கொடுத்தும் பேருதவி செய்தனர்.

அக்கால் 31—3—76 தொடங்கி 24—4—76-க்குள் ஐயையின் அவ்விரண்டாம் பகுதியினை எழுதி முடித்தேன். ஐயையின் முதல் பகுதி 1965 —இல் வேலூர்ச்சிறையில் உருவானது. சென்னைச் சிறையில் உள்ள நேரத்தில், புதினிக்குன்றில் செம்மலின் வரவுக்காக ஐயை நீண்ட நெடுங்காலம் காத்திருப்பது போன்ற ஓருணர்வு என் உள்ளத்தில் நெடுந்துயரைச் செய்தது. அவளுக்குச் செம்மலின் மறைவை உணர்த்தி, அவளைத் தொடர்ந்து வாழ்க்கைப் போராட்டத்தில் சிக்கவைத்து அவளுக்கொரு முடிவை உண்டாக்கிக் கொடுக்க விழைந்தது என் அன்புள்ளம். ஏற்கனவே அன்பர்கள் பலரும் அவள் முடிவு பற்றி ஆற்றாத நெஞ்சினராய் அவள் அவலத்தை என்பால் கூறி வருந்திய நினைவுகளும் என் உள்ளத்தை அரித்துக் கொண்டிருந்தன.

எனவே அவளின் முடியாக் கதையை முடித்து வைக்க விழைந்தது என் கற்பனை உள்ளம். ஓய்வான சில பகற்பொழுதுகளிலும்

என்னுடன் சிறையிருந்த அன்பர்கள் துயின்ற அமைதியான இராப்பொழுதுகளிலும் ஐயை வாழ்ந்த புதினிக்குன்ற மேடு பள்ளங்களில் தனித்து உலா வந்தேன். அவளையறியாமல் அவள் இன்ப துன்பங்களில் பங்கேற்றேன்; அவளொடு அழுதேன்; விம்மினேன்; விசித்தேன். அவள் சோர்ந்து உயிர்ப்பாடுகையில் நானும் அருகிருந்து அவள் வாழ்வின் பேரவலங்கண்டு நெட்டுயிர்த்தேன். என் செய்வது? அவள் வாழ்க்கையின் போக்கில்தான் என்னால் போக முடிந்தது. அதை மாற்றியமைக்க என்னால் இயலவில்லை!

பாவியம் உருவாகிய அந்த இருபத்தைந்து நாட்களின் இடைப் பொழுதுகளில் பலமுறை அவளுக்காக அழுதிருக்கின்றேன்; அணற்றியிருக்கின்றேன். அவளுக்கு இன்பநிலை வாராதா என்று ஏங்கி அங்காந்திருக்கின்றேன். ஆனால் அவளுக்கு வந்ததுதான் வந்தது! பெற்றதைத்தான் அவள் பெற்றாள்! நான் என்ன செய்ய முடியும்? ஐயைக்காக இரங்கும் 'நான்' வேறு; அவளைப் படைத்தளிக்கும் 'நான்' வேறு. இரண்டு 'நான்'களையும் என்னால் ஒன்றாக்கவே முடியாது. ஒன்று உலகியல்; மற்றொன்று இறையியல்! ஒன்று படிப்பாற்றல்! மற்றொன்று படைப்பாற்றல்! ஒன்று சுவையுணர்வு! மற்றது வினையுணர்வு! இறுதியில் 'ஐயை' பாவியம் முடிந்தது' ஆனால் 'ஐயை'யின் நினைவு நில்லா உணர்வாய் நீண்டு கொண்டிருந்தது.

'ஐயை' முதல் பகுதி உருவாகிய பொழுது, அவள் பற்றி மீண்டும் எண்ணுவேன் என்றே நினைக்கவில்லை. ஏன்? இரண்டாம் முறை அவளைக்காண விழைந்த தொடக்க நாட்களிலும்கூட, அவளுக்கு மீண்டும் ஒரு பகுதி வாழ்க்கை உண்டு என்றே எனக்குத்தெரியாது. இனி, எழுத வேண்டும் என்ற ஓர் உணர்வு வந்து அவளை உருவாக்கிக் கொண்டிருந்த பொழுதுங்கூட அவள் வாழ்க்கையின் இறுதி நிலைபற்றி நான் அறிந்தவனல்லன். அவளை உருவாக்கிய கருவிதான் நான்! ஆனால் அவளை அவளேதான் உருவாக்கிக் கொண்டாள்! எனவே, இவ்விரண்டாம் பகுதியின் எந்த முடிபுக்கும் எனக்கும் எவ்வகை உலகியல் தொடர்பும் இல்லை என்றே கூறிக்கொள்ள வேண்டும்.

சிறையினின்று மீண்டுவந்த இரண்டாம் நாளிரவு "ஐயை-இரண்டாம் பகுதி"யைக் குடும்பமும், என் உணர்வொடு பொருந்திய தென்மொழி உள்ளங்கள் சிலவும் கேட்க, என் மகள் தேன்மொழி படித்துக் காட்டிய பொழுது, அவர்களுடன் நானும் சேர்ந்துகொண்டு அவள் வாழ்க்கையைக் கேட்டுப் பாகாய் உருகினேன்! உள்ளங்குழைந்தேன்! தேன்மொழியின் குர லினிமையில் ஐயை நீழலாடினாள்!

இவ்விரண்டாம் பகுதியை வெளிக்கொணர்ந்த 'எயினி இளம் பிறை வெளியீட்டக' உரிமையாளர் தென்மொழி மறை. நித்த லின்பனார் 'ஐயை'க்கு நெருங்கிய உணர்வுறவு உடையவர். அவர் வாழ்க!

இஃது அச்சேறுங்கால் இதன் அச்சுப் படிகளை உடனிருந்து திருத்தியுதவிய தென்மொழி. ப. அடியார்க்கருளி, பூங்குன்றன் இருவரும் கூட 'ஐயை'க்கு உணர்வுறவு உடைய வர்களே! அவர்களும் வாழ்க!

சென்னை-5.
1—1—'78

அன்பன்,
பெருஞ்சித்திரன்.

---

## இரண்டாம் பதிப்பு — பதிப்புரை

ஐயை - இருபகுதிகளும் இணைந்த பதிப்பு தீர்ந்து போனமையினாலும் மதுரை—காமராசர் பல்கலைக்கழகத்தில் ஐயை பாடமாக வைத்துள்ளமையால் உடனடித் தேவையைக் கருதியும் படப் பதிப்பாக இரண்டாம் பதிப்பு வெளிவருகிறது. ஐயை முதல் பகுதிமட்டும் இதற்குமுன்னர் நான்கு பதிப்புகளாக வெளி வந்துள்ளது. முதற் பகுதியில் இடம் பெற்றிருந்த **சொல்லாய்வறிஞர் ப. அருளி (ப. அடியார்க்கருளி)யாரின்** திறனாய்வுக் கட்டுரைகளும் இது தொடர்பான பிற கட்டுரைகளும் தனி நூலாக வெளிவரும். அட்டைப்படம் பல்வண்ணமாகப் பதிக்கப்பட்டுள்ளது. ஐயா அவர்களின் மறைவுக்குப்பின், அவர்தம் 66-ஆம் பிறந்த நாளில் இந்நூலின் இப்பதிப்பு வெளிவருகிறது.

சென்னை - 5
10.03.98

தென்மொழி நூல் வெளியீட்டு
விற்பனையகம்

## நூலுட் புகுமுன் ஒரு சில.... —

பெண் உடலில் மென்மையானவள். உள்ளத்தில் வன்மையானவள். உணர்விலோ ஆழமும் அகற்சியும் கொண்டவள். பல்லாயிரம் எண்ணக்கால்கள் அவள் உள்ளத்தில் ஊன்றியுள்ளன; அவற்றிற்குச் சிறகுகள் உண்டு; வல்லமை உண்டு. அவ்வெண்ணங்கள் ஒன்றிலும் ஊன்றாமலிருக்கும் வரை, அவளை நிலைப்படுத்த எவராலும் இயலாது. ஒன்றில் ஊன்றி விட்டாலோ அவற்றைச் சிறிதே பெயர்க்கவும் எவராலும் முடியாது! எத்துணைத்துயர் வந்தாலும் அவள் அந்நிலையினின்றும் விலகவே மாட்டாள்!

பெண்ணின் உள்ளம் மற்றொரு பெண்ணாலும் அறியப்படாத கடலடி; மலைமுகடு; அகன்று விரிந்த வானம்! அப்படிப்பட்ட பெண்மை நிரம்பிய அந்த நெஞ்சம், தான் விரும்பிய ஓர் ஆணின் உள்ளத்தில் காலூன்றி விட்டாலோ, அங்கேயே அது நுகர்கின்றது; பசி தணிகின்றது; நிறைவடைகின்றது; அயர்கின்றது. இறுதியில் துறக்கத்தையும் அமைத்துக் கொள்ளுகின்றது.

ஒரு வித்து பூவாக மலர்ந்து, காயாக முதிர்ந்து, கனியாக நிறைவுறுதல்போல், ஒரு பெண் பேதையாய் விளங்கிப் பெண்மையாய்ச் சமைந்து, தாய்மையாய் நிறைவடைகின்றாள்!

இம்முப்பருவங்களும் ஒருபெண்ணின் மூன்று வாழ்க்கைகள். இம்மூன்று வாழ்க்கை நிலைகளிலும் அவள் உளத்தாலும், உருவத்தாலும் ஒவ்வொரு படி உயர்ந்து விளங்குகின்றாள்.

முதல் பருவத்தில் அவளுக்கு அவளே விளங்காதவள்;

இரண்டாம் பருவத்தில் அவளுக்குப் பிறர் விளங்காதவர்;

மூன்றும் பருவத்தில் பிறர்க்கு அவள் விளங்காதவள்;

இம் மூன்று பருவங்களும் பெண்மை என்ற பொன்னிழையில் கோத்த மூன்று முத்துகள்!

இவை ஒவ்வொன்றும் தனித்தனி அழகு வாய்ந்தவை; உறுதி நிறைந்தவை. இவை எந்த ஓர் ஆணினாலும் விலை மதிப்பிட முடியாதவை.

கற்பனைக் கண்களால் கலைச் சிறகமைத்து அவற்றை நாம் காண முடிந்தால்...!

ஆ! அவற்றின் பொலிவும் வலிவுந்தாம் என்னே!

ஐயை ஒரு பாவியம் மட்டும் அன்று; பேதைப் பெண் ஒருத்தியின் உள்ள ஓவியம்! அதில் அருவியின் சிலிர் சிலிர்ப்பையும் பார்க்கலாம்; தென்றலின் குளிர்மையையும் நுகரலாம்; எரிமலையின் சீற்றத்தையும் காணலாம்.

என் இரண்டுமாதச் சிறை வாழ்க்கையின் ஊடே மலர்ந்து மணம் பரப்பியவள் இந்த ஐயை!

எங்கேனும் ஐயையைப்போன்ற பெண் ஒருத்தியை நீங்கள் காண நேர்ந்தால், அவள் உள்ளத்தை வாழ்வெலாம் தொழுது போற்றிக் கொண்டிருங்கள். அந்தப் பெண்மை உள்ளத்திற்கு இந்த வானமும் எளியது; புடவியும சிறியது!

எங்கோ மலர்ந்து எவர் கண்களுக்கும் படாமல் மணம் பரப்பிக் கொண்டிருக்கும் அத்தகைய உள்ளங்களால் தான் இவ்வுலகம் தன் நிலை பிறழாது சுழன்று கொண்டுள்ளது.

ஐயையை முழுவதும் உணர்ந்தால் நீங்களும் அவ்வாறு தான் கருதுவீர்கள்! அதன்பின் உங்கள் உள்ளத்தில் ஒரு புதிய ஒளி பிறக்கும்; ஒரு புதிய வழி விளங்கும.

*அவ்வொளியும் வழியும் உங்கள் வாழ்க்கைப் பயணத்திற்கு ஓர் அமைதியையும், தெளிவையும் தருமானால் அதுவே ஐயையை நான் கண்டு காட்டியதற்குப் பயனும் பரிசும் ஆகும்.*

*மேலோட்டமும் ஆரவாரமும் நிறைந்த இக்கால வாழ்வின் பிடிப்புகளிலிருந்து, சற்றே உங்கட்குத் தொலைவான, ஆழமான ஓர் உண்மை உள்ளத்தின் நெளிவு சுழிவு களைக் காட்டியிருக்கின்றேன்.*

*அவற்றைக்கண்டு, காய்ந்து கிடக்கும் மனத்தின் போலிச் சருகுகளை உதிர்த்து விடுங்கள்! அவை ஒன்றுக்கும் உதவாதவை; உங்கட்கும் சுமையானவை!*

*ஐயை அத்துறையில் எல்லார்க்கும்—குறிப்பாகப் பெண்கள் எல்லார்க்கும் வழி காட்டியாக விளங்கட்டும்!*

*அன்பன்,*
பெருஞ்சித்திரன்.

## படையல்

இன்பினும் துன்பினும் எனையக லாமல்
அன்பினும் பணியினும் அயரா துதவிடும்
பெண்ணின் நல்லாள் தீதிலாப் பேதை
தண்ணியள் மனைவி தாமரைக் கிதுவே!

# ஐயை ........

ஒருவனையே எண்ணி வாழ்ந்த 'கன்னி இளமான்'—
அவன் வந்த பொழுது, அவன் முன்னே திருநாள்போல் ஆடிப்பாடினுள்!
அவனிடம் தன் மெய்க்காதலை அவள் வெளிப்படுத்திய பொழுது—
அவனும் தன் உள்ளத்தைத் திறந்து காட்டினன்....!
ஆனல் அவன் உள்ளத்தில் இருந்தவள் வேறு!-உடனே....
'ஆடல் மயிலுக்கு கால் முறிவானது போல்'
'பாடற் குயிலுக்கு அம்பு பட்டது போல்' துடிதுடித்தாள்'
ஆனல் ...அவளுக்காக உயிரையே வைத்திருந்த அவனின் அன்னையோ,—"குமைவுறும் காதற் குயிலைப் பாரடா!
கன்னி அன்றிலைக் கண்ணுல் காணடா"—எனக்கூறி
அவனை ஏற்றுக்கொள்ள மகனிடம் இறைஞ்சினுள்.
ஏலா மகனிடம்,
"தாய் அல்லள் உனக்கு நான்;..
இறுக்கிக் கொண்டேன் என் உள்ளம்; எழுந்து போ"-என
வெய்ய உரைத்தாள். வீசிய வேல்போல்,
தாவி வெளிச் சென்றுன் தனிமகன்!
ஆவி போனது போல் அலறினுள் ஐயை!
... ... ......... ... ...
இப்படிச் செல்கின்றது பாவியம்?
இறுதியில் நிற்பவள்.........!?
ஐயை! ஐயை!! ஐயை!!!
அவளுக்குத்துணை...?
குன்றம், குடில், கொட்டில், ஆநிரை, ஆட்டுக்கூட்டம், ஓர் அரிமாப் பிள்ளை!
இறுதியில் இக்காட்சி இயற்கை வண்ண ஓவியமாக நம் நெஞ்சத்திரையில் எழுதப் பெறுகின்றது!
ஒரு பெருமூச்சு, ஒருதுளிக் கண்ணீரோடு பாவியம் முடிகிறது!

பாவை. நடவரசன்.




(முதல் பகுதி)

## 1.

நின்று நின்று கால்கள் சோர்ந்தன.
உள்ளத் தவலம் ஓங்கி யிருந்தது!

அவளே ஐயை!
ஒளியுமிழ் அகல்விழி; நுனிகூர் மூக்கு!
வளிவார் அலைகுழல்; பிறைதோய் நெற்றி!
செவ்விதழ்! செதுக்கிய சிறுமணித் தாடை!
கவ்விய சங்கின் அமைந்த கழுத்து!
பசிய தேமல் படர்ந்த மேனி!
ஒசிந்த மெல்லிடை! உடலம் பைங்கொடி!

பெருஞ்சித்திரனார்.

முல்லைச் சிறுபல் முறுவல் காட்டி
உள்ளத்தவனை இருத்தி ஒண்டொடி
குன்றக் குவட்டில் அமர்ந்து, குமிழ்விடும்
ஒன்றிய காதல் ஊர்ந்த நினைவொடு
பைம்புல் ஒன்றினைக் கிள்ளி பற்களால்
நொய்படக் கொறித்து நகர்வழி நோக்கி
இருந்தாள்! அவளின் உள்ளத் திருந்தவன்
விருந்து உண வுக்கு; நினைவிற்கு வித்தே!

ஐயை நெடுநினைவு ஆழ்வாள்! அவளின்
மெய்தான் அங்கே மிதக்கும்; நெஞ்சம்
நினைவுச் சிறகால் நெடுநகர் பறந்து
புனைவின் நின்ற பொலிவோன் தன்மேல்
மொய்த்துக் கிடக்கும்! இதழ்முறு வலிக்கும்!
கையில் நெடுங்கோல்! கண்களில்மின்னல்!

அண்டையில் மேயும் ஆடுகள்! இடையிடைக்
கொண்டை குலுங்க அவற்றைக் கூட்டுவாள்!
உயர்ந்த நெடுங்கிளை இலைகளை உதிர்ப்பாள்!
அயர்வாள் என்னினும் உள்ளம் அயராள்!
ஆட்டுக் கூட்டமோ அவளுணர் வறியாது
மேட்டில் ஏறும்; பள்ளத் திறங்கும்!
ஓட்டி ஒருபுறம் சேர்ப்பாள் ஒருநொடி!
மீண்டும் நெஞ்சில் அவனுரு மின்னும்!

தூண்டும் அவனிரு தோள்களில் தோய!
என்செய் வாளவ் விளங்கொடி? துடிப்பாள்!
புண்செய் அவன்றன் நினைவையும் புலப்பாள்!

இதற்குள்,
'அம்மே' என்றே அரற்றுமோர் ஆடு!
வேலியைத் தாண்டிக் குதித்திடும் ஒன்று!
பாலைச் சப்பிடத் தவிக்குமோர் குட்டி!
அவற்றிடை ஓடுவாள்! அவைபோற் கத்துவாள்!
தவழுங் குட்டியைத் தாவி அணைப்பாள்!
அவன்றன் நினைவே அண்டும் மீண்டும்!
உவகை நெஞ்சத்து ஊஞ்சல் ஆடும்!
காதலன் கற்கும் கல்வியைக் கடிவாள்!
ஓதற் பிரிவை எண்ணி உளைவாள்!
அந்திப் பொழுதோ அதற்குள் பாயும்!
நொந்து வருந்துவாள்! நோய்மிக உறுவாள்!


காலை யிருந்து மாலை வரையிலும்
நூலிடை வருந்த நுதல்நனி வெயர்ப்ப
ஆடுகள் மேய்த்தல் ஐயை வழக்கம்!
தேடும் அவனையே விழிகள்; தேய்வாள்!
இன்றை வருவான் எனுமவள் நெஞ்சம்.
அன்றை கடந்தால் அடுத்தநாள் என்னும்!
உச்சிப் பொழுதினில் ஊறுகாய்க் காரம்

இச்சிச் செனும்படி இதழ்எரி வெடுக்கக்
கலயத் துள்ள கஞ்சியைக் குடிக்கையில்
தலைதென் படுமா எனஆ யிரமுறை
செல்விழி நோக்குவாள்! சேயோன் வராவிடில்
வேல்விழி கண்ணீர் வடித்து விம்முவாள்!
அவளுடல் தன்னில் அவனுயிர் இருப்பதாய்
உவகை நெஞ்சொடு நினைந்துயிர் வாழ்வாள்!
காதலன் நகரில் கல்வி பயில்வான்!
சாதல் வருமுன் வருதலை வேண்டி
ஆயிரந் தெய்வம் அகத்தில் வழுத்துவாள்!
ஏயும் அவன்நினை விருப்பதால் இருப்பாள்!
என்றும் அவள்போய் ஏறிப் பார்க்கும்
குன்றின் உச்சியில் கொடுங்கற் பாறையின்
அருகினில் சிறுசிறு கற்களால், ஐயை
வரவுநாள் எண்ணி வாடிக் குலைந்தாள்!
கற்கள் குவிந்தன! காதலன் வராமல்
நிற்காக் கணக்கு நீண்டுகொண் டிருந்தது!
அன்றும் அவனை அவளெதிர் பார்த்தாள்!

நின்று நின்று கால்கள் சோர்ந்தன.
உள்ளத் தவலம் ஓங்கி யிருந்தது!
வெள்ளக் காட்டினுள் விழிகள் மூழ்கின!
இதழ்கரு கிற்று! நுதல்ஒளி இழந்தது!
பதைக்கும் நெஞ்சொடும் பறக்கும் உயிரொடும்
ஆடுகள் தம்மைக் குடிலுக் கோட்டினள்!

ஐயை.

ஆடுகள் வயிறோ அரைநிறை வயிறு!
வாடித் திரும்பிய ஐயையை
ஓடிவந் தணைத்தாள் முதியோள் ஒருத்தியே!



## 2

ஐயை யெனுமோர் அடிமைப் பேதை
இருக்கின் றாளா? இறந்தா ளாவென
ஒருவரி - வேண்டா - ஒருசொல் லாகிலும்
எழுதா திருந்திட என்பிழை செய்தேன் ?

முதியோள், ஐயை தந்தையின் மூத்தாள்!
எதிரும் முதுமையில் கணவனை இழந்தவள்!
தம்பியின் மகளொடும் தன்னொரு மகனொடும்
வம்ப மாக்கள் பார்வையில் ஒதுங்கி,
ஊர்ப்புற மருங்கில் ஒருதனிக் குடிலில்

சீர்நிலை திரியா வாழ்க்கை செய்தாள்!
மறியும் நிரையும் கணவனின் வைப்பே!
அரைவயி றுற்றி முதியளும் ஐயையும்
ஒருமா மகனை உயர்நகர் தன்னில்
பெருநிலைக் கல்வி பெறுதற் குய்த்தனர்!

பெற்றோர் இழந்த பொற்றொடி ஐயைக்கு
உற்ற உறவெல்லாம் அத்தை ஒருத்தியே!
மகனுக்கு ஐயையை மணங்கொள நினைத்துப்
பகலும் இரவும் தெய்வம் பரவி
ஐயையைக் கண்ணென அருமையாய் வளர்த்தாள்!
மெய்குளிப் பிப்பாள்; மேனி தேய்ப்பாள்!
உடையெடுத் துடுப்பாள்; ஈர்ந்தலை உலர்த்துவாள்!
பெடையெகி னம்[1]போல் நடக்கும் பெற்றியை
விழியகற் றாமல் உவந்து வியப்பாள்!
பழிமே வாமல் பாவையைக் காத்தாள்!
மகற்கும் அவட்கும் மணநாட் போதில்
தருசீர் வழங்கிடத் தனிப்பொருள் சேர்த்தாள்!
விழிப்பினும் உறக்கத்தும் வினைசெய் பொழுதினும்
களிப்பினும் துயரினும் கன்னியும் மகனும்
விழியிலும் நெஞ்சிலும் வீற்றே இருந்தனர்!
மொழியக் கேட்பின் ஐயையின் மொழியே!
கிளியுங் குயிலும் கிறக்கம் கொள்ளாள்!
களிமொழி தன்னுரை கள்ளாய் அருந்தினன்!

1. எகினம் – அன்னம்.

*இரவில் அவளோ டின்துயில் கொள்வாள்!*
*கரவு நினையாள்! கனவின் வாழ்ந்தாள்!*
*ஐயை முகமலர் வாடுவாள் ஆயின்*
*மெய்நடுக் குறுவாள்! மேனி அணைப்பாள்;*
*நெற்றி நீவுவாள்; நிலாமுகம் தன்னை*
*ஒற்றி உவப்பாள்; உகுநீர் துடைப்பாள்!*
*காலையில் ஆப்பால் கறந்தருந் துவிப்பாள்!*
*மாலையில் பால்நெய் அடிசில் தருவாள்!*

*அன்றவள் ஐயை அழகொளிர் முகத்தில்*
*துன்றும் வருத்தத் தோய்வைக் கண்டாள்.*
*காரணம் என்னெனக் கனிவாய்க் கேட்டாள்!*
*"ஊரும் நினைவொரு கோடி; உண்மையில்*
*அத்தான் ஒருவரே அத்தனை நினைவிலும்*
*வித்தாம்" என்றாள்! அத்தை வியந்தாள்!*
*நாணிய முகத்தை முதியவள் நிமிர்த்தி*
*ஆணிப் பரல்நகை அள்ளிப் பருகினாள்!*
*"அத்தான் வரவினும் எத்தனை ஆண்டுகள்*
*செத்துப் பிறப்பேன் அத்தை?" என்றிட,*
*சுருங்கிய விழியால் முதியவள் சிரித்து*
*நொறுங்கிய ஆடிபோல் திரைமுகம் நொடித்தே*
*"இன்னே அவன்வரின் என்செய் வாய்?" என*
*"முன்னரும் நில்லேன்; முகமும் பாரேன்;*
*உங்கள் முதுகினில் ஒடுங்குவேன்" என்றாள்!*
*திங்கள் முகத்தின் தீதிலா அன்பை*

முதியவள் உளத்தால் மொண்டு பருகிப்
"புத்தாய்ச் செய்தி ஒன்று புகல்வேன்;
ஒப்பிய நின்னுளத் துறைவோன் இன்னும்
முப்பது நாள்களில் வருவதாய் முடங்கல்
இன்றே எழுதினான்; இதோ பார்!' என்றிட;
கன்றெனத் துள்ளிக் கைகளாற் பறித்து
நனைவிழி ஒற்றி நடுக்குறப் பிரித்துப்
புனையா ஓவியம் போல்அதைப் படித்தாள்!
கண்களில் முத்தாய்க் கண்ணீர் கழன்றது!
பண்புறு பாவை படிவமா நின்றாள்!

முதியோள் நெருங்கி ஐயையின் முகத்தை
விதிர்ப்புற நீவி, "வீணே வருந்துதல்
அழகிலை அம்மா; அருந்துயர் ஏ" னென
"எழுதும் மடல்கள் எல்லா வற்றிலும்
ஐயை யெனுமோர் அடிமைப் பேதை
இருக்கின் றாளா? இறந்தா ளாவென
ஒருவரி – வேண்டா – ஒருசொல் லாகிலும்
எழுதா திருந்திட என்பிழை செய்தேன்?
அழுகை ஒன்றே ஆறுதல்!" என்று
விழிநீர் பெருகிட ஐயை உரைத்ததும்
'பழியிலை பெண்ணே! விளைவுறுப் பையல்!
நாம்படு வருத்தம் நன்கறி வானோ?
ஆம்பல் விழியே அழேல்' என் றடக்கி,
ஆநிரை கறந்து கொட்டில் அடைத்துத்

*தூநிறை விளக்கம் துலங்க ஏற்றி*
*நொய்க்கொழுஞ் சோற்றில் நெய்விட் டளவி*
*ஐயைக் கிட்டுத் தானும் அருந்தி*
*முன்றிலிற் காய்ந்த முழுநிலா வொளியில்*
*அன்றிலை அமர்த்தி "ஐயை! உன் அத்தான்*
*எழுதிய முடங்கல் எனக்கே ஆகலின்*
*கொழுங்கொடி நின்னைக் குறித்திலன் போலும்!*
*ஒன்றுகாண் உண்மை; உனக்கென எழுதின்*
*'ஒன்றிய உளமே! உயிரே' என்று*
*பலபடப் புகழ்ந்து பதைப்புறும் உனக்குச்*
*சிலபல எழுதிச் சிரித்திட வைப்பான்!*
*இனிவரின் உனக்கே எழுதிடச் சொல்வேன்;*
*தனிநான் இனி"யெனத் தகவுற மொழிந்தாள்!*
*இளம்பூங் கையால் இவள்வாய் பொத்தி*
*'உளத்தின் தெய்வமே உரையேல் அவ்வுரை;*
*என்பிழை பொறுப்பீர்' என்றுரை சாற்றிப்*
*புன்கணீர் கடைவிழி புலர்ந்திட அத்தையின்*
*உள்ளுயிர் அன்பை எண்ணி உவந்தாள்!*
*கள்ளவிழ் கோதைக்குக் கதைபல கூறி*
*உட்குடில் புகுந்தார் உறங்க;*
*நட்புறு நன்னாள் நினைந்தாள் நங்கையே!*

## 3

உயிரைப் பிசைந்த தீக்கனா உறுத்த
செயிர்ப்புற வருந்தி உறக்கம் செகுத்தாள்!

அத்தையின் அன்பை ஐயை எண்ணினாள்!
தித்தித்த துள்ளம்! திரும்பினாள்; புரண்டாள்!
அத்தான் நினைவு மீண்டும் அண்டிடப்
புத்துணர் வுற்றாள்; பொங்கிட உயிர்த்தாள்!
முன்னே உள்ள முப்பது நாட்களும்
என்னே கழியும் எனநினைந் தயர்ந்தாள்!

"கழிந்த நாளெலாம் கண்ணீர் நாட்களே!
ஒழியா நீள்நொடி ஒன்றொன் றொன்றென
ஏகிய பின்றை இருபொழு தொழிந்து
போகா நாட்கள் முப்பதும் போகுமுன்
சாகா திருப்பினென் சாகா மருந்தை
ஆகங் குளிரக் கண்களால் அருந்துவேன்"
என்று நினைத்தாள்; இருவிழி நனைந்தது!

"என்று திருமுகம் எதிர்ப்படும்? இருவரும்
மன்றலிற் குந்தும் மணிநாள் என்றோ?
என்றனை அவருக் கீயுநாள் என்றோ!
கலையகத் தருந்திய கல்வி முற்றும்
அலைமிகும் உளத்தோ டவரொடு பகிரும்
திருநாள் வருமோ? என்துயர் தீருமோ?
ஒருநா ளாகிலும் உயர்ந்த தோளையும்
அழகு முகத்தையும் அள்ளும் விழியையும்
பழகு நெஞ்சையும் பார்த்துக் கொண்டே
பொழுதைக் கழிப்பனோ? பொல பொல வென்று
பழுதறும் அன்புரை பகருவேனோ?
இருகை பயன்பெற வெண்சோ றிட்டே
ஒருகை வழிந்திட ஆநெய் ஊற்றி
அளாவி அவர்வாய்க் கன்பொடும் அருத்திக்
கனவின் நினைத்ததை நனவிற் காண்பனோ?
தெய்வமே அவருடல் தீதுறா திருக்க
மெய்யடி யாளை அவருடன் பொருத்துக!"
எனப்பல எண்ணி ஏங்கினாள் ஐயை!
நினைவால் நெஞ்சம் நிறைந்து சோர்ந்தபின்
ஐயை உறங்கினள்; கனவொன் றலர்ந்தது!


வெய்ய கனவில் செம்மலும் வந்தான்!
நாணி ஒடுங்கி, நங்கை நின்றாள்!
காணுதல் இன்றிக் காளை நகர்ந்தான்!
தோகை அவனைத் தொடர்ந்துபின் சென்றாள்!
பாகியல் மொழியைப் பார்க்கவும் வெறுத்து
நெடுங்கிளை மகிழ நிழலடி அமர்ந்தான்!
ஒடுங்கிய உளத்தொடும் உயிரொடும் உரையால்
நடுங்கிய வாயொடும் நலிந்த உடலொடும்
தொடங்கிய காதல் இசையினைத் துணித்தான்!
அழுகை பொங்கிட அவனடி வீழ்ந்து
தொழுத கைளால் அவனுடல் தொட்டாள்!
வலிந்த கைகளால் அவள்கை வாங்கி
மெலிந்த கொடியுடல் மேல்விழத் தடுத்தான்!
ஊற்றாய்க் கண்ணீர் உகுத்தனள் பேதை!
ஆற்றா மைக்கே அவன்சற் றிரங்கி,
"வேண்டுதல் என்"னென, வேய்குழல் அவன்பால்
ஈண்டிய காதல், நெஞ்சினை இறைத்தாள்!
'பொய்நின் அன்'பெனப் புகன்றான், புழுப்போல்
ஐயை துடித்தாள்; 'ஆவியும் மெய்யும்
நீயே' என்றாள்; நெஞ்சு நடுங்கினாள்!
'வாய்மை உளத்தை வகிர்ந்துபார்' என்றாள்!
'மெய்யோ காதல்' எனறான்; மின்னிழை
'தெய்வமே கரி'யெனத் தேம்பி யழுதாள்!
'நம்பினேன் உனை'யென நம்பி உரைத்தே
அம்பொன் மணித்தோள் அணைத்துயிர் நிறுத்திக்
கருங்குழல் நீவியும் கண்மலர் பொத்தியும்,
பெருங்கதை பேசியும் பிணைந்துடன் பாடியும்,
மடுப்புக வாடியும் மலரிதழ் முத்தியும்,
வடுப்படக் கிள்ளியும் வளைநுதல் தடவியும்,
உள்ளம் ஒன்றிய உறவோன் பின்னைக்

கள்ளவிழ் மகிழக் கடிமலர் உகுத்துத்
தொடையல் தொடுத்துத் தோகைக்குச் சூடக்
கடைக்கணால் அழைத்தான்; கன்னியும் நெருங்கினாள்.
அக்கால் ஒருத்தி அவரிடைப் புகுந்தே
தக்கவா றவன்கை தடுத்து, 'மலரினைத்
தன்குழல் சூட்டுக' என்றாள்! தகவிலான்
மின்னொடிப் பொழுதில் அவள்குழல் மிடைந்தான்!
மிடைந்த பின்றை மின்னிழை தானும்
கடைநெறி யாளனும் காவின் நுழைந்து
மறைந்தனர். ஐயை மனந்தீப் பற்ற
அறைந்துகொண் டழுதாள்; அலறி எழுந்தாள்.

கண்ணீர் முத்தம் கழன்றுகொண் டிருந்தது!
உண்ணேர் ஆவி உழன்றுகொண் டிருந்தது!
குருதி உறைந்தது; நெஞ்சு குமைந்தது!
பெருந்தீப் பற்றி ஊரெலாம் பிழைக்க
அத்தீ நடுவில் அவளே ஒருத்தி
சிக்கித் தவிப்பதாய் நினைவு சிலிர்த்தது!
முதியோள் அவள்மருங் குறங்கினாள்; வெளியே
அதிர அலறியது ஆந்தை ஒன்று!
சுவர்க்கோ ழிகளின் சுள்ளென் ஓசை
அவலச் சூழற்கு அருந்துணை நின்றது!
வானத் தெங்கோ மின்னிய மின்னல்
கூனற் கூரையின் குறுகிய பொத்தலில்
ஒளிர்ந்து தேய்ந்தது! இடிசிதர்ந் தொலித்தது!

தொலைவிலோர் தனிநாய் தொண்டை கிழிய
ஊளை யிட்டது! கழுத்துமணி ஒலிக்கக்
காளைகள் இராப்புல் அருந்தக் கத்தின!
ஐயை பாயலில் அசைவறக் கிடந்தாள்!
மெய்நனி நனைய கண்ணீர் மிதந்தது!

உலகத் தவளே ஒருதுணை யின்றி
அலகிலாத் துயரில் ஆழ்ந்து கிடப்பதாய்
எண்ணி நடுங்கினாள்! இறந்த அன்னையின்
தண்ணிய முகத்தையும் தந்தையின் முகத்தையும்
என்றும் கண்டிலள்! இவளை ஈன்றதும்
அன்னை இறந்ததாய் அத்தை உரைத்துளாள்!
பின்னை தந்தையும் நோயுறப் பிரிந்தார்!
தன்னை அத்தை அன்பினால் தாங்கினாள்!
அத்தையும் பிரிந்தால் ஆர்துணை யென்று
முத்தவாய் அரற்றி மொய்குழல் அழுதாள்!
உயிரைப் பிசைந்த தீக்கனா உறுத்த
செயிர்ப்புற வருந்தி உறக்கம் செகுத்தாள்!
விடியா இரவை வெட்டி வீழ்த்திடத்
துடியாய்த் துடித்தாள்; உள்ளுயிர் துவண்டாள்!
காலை மலர்ந்ததும் கனாச்சுமை
ஓலத்துக் கரைக்க உளமுருகினளே!



## 4

நெடுநகர்ப் பாதை நீள்விழி நோக்கிப்
படுகண் ணீரவள் பாதம் நனைப்பவும்
குழல்புரண் டலையவும் கொடிக்கம் பூன்றி
அழல்மெய் யகத்தினுள் அமர்ந்திருந் தாளே!

விடிந்ததும் ஐயை ஒடிந்த நெஞ்சொடும்
மடிந்த காலொடும் மடியா அன்பொடும்
நிழலி னசையுமோர் மந்திர நிழலென
குழல்நெய் நீவாது குடிநீர் பருகாது

முதியோள் நன்முகம் முகம்படக் காணாது
நொதியும் நினைவினால் உள்ளுயிர் நோன்றாள்!

அத்தையும் அவள்முகத் தவலங் காணாது
செத்தையும் சருகும் சேரக் கூட்டிக்
கொட்டில் நிரைகளைக் கட்டவிழ்த் திட்டுப்
பட்டி பெருக்கிப் பாலறக் கறந்து,
கூரையிற் படர்ந்த சுரைக்காய் துணித்து,
மோருறக் கடைந்து, முன்றில் வந்தே
ஐயையை நோக்கினாள்; ஐயை காணாள்!
கைகள் சோர்வுறக் கால்நடுக் குற்றாள்!
அடைத்துக் கிடந்த ஆடுகள் ஆண்டில!
"புடைத்துத் தூற்றிய போக்கிலிக் குட்டி,
கூறிக் கொளாமலே குன்றேகின"ளென
மாறி யுரைத்த மனங்கொளல் இன்றிக்
கறந்தபால் காய்ச்சிக் கலயத் தெடுத்துப்
பறந்தாள் நிலாமுகப் பாவையை நாடி
இடைவழி ஆடுகள் எதிர்ந்தன எனினும்,
படைநெடுங் கண்ணைப் பார்க்கிலா திடிந்தாள்!

"ஐயை! ஐயை! ஐயை!" என்று
மெய்படக் கூவி, மேனி நடுக்குறக்
குவடுங் குன்றின் கொடிவழி வாரமும்
அவணுறு சுனைகளும் அலைந்தும் ஐயையைக்
காண்கிலா துள்ளம் கவலுறக் குன்றின்
சேண்படு பெருங்கல் சேர்ந்தனள்; ஆங்கே
நெடுநகர்ப் பாதை நீள்விழி நோக்கிப்
படுகண் ணீரவள் பாதம் நனைப்பவும்
குழல்புரண் டலையவும் கொடிக்கம் பூன்றி
அழல்மெய் யகத்தினாள் அமர்ந்திருந் தாளே!

பதைப்புறு முதியோள் பக்கத் தோடி
'சிதைவிலாப் படிவமே! செய்யபொன் னுருவே!
துணிந்தனை கொல்லோ! தூய்மை உள்ளமே!
அத்தை ஒருத்தியும் அகற்றினை கொல்லோ!
செத்தபின் அன்றோ சாகாத் திருவே
உன்றனைத் துறப்பேன்; என்னிடம் உரையா
ஒன்றும் உண்டுகொல்! உயிரே உரை'யெனக்
கூவி யழுதாள்! குழலியும் அழுதாள்!
ஆவி உருகிய அத்தை மடியினில்
நிலாமுகம் புதைத்து நீள விசும்பினாள்!
'எலாரும் போயின பின்றைஇவ் வேழையை
ஏன்தனி வளர்த்தீர் அத்தை'யென் றழுதாள்!
'அன்புறு மகளே! அவ்வாறு உரையேல்
என்புது துயர்வர இடிந்தனை இயம்' பெனத்
தன்பழங் கையால் தாவியணைத்தே
என்பு நெகிழுற இரங்கிக் கேட்டாள்

கொட்டுநீர் விழியால் குமைந்த பின்றை
நெட்டுயிர்ப் போடு கனவின் நேர்ச்சியும்
அத்தான் அடிவீழ்ந் தன்புக் கிரந்ததும்
ஒத்துக் கொளாதவன் பின்னுளம் ஒத்ததும்
அதன்பின் இருவரும் ஆடிப்பா டியதும்
புதுமகிழ் மாலை பூங்கை தொடுத்ததும்
அதுதன் குழலுக் கமையச் சூடாது
இடையில் வந்தாள் ஒருத்திக் கிட்டதும்
மடைதிறந் ததுபோல் கண்ணீர் மடுத்தே
மெய்நா நடுங்க மின்னுடல் வாட
ஐயை அவள்துயர் அத்தைக்கு மாற்றினாள்!

கொடுங்கனா முதியோள் கூர்ந்து கேட்டுளம்
நடுங்கினா ளெனினும் நாநடுங் காமல்
'அடி, சிறு பேதையே! அழகும் இளமையும்
குடிகொண் டுள்ள குமரிப் பெண்டிர்க்கு
இதுபோற் கனவுகள் இயற்கையே' என்றும்
'அதுமற' என்றும் ஆறுதல் அளித்தாள்!
ஐயை தாளாது அக்கனா நேர்ச்சியின்
மெய்ப்பொருள் என்னென மேலும் வினவினாள்!
பொய்ப்பொருள் ஒன்றைக் கூறிப் பூவையைத்
தேற்றினா ளாயினும் தேர்ந்த உண்மைக்கு
ஆற்றாது உள்ளம் அழுங்கினாள் முதியோள்!

பெருஞ்சித்திரனார்,


*அதன்பின் அத்தை ஆற்றியும் போற்றியும்*
*மதுமலர்க்குழலியைக் கெஞ்சியும் கொஞ்சியும்*
*ஆப்பால் அருத்தி சிறுபொழு தளாவித்*
*தாய்போல் முகத்தைத் தாங்கி நிறுத்திப்*
*பச்சை வாயால் பவள இதழ்மேல்*
*இச்சிச் சென்றே ஏழெட்டு முத்தம்*
*தந்தவள் துயரமும் தணியக் குழைந்து*
*செந்தா மரைமுகம் சிரிக்கச் சென்றாள்!*

*அத்தை சென்றதும் அந்தியின் இருள்போல்*
*அத்தானைத் துயரும் அவள்தோள் படர்ந்தது!*
*இருப்பினும் அவன்மேல் இருந்தநம் பிக்கை*
*ஒருமை உளத்துடன் ஓங்கி நின்றது!*

*நாட்கள் நகர்ந்தன; நங்கையின் உள்ள*
*வேட்கையும் வளர்ந்தது! வரவுநாள் விரும்பி*
*விழிமலர் நகர்வழி வெறித்து நோக்கிடும்*
*பழியறு நெஞ்சம் பலபடப் பறக்கும்!*
*மெய் மிக மெலிந்து பொன்னிறம் மேயும்!*
*தொய்விடை மார்பகம் விம்மிடத் தொய்யும்!*
*அத்தை காத்த அன்னையின் அணிகளில்*
*முத்துத் தொங்கலும் முன்கை வளைகளும்*
*விண்மீன் என்ன விளங்குமுக் கணியும்*
*கண்ணைச் சிமிட்டிடுங் காதுக் கம்மலும்*

மணிக்கால் தண்டையும் மகிழ்வுறக் கொடுத்தே
அணிந்திட அத்தை சொன்னதால் அணிந்தாள்!

நாளும் குன்றம் நாடுவாள்; அழகுறும்
வால்வெண் கற்களை எண்ணி வருவாள்!
இளையோன் வருநாள் எதிர்ந்தது!
வளைகுலுங் கிடஅவள் வழிநின் றனளே!



## 5.

காதலுக் கேங்கிய கன்னி
சாதலுங் காணாள்; சார்ந்தது துயரே!

அவனே செம்மல்! இளமான் தோன்றல்!
கவ்வும் கலைவிழி! கற்பனை உள்ளம்!
இளநகை மொய்க்கும் ஈரிதழ் கனிவாய்!
வளம்படு நெடுந்தோள்! வடித்தகூர் மூக்கு!
எடுத்த பெருநடை! இனியநேர் நோக்கு!
படுத்துப் புரளும் பரந்தநல் மார்பு!

காளையின் மொய்ம்பு! களிற்றின் பெருமிதம்!
வாள்நெடுங் கண்ணிக்கு வந்தநல் விருந்தாய்
அவனெதிர்ப் பட்டான்! ஐயையும் அத்தையும்
துவளா நடையினன் தூக்கிய பொருள்களை
ஓடி வாங்கி உட்குடில் வைத்தனர்!

தேடிய செல்வம் திரண்டுமுன் வந்ததால்
ஐயை உள்ளமும் ஆவியும் அன்பும்
மெய்ம்மலி யுவகையும் மீளக் கண்டாள்!
இடையிடை நடந்த இவள்நெடுங் கண்களும்
அடையா இமைகளின் அழகியோன் கண்களும்,
எதிரெதிர்ப் பட்டுத் தெறித்தன! ஏந்திழை
புதிரென் இளமைக்குப் புதுப்பொருள் கண்டாள்;

ஆமடி வற்றக் கறந்தவற் களிப்பதும்,
தூமலர் கொய்து மாலை தொடுப்பதும்,
ஆட்டு மறியினை அன்போ டணைப்பதும்,
கோட்டிலை வாங்கால் தழைகள் குவிப்பதும்,

தண்டைச் சிலம்பொலி தாவிட நடப்பதும்,
கொண்டையும், பனிச்சையும், குழலும், பின்னலும்
என்று பலவா றிருங்குழற் புனைவதும்,
நின்றவன் நகர்க்கதை நிகழ்த்தக் கேட்பதும்,
கற்றவை அவன்பால் கருத்தொடு மடுப்பதும்,
குற்றுநெல் புடைப்பதும், குறும்பா விசைப்பதும்,
பண்ணியம் பலவும் பண்ணி அன்போடு
உண்ணக் கொடுப்பதும், உண்பதை மகிழ்வதும்,
ஏடு கொணர்வதும். எழுதுகோல் ஈவதும்
பாடெனக் கேட்க, பாடி யிருப்பதும்,
சுனைநீர்க் கொணர்வதும் சுள்ளியாற் காய்ந்த
வெந்நீர் மேனிக்கு விளாவிக் கொடுப்பதும்,
பொன்னுடல் கண்டுளம் பூரித் திருப்பதும்,
மின்னென மானென மீனெனத் திரிவதும்
அத்தான் கண்முன் அடிக்கடி மேய்ந்த
முத்து நகைச்சியின் மொய்ம்புக் குறும்புகள்!
செம்மல் வந்தபின் சிட்டாய்ப் பறந்து
தன்கை வேலையைத் தானே முடிப்பதை
அத்தையும் அறிவாள்; அகமகிழ்ந் திருந்தாள்!
எத்திறத் தானும் பொருத்தமென் றெண்ணினாள்!

ஓரிரு நாட்கள் இவ்வா றொழிந்தன.
நேரிழை குன்றம் நினையா திருப்பதை
ஒருநாள் அத்தை உணர்த்தி "ஒண்டொடி!

திருநாள் போலும் திரிந்தனை; ஆடுகள்
மேய்ச்சல் இன்றி மேனி இளைத்தன!
ஓச்சிக் கொடுபோ'' என்றவட் குரைத்தாள்!
ஐயையும் இசைந்தாள் அரைமனத் தோடு!

கைக்கழி எடுத்தாள்; கட்டிய மறிகளைக்
குன்றுக் கோட்டினாள்; போகுமுன் கோதை
வென்றவன் தன்மேல் வேல்விழி பாய்ச்சினாள்!
ஐயை சென்றபின் ஆளனும் சென்றான்!
மைப்பெருங் கல்மேல் மங்கைசென் றமர்ந்தாள்!
ஆடுகள் மேய்ந்தன! அமைதியாய்; அவள்முன்
பீடுறுங் கல்விப் பெருமகன் நின்றான்!

ஆளன் வரவை அறிகிலா திருந்த
வாளமர் கண்ணிக்கு வரவை உரைக்க,
"ஆழ்ந்த எண்ணமோ ஐயை!" என வினவ,
சூழ்ந்த தனிமையை எண்ணி, சுடர்தொடி,
நாணி நின்றனள்; நாளெலாம் அவன்பால்
மாண்பெருங் காதலைக் கூறும் மனத்தவள்
ஒருசொல் தானும் உரைக்கிலா திருந்தாள்!
"மறுசொல் கூற மறுத்தனை போலும்"
என்றவன் இயம்ப, ஏந்திழை அஞ்சி
நின்றவன் நோக்கினாள்! நீர்விழி நிறைந்தது!
ஆயிரம் கூறிட அவள்நா துடித்தது!
வாய்திறந் தொருசொலும் வாராது நின்றதே!
இருப்பினும் தன்னுளத் திருத்துயிர் நிறுத்திய
விருப்பெலாங் கூட்டி, அச்சம் வீழ்த்தி,

அன்பெலாங் குழைத்தே 'அத்தான்' என்றாள்!
என்பெலாம் உருக்கிய இச்சொல் அவன்செவிப்
பட்டதும் உள்ளம் பனியெனக் குளிர்ந்திட
"விட்ட நெடுங்கதை வேண்டுமோ?" என்றான்.
வேண்டா வெனத்தலை யாட்டி விளக்கினாள்!
"நீண்ட புதுக்கதை நிகழ்த்தவா" என்றான்;
அதனையும் வேண்டா வெனத்தலை யாட்டினாள்!
"இதுகேள் ஐயை, எந்தமிழ் காக்கவும்
இந்நிலம் புகுத்திய இந்தியை விரட்டவும்
என்னருந் தோழரும் யானும் நிகழ்த்திய
நெடும்போ ராட்டமும் நேர்ந்த செயல்களும்
கொடுங்கோ லாணையின் காவலர் கொட்டமும்
படிப்படி யாகப் பகரவா?" என்றான்.
பிடிப்பிலாப் பேச்சில் பேதை வருந்தி
முத்தவாய் திறந்து முறுவல் காட்டி,
"அத்தான்' நீங்கள் அன்பைப் பற்றியே
அறிகிலீர் போலும்!" என்றாள்.

— அவனோ
குறிப்பினை உணர்ந்து கொண்டான் எனினும்
"ஆருடை அன்பை? அன்னை அன்பையா
கூறு கின்றனை?" என்றிடக் கோதை
"அத்தை தம்மின் அரும்பெறல் மகன்மேல்
வைத்துள அன்பும் அவர்பால் வைத்த
உங்களின் அன்பும் உணர்வேன்; ஆனால்
உங்களைப் பற்றியே ஓயாமல் எண்ணி
உள்ளமும் உயிரும் உடலும் வாடி,
கள்ளமில் அன்பைக் காதலாய் வளர்த்துத்

தேனும் பாலும் தேக்கிப் பிசைந்த
ஊனுங் கொள்ளாது உறக்கமும் இன்றி,
இனிவரும் நாட்களை எண்ணி எண்ணியே
பனியினுங் குளிரினும் வெயிலினும் சாகாது,
பிழைத்துக் கொண்டுள பேதை ஏழையின்
தழைத்த அன்பினை உணர்வீரா?'' என்று
மடமட எனநீர் மல்கிடப் பொழிந்தாள்!
கடகட வென்றே காளை சிரித்து
''நன்றே அறிகுவேன் நான்'' என உரைத்தான்!
''உண்மையா? அவள் பெயர் உரையுங்கள்'' என்னத்
''தும்பை'' என்றனன்! தோகையின் நெஞ்சில்
அம்பொன்று வந்தே ஆழப் புதைந்தது!
வல்லிடி தலைமேல் வந்து வீழ்ந்ததே!
எல்லாப் பொருள்களும் இவள்முன் சுழன்றன!
நாடி தளர்ந்தது; நாளம் வெடித்தது!
ஓடிய குருதி உறைந்து நின்றது!
சுழிவெள் ளத்துச் சூரு வளியென்
விழிசுழன் றிருண்டது! ஐயை வீழ்ந்தாள்!
காதற் கேங்கிய கன்னி
சாதலுங் காணாள்; சார்ந்தது துயரே!



# 6

கொட்டிய சொற்களால் கோதையும் அவனும்
வெட்டுப் பட்ட விளரிள மான்களாய்
உள்ளமும் உடலும் உயிருந் துடித்தனர்.


விழிமலர் மலர்கையில் விரித்த பாயினில்
பழியறி கிலாத பைங்கொடி கிடந்தாள்!
முதியோள் அண்டையில் முழங்கை யூன்றி
விதிர்ப்புற இருந்தாள்! வெளித்திண் ணைமேல்
செம்மல் இருந்தான்; சென்ற நிகழ்ச்சியை

வெம்மை நெஞ்சம் நினைத்து வெடித்தது!
வெம்பிய உயிரின் விசையெலாங் கூட்டி
'அம்மா!' வென்றே அரற்றினாள் ஐயை!
'கண்ணே உயிரே! கலைவளர் திருவே!
என்னே அம்மா!' என்றனள் அத்தை!
ஒண்டொடி பேசவும், உள்ளே வந்தான்,
திண்டோள் செம்மல்! தீதிலா மங்கை
அத்தை மடிமேல் தலைபுதைத் தழுதாள்!
அத்தையும் அழுதாள்! ஆளனும் அழுதான்!

குடிலிற் சாவொலி குடிகொண் டிருந்தது!
துடிதுடித் தந்தத் தோகை அழுதலைக்
கண்டதும் செம்மல் கண்ணீர் சாய்த்தான்!
பெண்மையின் காதற் பெற்றியை வணங்கினான்!
ஆயினும் தும்பை எனுமோர் அழகி
தூயதன் உளத்தில் முன்பே தோய்ந்ததால்
ஐயையின் காதலுக் கணையிட முயன்றான்!
பொய்யிலா அன்பைக் கண்டு போற்றினான்!
என்னினும் உளத்தை இரண்டாய்ப் பகுத்துப்
பொன்னி னல்லாட்குப் பகுத்திடல் புரையெனக்
கண்டான் ஆதலின் காதல் இளம்புரு
விண்டு விளக்கிய அன்பினை விலக்கினான்!

அமைதியைக் கிழித்தே அவன்தாய் அவனிடம்
"குமைவுறும் காதற் குயிலைப் பாரடா!
உன்னையே எண்ணி உயிர் வாழ்ந்திருக்கும்
கன்னி அன்றிலைக் கண்ணுற் காணடா!
வராப் பொழு தெல்லாம் வாழாப் பொழுதென
இராப்பகல் வெதும்பிய இளமயில் தன்னை-
காத்துக் கிடக்கும் காதல் நினைவினால்
பூத்துக் கிடக்கும் பூங்கொடி தன்னை-
ஆடிக் கிடந்த அன்புறு நெஞ்சினால்
வாடிக் கிடக்கும் வளர்கிளி தன்னை-
கூவிய பூங்குயில் காதற் குலைவினால்
சாவின் மடியிற் சாயும் நிலையினை-
உற்றுப் பாரடா மகனே! ஊழினால்
பற்றுத் துறந்தும் படர்உற விகழ்ந்தும்
உறுதுணை துறந்தும் உயிர்துற வாமல்
நறுவாழ் வுங்கட்கு நாட்டும் நோக்கினால்
இதோ, கிடக் கின்ற இவளுக் காகவும்
உதோ, நிற் கின்ற உன்றனுக் காகவும்
உடலங் குலைந்தும் உளங்குலை யாமல்
கிடக்கும் இந்தக் கிழவியைப் பாரடா!
பார்த்துப் பார்த்துப் பதைப்புற நின்றழு!
ஆர்த்துப் பறந்த அன்புப் புருவின்
சிறகைத் துணித்த செயலுக் காகவும்,
உறவை உதறிய உன்றனுக் காகவும்,
அழவேண் டும்,நீ! அழவேண் டும்" என,
அழுகையும் சினமுமாய் அன்னை கதறினாள்!

கொட்டிய சொற்களால் கோதையும் அவனும்
வெட்டுப் பட்ட விளரிள மான்களாய்
உள்ளமும் உடலும் உயிரும் துடித்தனர்!
முள்ளெனும் சொற்களால் முதியவள் மீண்டும்
"இறுதியாய் உனக்கொன் றியம்புவேன்; இதுகேள்;
உறுதி இவ்வுரை; இவளை நீ உளங்கொள
மணந்து கொள்வை யாயினென் மகன், நீ!
தணந்து கைவிடில் தாயுனக் கலள், நான்;
செல்வியை மணம்பெறும் எண்ணச் சீர்மையால்
கல்வி புகட்டினேன்; வயிற்றைக் கட்டினேன்.
படித்துத் தேறினை; பகட்டில் மயங்கினை;
'துடிப்புற என்பால் தும்பை எனுமொரு
சிறுக்கியை மணப்பதாய்ச் செப்பினை; ஆங்கெனில்
இறுக்கிக் கொண்டேன் என்னுளம்; எழுந்துபோ!
நானும், நான் தேடிய நால்வகைப் பொருள்களும்
ஈறு மகனென இதோ, ஈங் கிருக்கும்
ஐயைக் களித்தேன்; அகலுக, நீ" யென
வெய்ய உரைத்தாள்! விசிய வேல்போல்
தாவி நடந்தான் தனிமகன்!
ஆவி போனதா அலறினள் ஐயையே!



# 7

பொற்புறு காதல் மெய்ம்மையைப் போற்றும்
கற்பின் பெருமையைக் காறி உமிழ்ந்தாள்!

பாடிய பெடைக்குயிற் கம்பு பட்டதாய்,
ஆடிய மயிற்குக் கால்முறி வானதாய்,
ஐயையின் காதல் அடியற வீழ்ந்தது!
ஐயை அணிந்த அணிகள் அகன்றன;
மெய்மெலி வுண்டது; மேனி பசந்தது;
நெய்குழல் மறந்தது; விழி,மை துறந்தது!

கைதொடி நெகிழ்ந்தது! காற்சிலம் பகன்றது!
ஐவனம் உகிரும் அங்கையும் அற்றன!
அம்பொன் சீரடி அணிநடை மறந்தது!
செம்பொன் சிறுகுடம் ஒளிமழுங் கிற்று!
கொட்டிலில் ஆக்கள் கட்டிக் கிடந்தன!
பட்டியில் ஆடுகள் படுத்துச் சோர்ந்தன!
எருவும் நீரும் இரண்டறக் கலந்து,
நடவுறும் வயலெனக் கொட்டில் உளைந்தது;
காய்த்த சுரைக்கொடி காயொடு காய்ந்தது!
பூத்த மல்லிகை நிலத்தில் பொலிந்தது!

படுத்த படுக்கையாய்ப் பாவை கிடந்தாள்!
உடுத்த துகிலொடும் உண்ணா வயிற்றோடும்
முதியோள் திண்ணையில் முழங்கால் நீட்டிக்
கொதிக்கும் நெஞ்சொடும் உயிரோடும் குமைந்தாள்!
அடுப்பணைந்திருந்தது. அடிவயி றழன்றது!
எடுப்பிலாப் பொருள்கள் இருந்தவா றிருந்தன!
ஈரிரா இருபகல் அன்பின் இருவரும்
நீரும் பருகிடும் நினைவற் றிருந்தனர்!

வீசிய புயலால் விளைந்த விளைவை—
மாசிலா மங்கை மனத்துயர் தணிந்து,
'தன்னால் அன்றோ தாய்க்கும் மகற்கும்
இன்னல் விளைந்த' தெனநினைந் தழுதாள்!

அவளுளம் அவனை அடைய விழைந்ததும்
துவளும் நெஞ்சுடன் தாயைத் துறந்த
பெரும்பழி கொண்டதும் பிழையென வருந்தினாள்!
துரும்பினும் இழிந்த நிலைநினைத் திடிந்தாள்!
மாற்றிக் கொள்ளா மனத்தோள் ஆகித்
தூற்றப் படுவதை எண்ணித் துடித்தாள்!
மறவா அன்பினை மனங்கொளப் பயின்ற
இறவாக் காதற்கு இளமையைக் கடிந்தாள்;
பிள்ளை நிலைமுதல் பேணி வளர்த்த
கள்ள மனத்தின் காதலை இகழ்ந்தாள்!
பொற்புறு காதல் மெய்ம்மையைப் போற்றும்
கற்பின்பெருமையைக்காறி உமிழ்ந்தாள்!
ஒருநிலைப் பட்ட காதல் உளத்தினால்
பெருநிலைப் படூஉம் பெருமை போகி
இயலா ஒருத்தியால் காதலும் இழிந்த
பயனிலா நிலைக்குத் தன்நிலை பழித்தாள்!
பிறந்ததும் அன்னையைப் பிரிந்து துயருறும்
மறந்த துன்பமும் மனச்சுமை சேர்த்தது!
எண்ணா தனவும் எண்ணி வருந்தினும்
அன்னவன் நினைவே அவளுக் கிருந்தது!

"அத்தான் மனத்தை முழுவதும் ஆண்டோள்
எத்திறத்தாளோ? என்னினும் அன்பை

ஐயை:

வாரிக் கொடுக்கும் வாய்மையி னாளோ?
சீரெழிற் குறையாச் செல்வி யாளோ?
குறிப்பிலா வினைசெயும் குறிப்பி னாளோ?
அறிகிலே னே" என ஐயை ஏங்கினாள்.

செம்மலைப் பற்றிய எண்ணம் சிலிர்த்ததும்
இம்மையில் அவனுளத் தேறி வாழ்தற்கு
இடந்தரா விடினும் இனிவரும் பிறவியில்
திடமாய் இடம்பெறத் தெய்வம் வணங்கினாள்!

"இந்நிலை தன்னிலும் அத்தான் என்றனைக்
கொள்ளேன் என்றுரை கூற வில்லையே!
தும்பை உயர்ந்தா ளாகவே துலங்குக;
தம்புதுக் கேள்வற்குத் தக்கோள் ஆகுக!
அத்தான் உளத்தில் அமர்ந்தோள் ஆதலின்
வெற்றுப் பெண்ணா யிராள்; குல விளக்கே
ஆதல் வேண்டும் தும்பை; அவளைச்
சாத லுறுமுன் காணலும் சரியே!
ஒருநாள் என்றன் உயர்ந்த அன்பினைத்
திருமிக வாய்ந்த தும்பையி னிடத்தே
அன்பொடு கூறி, அத்தான் வாழும்
இன்புறு மனையில் எனக்கோ ரிடத்தைப்
பெற்றுக் கொள்ளினும் பிழையிலை; தும்பை
ஒத்துக் கொள்வதே எனக்குநல் ஊழாம்!
ஆனால் என்னை அடைவதில் அத்தான்
நான்பெறும் மகிழ்வையும் நலத்தையும் பெறுவரோ?
அறிகிலே னே" என ஐயை நினைத்தாள்.

பெருகிடும் அன்புப் பெருக்கினாள் பேதையோள்
இப்படிப் பலவாறெண்ணி மகிழ்ந்தே
அப்படி நடந்தபின் அடுத்து நடப்பதும்
தொடர்ந்து நினைந்தாள்; தோள்கள் சிலிர்த்தன!
இடருறக் கைகளை ஊன்றி எழுந்து
படர்துயர் அறியாப் பாவை
நடந்தனள் முன்றிற்கு அத்தையை நாடியே!



## 8

ஓவா உலகத்து யாரிடம் நான்போய்க்
காவா நிற்பீர்என் அன்பென்று கதறுவேன்!
உய்விலா தென்றன் உயிரினை இறைவனே
நொய்யச் சிதைப்பதில் என்பயன் கண்டையோ!

பாவையும் அத்தையும் படிப்படி யாகக்
தூவிய துன்பச் சூழலை மறந்து
தம்முள் தேற்றித் தம்பணி தொடரினும்
செம்மலின் நினைவும் செய்கையும் பிரிவும்

இருவர் நெஞ்சிலும் இரும்பாய்க் கனத்தன
ஒருவர்க் கொருவர் ஆறுதல் உரைத்தனர்.

ஐயை நாளும் குன்றினை அடைவாள்!
மைப்பெருங் கல்மேல் மனச்சுமை அவிழ்ப்பாள்!
அவன்வர வெண்ணி அடுக்கிய கற்களைத்
துவளுற மீண்டும் எண்ணத் தொடங்குவாள்!
நகரப் பெருவழி மேல்விழி நாட்டுவாள்!
தகவுற விழிவழி நெஞ்சம் தாவியே
குன்றும் காவும் ஊரும் கடந்து
சென்று கல்விக் கழகத்துச் செம்மலின்
நெஞ்சத்துக் குடிபுக நின்று கதறும்!
கொஞ்சமும் அவனுளம் இரக்கம் கொளாதே!
ஆயினும் அவ்விடம் அகலா தவன்கால்
நாயெனச் சுற்றும்! நம்பியும் தும்பையும்
விளையாட் டயர்வதைக் கண்டு வெதும்பும்!
களிப்புறு காதலிற் கன்னியும் அவனும்
பின்னிப் பிணைவதைப் பார்த்துப் பேதுறும்!
நன்னர் அவர்செய் இல்லறம் நயக்கும்!
இறுதியில் ஐயை இருப்பிடந் திரும்பும்!
பரிதியும் சாயும்! ஒருநாள் பறக்கும்!
மறுநாள் மீண்டும் மனத்திரை விரியும்!
உறுபல நிகழ்ச்சியும் உருவெடுத் தாடும்!

ஐயை.

செம்மலை மீண்டும் பார்த்திடத் துடித்தாள்!
வெம்பிய காதலை விளக்கிட எண்ணினாள்!
கண்ணீ ராலவன் கால்களைக் கழுவி
உண்ணே ராவியை அவன்மடி ஊழ்க்க
இசைவு தரும்படி இறைஞ்சி நெஞ்சினைப்
பிசைந்து அவன்கைப் பிழிந்திடக் கருதினாள்!
அப்படிச் செய்யினும் அடியொடு மறுத்தால்
எப்படி யாகிலும் அத்தையோ டிணைத்து
வைப்பதே தனக்கு வாழ்நாட் பயனெனச்
செப்பிய துள்ளம்! காதற் செல்வியும்
ஒப்பினாள்; ஆயினும் ஒருவழி உணராள்!
கொப்பிலாக் கொடியென உடலங் குலைந்தாள்!

ஐயை இவ்வாறு அவனையே நினைந்து
கையற் றேங்கிட அத்தையோ கன்னிமேல்
உள்ளம் வைத்து மெழுகாய் உருகினாள்!
கள்ள மிலாதவள் காதல் கதைக்கே
நெஞ்சு நெகிழ்ந்தாள்! நீராய் உகுத்தாள்!
கொஞ்சுகி லாக்கிளிக் குஞ்சினை நெருப்பினில்
தூக்கிப் போட்ட தூய்மை யிலானை

ஆக்கிப் படைத்த வயிற்றினுக் கழன்றாள்.
எவ்வா றாகிலும் இழந்த வாழ்வினை
ஒவ்வாத் தனிமையை உவகையால் மாற்றிச்
செம்மலின் நினைவு அடியறச் சிதைத்தே
அம்மயில் தனக்கோர் ஆவல் மணாளனைத்
தேடிப் பிடித்துத் திருமணம் செய்து
வாடிய உளத்தைத் தழைத்திட வைப்பதே
தக்கதென் றெண்ணினாள்! தன்னுளக் கருத்தை
ஒக்க அவளிடம் உரைக்கநாள் பார்த்தாள்!
அன்னவர் போக்கிலோர் ஆண்டு பறந்தது!

முன்னர் போர்த்த முழுத்துயர் மூட்டம்
ஒருவா றாக ஒழிந்தது; எனினும்
வெறுவான் போல விலகிட வில்லை!

முதியோள் உள்ளம் முன்னரே துன்பத்து
வதிந்து பழகிய உள்ளம் ஆகலின்
மகன்றன் பிரிவால் மறுகிய நிலைபோய்த்
துகளறு நங்கையின் துயர்க்கே கசிந்தது!
சுவையா இளமை, சூழலால் காய்வதை
எவையினுந் துன்பமா இவள்மனம் நினைத்தது!
கொத்தும் உளத்தின் கோதையின் மொய்ம்பு
தொத்தும் தனிமையால் துவள்வதை விரும்பிலள்!

மொய்க்கும் பருவத்து முத்தவாய்ச் செவ்விதழ்
கைக்கும் தனிமையால் காய்வதை ஒப்பிலள்!
துய்க்குந ரின்றித் தோள்கள் மெலிதலால்
தைக்கும் நெஞ்சு தவிப்பதைத் தாங்கிலள்!
மோப்பா ரின்றித் தூமலர் வாடியே
கேட்பா ரற்றுக் கிடப்பதைப் பொறுத்திலள்!
நுகர்வா ரற்று நுடங்கிடும் மேனி
பகர்வா ரிலாது படுவதைப் பார்த்திலள்!
திகழும் உள்ளத்துத் தெய்வக் காதலாள்
மகிழும் வாய்ப்பிலா மடிவதை ஏற்கிலள்!

ஆகலின் முதியோள் ஒருநாள் அந்தியில்
பாகியல் மொழியினைப் பக்கத் தழைத்துக்
குழலுறப் பின்னிக் கொழுங்கொடி முல்லை
அழகுறச் சூட்டி 'அன்பே!' என்றாள்.
செல்வியும் உரைக்குச் செவிதர, முதியோள்
பல்வகைத் துன்பம் பாவைக் காகப்
பிள்ளைப் பருவ முதலாப் பட்டதைக்
கள்ளம் இலாமல் கழறிக் காட்டியும்,

வளம்பல வாய்ப்பினும் மாந்த வாழ்விற்கு
இளமையே சிறந்ததென் றெடுத்து நாட்டியும்,
பண்பினும் அன்பினும் பலப்படச் சிறப்பினும்
பெண்தனி வாழ்தல் பிழையெனச் சுட்டியும்,

ஈண்டிய செல்வம் இருப்பினும் இல்லற
மாண்பிலா திருத்தல் மடமையென் றிடித்தும்,
மாண்புறு மங்கையர் வாய்மைக் காதலைப்
பேணிலான் பின்செலல் பேதைமை என்றும்,
ஆண்டமை நல்லர சோச்சிநா டாளினும்
ஆண்துணை யற்றவள் வீணென விளக்கியும்,
அன்பினும் அறத்தினும் ஆண்மைத் துணையினும்
இன்புற வாழ்வதே ஏற்றதென் றுரைத்தும்,
விரும்பிய தேய்ந்திடா வேளையில் வாய்ப்பதை
விரும்பி மகிழ்வதே அறிவென விண்டும்,
ஆர்த்த இளமையில் அறிவினால் பெண்மையைக்
காத்துக் கொள்வதே கற்பெனக் கழறியும்,
உணர்ந்து கொளானை ஒதுக்கி ஒத்தானை
மணந்து வாழ்வதே மாண்பெனக் கூறியும்,
பெண்பல பேறுகள் பெறினும் தாய்மைப்
பண்பிலா வாழுதல் பழியெனப் பழித்தும்,
அத்தை ஐயையின் அன்புறு நெஞ்சினில்
வித்தாய் விளங்கிய செம்மலின் நினைவை
அன்புறக் கல்வி அழித்திட முயன்றாள்!

குடிபுகுந் தானை அகற்றிடாக் குலமயில்,
"ஐயகோ! அத்தை! அன்பினும் என்பினும்

மெய்யினும் நரம்பினும் மிடைந்த சதையினும்
கொப்பளித் தோடும் குருதித் துளியிலும்,
வெப்பமாய்க் குளிராய் விளங்குநல் உணர்வாய்
எண்ணமாய் அறிவாய் இயங்கும் உள் உயிராய்த்
திண்ணமாய்க் கலந்தவென் காதல் திருவினை
மறந்துபோ என்னாது-மணந்துகொள் என்னாது
இறந்துபோ என்னினும் இறைவனால் என்னுளத்து
ஆன்று சுடர்விடும் அத்தான் நினைவோடு
ஈண்டே இவணே இறந்தொழி வேனே!

பெண்மையும் அன்பும் பின்னித் துளும்பும்
உண்மைக் காதலின் வன்மை உணராது
அன்னைக் குலத்தின் அருமணி நீங்களே
என்னை மறந்து மணந்துகொள் என்று
வாய்மைத் திருவாய் வலியாது கூறிடின்
தாய்மை மறந்து தருக்கால் குலைவுறும்
ஓவா உலகத்து யாரிடம் நான்போய்க்
காவா நிற்பீர்என் அன்பெனக் கதறுவேன்!
உய்விலா தென்றன் உயிரினை, இறைவனே,
நொய்யச் சிதைப்பதில் என்பயன் கண்டையோ?
ஐயகோ, அன்னாய்!'' என்றே அலறி
ஐயை வீழ்ந்தாள்! அத்தைதாங் கினளே!

## 9

ஏமப் பெருந்துயர் ஏற்றே
ஊமை நிழலென உலாவினாள் ஐயையே!

தெய்வக் காதல் திருவினாள் சாற்றிய
மெய்ம்மை அன்பின் மேன்மை விளக்கம்
முதியோள் செவியிற் பட்டதும், முன்பிலாப்
புதிய உணர்வினால் புளக முற்றே
ஐயையை நோக்கினாள் அத்தை! அவள்முகம்
தெய்வ ஒளியால் திகழ்ந்தது கண்டாள்!

உலகியல் நெறியால் உரவோர் கண்ட
அலகிலா ஒழுங்கின் அடிப்படை உண்மை
மரபுப் பயிற்சியால் மங்கைய ரிடத்து
விரவிக் கிடப்பினும், செயலால் விளங்கினும்
அதனுள் புதைத்த ஆகத் தொளியுரு
இதுநாள் வரையும் புலப்படா திருந்தது!

தண்ணெனும் காதலே தணலா மாறி,
விண்ணினும் விரிவா விளங்கும் தன்மையை
ஐயையின் வாய்மொழி அவட்குணர்த் திற்று;
செய்யருந் திருவினுள் செம்மல்மேற் செலுத்திய
மெய்யருங் காதல் மேனியைக் காய்ச்சினும்
வெய்ய புழுவென அவளுளம் வெதும்பினும்
அதுவே தண்ணென அவட்குக் குளிர்ந்தது!
அதுவே அன்பின் அகப்புலம் கண்டது!

எனவே ஐயையை இதுவரை பேணா
மனவுணர் வாலே மதித்துப் போற்றினாள்!

தூய்மையோள் உளத்துத் தோன்றிச் சுடர்விடும்
வாய்மைக் காதலை வணங்கவும் செய்தாள்.

தொட்டுப் பயிலாத் தோகையி னிடத்து
மொட்டுப் போல முகிழ்த்த அன்பே
காதற் பயனாய்க் கனிந்தது கண்டாள்!
ஆதலால் ஐயையின் அன்பைப் போற்றினாள்!

எத்தகைப் புறத்துயர் வரினும், ஏற்றமும்
முற்றும் பெற்ற அன்பின் முழுமையால்
அகத்துயர் படாமல் இன்பமே அடைவதும்
அகத்தொளி பெறுவதும் ஐயையாற் கண்டாள்!

புறத்தொடர்பு அறினும் அகத்தொடர் புற்றதால்
அறத்தின் அமைதியை அவளிடம் உணர்ந்தாள்!

அவன்தோள் பற்றிலள் ஆயினும் ஆயிழை
அவனகம் பற்றி வாழ்வதை அறிந்தாள்!
ஐயையின் பெருமையை அறிய அறிய
மெய்யெலாம் சிலிர்த்தது; மெய்ப்பயன் புரிந்தது!
ஐயையின் உளத்தை அன்புவாழ் கோயிலாய்க்
கைதொழு தேத்தினாள்! காதலை வழுத்தினாள்!

அதன்பின் ஐயைக்கு அணிமணம் நிகழ்த்தும்
புதிய விருப்பினை முதியவள் போக்கினாள்!
ஒண்டொடி மணம்போல் உலாவர விட்டாள்!
தண்டொடிந் திடல்போல் தானமைந் தமர்ந்தாள்!

நாட்கள் ஓடின; திங்களும் நகர்ந்தது!
வாள்தடங் கண்ணியும் முன்போல் வாழ்ந்தாள்!

முதியோள் முதுமை முதுமை உற்றது!
புதிரென் வாழ்வும் பொக்கெனப் போனது!
அன்னைக்கு அன்னையாய் அத்தனுக் கத்தனாய்
முன்னைக்கும் பின்னைக்கும் முழுவழி காட்டியாய்
இனியநற் றுணையாய் ஐயைக்கு இருந்த
கனிந்த அன்பின் கடலெனும் அத்தை
காலப் புயலுள் கலம் போல் மூழ்கினாள்;

கோலப் புறவோ ஓலத்துக் குமைந்தது!
பிரிவால் துடித்தது! பேதுறக் கசிந்தது!

பெருஞ்சித்திரனார்.

*சரிந்த வாழ்க்கையில் சருகாய்க் காய்ந்தது!*
*ஏமப் பெருந்துயர் ஏற்றே*
*ஊமை நிழலென உலாவினாள் ஐயையே!*



## 10

நாளும் குன்றும் நாடுவாள்; நாடிக்
கோனொடும் கானொடும் கதிரொடும் பேசுவாள்!
இயற்கை அழகெலாம் அவளுக் கினித்தது!

அன்பே அருளா அருளே காதலாய்
வன்மை பெற்று வாழ்ந்த தூயை
அசைவிலா தசைந்தாள்! அன்புரு வாகினள்!
இசைவிலா தித்தரை இறங்கிய சுடர்ப்போல்
வாழாது வாழ்ந்தாள்! வாழ்ந்து துவண்டாள்!
பாழாய்ப் போனது பைங்கொடி இளமை!

ஆண்டுகள் ஐந்தும் ஓடின! ஐயை
வேண்டுதல் வேண்டாமை விலக்கிய மனத்தொடு
நாளும் குன்றம் நாடுவாள்; நாடிக்
கோளொடும் காரொடும் கதிரொடும் பேசுவாள்!
இயற்கை அழகெலாம் அவளுக்கினித்தது!
மயற்கை சாரா மனத்தொடு மிதந்தாள்!

"என்றைக் காகிலும் ஏந்திழை உளத்தில்
நின்று சுடர்விடும் அத்தான் நேரிலே
வந்து தன்னை வாழ்க்கையில் அமர்த்துவான்!
வெந்து தீய்த்திடும் தனிமையை வீழ்த்துவான்"
-என்றே ஐயை எண்ணி யிருந்தாள்!
அன்றைய நாளும் அவள்முன் வந்ததே!

ஒருநாள் நகர்வழி ஒருவனின் உருவம்
தெரிந்தது! ஐயை திகைப்புற ஓடினாள்!
கற்களும் முட்களும் காலில் தெறித்தே,
பொற்புறு பாவையின் போக்கைத் தடுத்தன!
ஓடினாள்! ஓடினாள்! உள்ளகம் நிறைந்தோன்
வாடி வருவதாய் எண்ணி ஓடினாள்!
உருவமும் வந்தது! ஓடினாள்! ஆயினும்
திருவுளம் நிறைந்த தெய்வம் அஃதில்லெனக்
கண்டதும் கண்ணீர் கழன்றிட நின்றாள்!
விண்டுரை கூறா வெய்துயர் கொண்டாள்!

ஐயை.

எதிர்ந்தோன் தோள்மேல் இரண்டாண்டு நிரம்பிய
செதுக்கிய வடிவிலோர் சிறுவன் கிடந்தான்!

வந்தோன் முகத்தில் வெயர்வை வழிந்தது!
நொந்த துயரினால் நொடிப்புண் டவன்போல்
காணப் பட்டான்; கன்னிபோய் நின்றதும்
மாணப் பணிவொடு மங்கைபால், "அம்மா,
புதினிக் குன்றத்துப் புலியூர் என்பதும்
இதுதா னே!", எனக் கேட்க, இருங்குழல்
'இதுவே' என்ன, "இவ்வூர் தன்னில்,
முதியோள் ஒருத்தி முத்தம்மை என்பாள்
குடிலினைக் காட்டக் கூடுமோ?" என்றான்.
இடிவிழுந் ததுபோல் ஐயை, 'ஏன்?' என்றாள்.
"அவர்களின் பிள்ளை அனுப்பினார் எனை" என,
"அவர் பெயர் என்'னென ஐயையும் கேட்க
"செம்மல்" என்றான்; உடலம் சிலிர்த்தது!
வெம்பிக் கசிந்தது விதிர்ப்புறு நெஞ்சம்!

புதியவன் மேலும் ஐயையைப் புரிந்து,
பதைப்புறு நெஞ்சொடும் பல்குகண் ணீரொடும்
ஓராண் டாகத் தும்பைநோ யுற்றுடல்
தேரையாய்த் தேய்ந்து சென்ற திங்களில்
மாண்டு போனதும், செம்மல் மகனொடு
நீண்ட பெருந்துயர் நேர்ந்த கவலையால்

எண்ணி எண்ணி இராப்பகல் அழுததும்,
உண்ணலும் உறக்கமும் ஒதுக்கித் துவண்டதும்,
ஆறாக் கவலையின் அணைப்பைத் தாளாது
மாறு துழலும் மனத்துயர் மாற்றிடப்
பின்னர் பெரும்படை சேர்ந்ததும், பிள்ளையைத்
தன்னிடந் தந்தே அன்னையார் தம்மிடம்
ஒப்படைத் திடவே வேண்டி உரைத்ததும்
அப்பணி மேற்கொண் டங்கு வந்ததும்
ஆராத் துயரோ டழுது கூறினான்!

வாராப் பெருந்துயர் வந்ததாய் வால்விழி
பையனை உள்ளம் பதைப்புறப் பறித்துச்
செய்ய முகத்தினில் செம்மலைக் கண்டுளம்
அளாவிப் படர்ந்த அன்பெலாம் சேர்த்துயிர்
கலாவி அணைத்துக் கண்ணிலும் வாயிலும்
பனித்த செவ்வாய்ப் பவழ இதழ்களால்
இனித்திட இனித்திட ஏழா யிரமுறை
முத்தம் பொழிந்து முரல் இளமையின்
பித்தந் தணிந்தாள்! பேதை யோளே!



## 11

“என்றோ ஒருநாள் ஏந்தலும் வருவான்!
அன்றிலை மணப்பான்; அணைப்பான்” என்றே
ஏங்கிட நாட்களை எண்ணினாள்!

செல்வனைக் கொணர்ந்தோன் சென்றபின் ஐயை
மல்கு நீர்விழி மறைப்பத் திரும்பினாள்!

அத்தான் பிள்ளை அரிமாக் குருளை!
முத்துச் சிரிப்பு! மொய்த்த கருவிழி!
மென்மைச் சுருள்மயிர்! மெல்லிய தாடை!

இன்புறும் மேனியை எடுத்துச் சிற்றிடை
மெய்யோ டணைத்துக் கனவின் மிதந்தாள்!

பொய்த்த வாழ்க்கை பொய்த்துப் போனது
உலகெலா மலர்ந்து மங்கையர் உளம்படர்ந்து
அலகிலா தூறிய அன்பெனும் ஊற்றுச்
சேயிழை உளத்துச் சிலிர்த்தநாள் முதலா
வாய்த்திடா இன்பம் சிறியோன் வருகையால்
பெருக்கெடுத் தோடிப் பிறவிப் பேற்றுக்கே
உருக்கொடுத் துயிரை உவகையில் தோய்த்தது!

நம்பிக்கை தந்த சிறுவனை நங்கை
'தம்பி! உன்பெயர் சாற்'றெனக் கேட்டாள்!
சிமிழ்வாய் திறந்து 'சேரன்' என்றான்!
தமிழாய் இனித்தது மழலைத் தேன்மொழி!
'முத்தே நான்யார்? மொழிகெ'னக் கேட்டாள்!
'அத்தை' என்றான் அழகுவாய் திறந்தே!
ஐயையின் விழிகளில் அரும்பியது கண்ணீர்!
"உய்விலாள் என்னை உன்பூ வாயால்
'அம்மா' என்றே அழையடா கண்ணே!"
என்று கெஞ்சினாள் ஏந்திழை! அவனும்
செம்மா துளைஇதழ் சிரித்திட மலர்ந்தே
'அம்மா' என்றான்! அள்ளி எடுத்தே
ஆறுத லோடே அணைத்தவா 'றின்னும்
நூறு முறைசொல், நுங்குவாய் திறந்து' என,
'அம்மா! அம்மா!' என்றே அடுக்கினான்!
விம்மும் நெஞ்சொடு விழிகளை மூடிக்
கொந்தலர் தேன்வாய்க் குதலை மொழிந்த
செந்தமிழ்ச் சொற்களை நெஞ்சினுள் செரித்தாள்!

உள்ளம் இனித்தது! உடல்பூ ரித்தது!
கள்ளம் இலாதாள் கனவுமெய் யானது!
அத்தை சாற்றிய அரும்பெருந் தாய்மை
வித்திவள் உள்ளத்தில் முளையிட்டு வளர்ந்து,
பெருமர மாகிப் புடைமிக விரிந்து,
சிறுமுகை பூத்துச் சிலிர்த்து மலர்ந்து,
நறுமணங் கமழ்ந்து, நான்கு திசையிலும்
இறைத்து நிறைந்ததை ஏந்திழை கண்டாள்!

சிறுவன் உருவினில் செம்மலின் உருவை
அறம்பூண் நெஞ்சின் அன்பினள் கண்டாள்!
போதலர் தாமரைப் பூவென மலர்ந்த
காதல் உள்ளம் தாய்மையாய்க் கனிந்தது!
வளமை கொழுவி வார்த்தெழுந் தளாவிய
இளமை நெஞ்சில் இறைமையை நிறைத்தது!
வேரித் தடங்கண் வேய்தோ ளிக்குமுன்
பூரித்த மார்பகம் தாய்மையால் புலர்ந்தது!
அகனலர்ந் தாவியும் அலர்ந்துவாய் அலர்ந்து, 'என்
மகனே!' என்றாள்; 'ஏந்தலே!' என்றாள்.
"வாழ்விலாள் எனக்கு வாழ்வைக் கொடுத்துத்
தாழ்வைப் போக்கிய தெய்வமே!" என்றாள்.
போற்றிப் புகழ்ந்தாள்; புதுமையால் பிறவிப்
பேற்றை அடைந்ததாப் பெருமிதங் கொண்டாள்!
கமழ்வாய் முகர்ந்தாள்! கவினிடை நோகச்
சுமந்து திரிந்தாள்; கதைபல சொன்னாள்!
அவனோ டுண்டாள்; அவனோ டாடினாள்!
அவனொடு துயின்றாள்; அவனோ டெழுந்தாள்.


காதல் நுகராக் கன்னி இளமான்,
மாதர் தெய்வம், மங்கையர் விளக்கம்
ஐயையின் நெஞ்சில் அன்னையின் உணர்வே
மெய்யொளிச் சுடராய் மிளிர்ந்தது கண்டீர்!

சிறுவன் வந்தபின் செம்மலின் எண்ணம்
உறுத்துதல் குறைந்தது. என்னினும் உறக்கத்து
அன்னவன் நினைவும் அவளகம் மொய்த்தது!
அன்ன பொழுதெலாம் அனல்மெழு கானாள்!

தோளில் மகனைத் தூக்கிய வாறு,
நாளும் ஐயை குன்றம் நாடுவாள்!
வெந்துயர் பொறுத இளையோன் ஆகையால்
தந்தையின் நிலைவைத் தளிர்க்கொடி ஊட்டிலள்!
ஆட்டுக் குட்டியோ டவன்விளை யாடிட
நாட்டுவாள் அவள்விழி நகர்செலும் பாதையில்!

என்றோ ஒருநாள் ஏந்தலும் வருவான்;
அன்றிலை மணப்பான்; அணைப்பான்; என்றே
ஏங்கிட நாட்களை எண்ணினாள்! ஆனால்
ஆங்கோர் உண்மை ஐயை அறியாள்!
அதுகாண், செம்மலின் ஆருயிர்
எதிர்ந்த படைமுகத் திறந்த தென்பதே!

( முதல் பகுதி முற்றும் )






(இரண்டாம் பகுதி)

1.

ஒருதனிக் குடிலில் வாழும், ஓவிய நிழல்போல் ஐயை
வருதலும் போத லாலும், வாழ்தலென் பெயரைச் செய்தாள்!

புதினிக் குன்றத்தின் புலியூர் முன்னினும்
  பொலிவுற் றிருந்தது; மக்களும் பெருகினர்!
முதனினும் குடிசைகள் ஊர்ப்புலம் நிரம்பின;
  முளைத்தன வீடுகள்; கடைகளும் தெருக்களும்!
கதிர்செய் வயலொடும் வரப்புகள் தோன்றின!
  கல்விக் கூடமும் கவினுற வெழுந்தது!
எதினினும் இயைபிலா ஐயையின் உள்ளம்முன்
  இருந்தது போல இருந்தது தனிமையே!

*ஐயையின் தனிக்குடில் அமைவிஞல் ஆன்றவிந்*
*தடங்கிய சான்றவர் கொள்கைபோல் நின்றது!*
*கையறு நிலையிஞல் கன்னிமான் இளமையைக்*
*கழித்தது; சேரஞே கன்றுபோல் வளர்ந்தனன்!*
*பொய்யறு நெஞ்சிஞர் வாழ்வுபோல் நிரைகளும்*
*பொலிந்தன கொட்டிலில்; பால்மணம் கமழ்ந்தது!*
*மையற நின்றன ஐயையின் விழிகளும்;*
*மற்றவள் மனத்துளே நின்றவன் செம்மலே!* 2

*காதலன் பிள்ளையால் கனிந்தவள் தாயுளம்*
*கண்ணெடும் கருத்தொடும் ஆங்கதைக் காத்தது!*
*சாதலின் கொடுமையால் அத்தையும் தும்பையும்*
*சாய்ந்ததை இடையிடை நினைத்துளம் கசிந்தது!*
*ஈதலின் உவப்பிலா திளைப்பவன் நெஞ்சுபோல்*
*இணையிலா திளைத்தது இளைத்தது பொலிவுடல்!*
*தீதறு நல்லுளம் இளமையின் தெறலிஞல்*
*தேற்றுவார் இன்றியுள் தேம்பிக் குமைந்ததே!* 3

*அமைவுறும் நடுக்கடல் பெய்திடு மாமழை—*
*அகன்றிடு பாலையில் வீசிய நிலவொளி—*
*தமையணு கிலாவிடர்த் தோங்கிய தேனிருல்—*
*தனிமைசேர் காட்டிடை மலர்ந்தநற் றனிமலர்—*
*இமையிலான் முன்னெதிர் இருந்தநல் லெழில்—என*
*இருந்தனள் இருந்தனள் இளங்கொடி! இயற்கையோ*
*சமைவுறக் கொழித்தது கொழித்தது பேரெழில்;*
*சாம்புத லுறும்படி சாய்த்தது காலமே!* 4

(வேறு)

ஆருயிர்ச் செம்மல் சென்றாங்
கரும்படை வீழ்ந்த செய்தி
சீருயிர்ச் செவ்வி தோய்ந்தாள்
சிறிதேனும் அறியா ளாகி
ஓருயிர்க் காக வாழும்
உயிர்ப்பொடும் ஒருநாட் போதில்
நேருயிர்ப் படுவான் என்னும்
நினைப்பொடும் வாழ்த லுற்றாள்! 5

ஐயையை—கன்னித் தாயை—
அணுவெலாம் அன்பால் தோய்ந்து
மெய்யெனும் உருவ மாகி
மிளிர்கின்ற உயிரை—என்றும்
பொய்யிலாக் காதல் வாழ்வைப்
புகழ்ந்திசை வாழ்த்த நாளும்
வெய்யவன் வந்து போவான்!
விளைந்தன நொடிகள் ஆண்டே! 6

தருதலில் லாமல் ஆங்கோர்
தாயுமாய், வண்டு தோய்ந்து
பொருதலில் லாமல் ஆர்ந்த
பூவுமாய் உலர்த லுற்றே,
ஒருதனிக் குடிலுள் மேயும்
ஓவிய நிழல்போல் ஐயை
வருதலும் போத லாலும்
வாழ்தலென் பெயரைச் செய்தாள்! 7

குன்றமும் குடிலும் ஆவின்
கொட்டிலும் நிரையும் மானின்
கன்றெனும் பிறவாச் சேயும்
காலமும் தானு மாக
ஒன்றவன் நினைவே தாங்கி
ஒருத்தியே உறவு மாகி
என்றுமவ் வழிமேல் வைத்த
இருவிழி உலவி வந்தாள்! 8

பனிவிழி பளிங்குக் கன்னம்
பவளவாய் எயிற்று முல்லை
குனிநுதல் பின்னுக் கூந்தல்
குதலைவாய் மடுத்த காது
கனிவுளம் மெலிந்த செங்கைக்
கன்னிமான் புதினிக் குன்றத்
தனிநெடும் பாதை யோடித்
தவிக்குநெஞ் சிளைக்க வாழ்ந்தாள்! 9

எவ்வொரு நினைவு மின்றி
இளங்கொடி அவன்மேல் வைத்த
அவ்வொரு நினைவால் காலை
அலர்ந்தது முதல்தொ டங்கி
ஒவ்வொரு நொடியும் நாளும்
உலவினாள்; அவன்பொ ருட்டே
செவ்வையாய் உடலைக் காக்கும்
எண்ணமும் சிறிது கொண்டாள்! 10

விழியெலாம் அவனே காணும்;
விறல்மகன் குதலை பேசும்
மொழியெலாம் அவனே மொய்க்கும்!
முறையினில் திரியாப் பாவை
பழியிலா வாழ்த லுற்றுப்
பையனில் அவனைக் கண்டு
கழியிலா துவகை பூண்டாள்;
காதலுக் குருவாய் நின்றாள்! 11

சேரனைச் சுமந்த தோளும்
செம்மலைச் சுமந்த நெஞ்சும்
நீரினைச் சுமந்த கண்ணும்
நெடிதுயிர் சுமந்த கூடும்
காரினைச் சுமந்த திங்கட்
கவின்முக மும்சு மந்தே
போரினில் செம்மல் மீளும்
பொழுதையும் சுமந்து வாழ்ந்தாள்! 12

செய்யவாய் செம்மல் என்று
தனிமையில் சிவக்கச் சொல்லும்;
பையனங் குற்றால் தூக்கிப்
பனிமுகங் குளிர முத்தும்!
வெய்யநற் காதல் எண்ணம்
இரவினில் காந்தி நின்றால்
கைகளால் குளிர்நீர் அள்ளிக்
கவின்முகங் கழுவிச் சாயும்! 13

பறவையில் ஆணும் பெண்ணும்
பார்க்கையில் அவனுந் தானும்
உறவாடித் துய்ப்ப தைப்போல்
ஒருநொடி எண்ணும்; மீண்டும்
துறவுவாழ் வாமோ என்று
துணுக்குற நினைந்து வாடிக்
கறவைக்குக் கன்று காட்டிக்
கருவிழி சுரந்து நிற்கும்! 14

கால்மடித் தூன்றி எம்பிக்
கன்றுதாய் மடியை முட்டிப்
பால்குடித் துவக்கும் காட்சி
பனிவிழி கண்டு விம்மும்!
மேல்கொடுத் தவள்கை வாங்கி
மிகமகிழ்ந் தோர்நாள் ஆப்பால்
சேல்விழிக் கெச்சம் வைத்த
செம்மலை நினைந்து வாடும்! 15

பூவின்வாய்ச் சேர னோடு
பொழுதெலாம் பேசி மாலை
ஆவின்பால் வற்றக் காய்ச்சி
அம்புலிக் கழகு காட்டி
மேவன்பால் அத்தை தன்பால்
மிழற்றிய கதைகள் சொல்லிச்
சேவிழி தூங்கப் பண்ணிச்
செம்மலை எண்ணிச் சோர்வாள்! 16

தன்னுளே எண்ணி நையுந்
தவிப்பினை மகன்கா ணாமல்
முன்னிலும் அவன்பா லன்பு
மொய்த்திடக் கனிந்து நின்றாள்!
தன்னிளவ் விளையோன் றன்பால்
தளைப்பட உளம்ம கிழ்ந்தாள்;
என்னினும் செம்மல் நோக்கி
ஏந்திழை ஏங்கி நின்றாள்! 17

தோய்ந்தபே ரன்பை மீட்டுத்
தும்பைக்கு வாழ்வு தந்தும்
வாய்ந்தவள் மறைவால் செம்மல்
வாட்டத்தைப் போக்கு தற்கே
ஏய்ந்துதான் வாழ்வ தாக
எண்ணினாள்; காய்ந்த மண்ணில்
பாய்ந்தசெம் புனல்போல் அன்பால்
பழைமையைப் புதுக்கிக் கொண்டாள்! 18

கல்லான்கைக் கரண நூல்போல்
கரப்பான்கைப் பொருள்போல் நெஞ்சப்
பொல்லான்பாற் புலமை யேபோல்
புலவோரின் வறுமை போல
வெல்லான்கைக் கருவி யேபோல்
விளக்கிலான் நிலம்போல் பேதை
நல்லாளின் இளமை நாளும்
நயப்பின்றி நலிந்த தன்றே! 19

எய்யுறு வில்லோன் கொண்ட
    இலக்குப்போல் விலக்கா ளாகிப்
பொய்யறி கில்லா நெஞ்சப்
    பொலிவினால் ஒருமை யுற்ற
மெய்யறி திறவோர் உள்ளம்
    மெய்ப்பொருள் ஒன்றல் போல
ஐயறி வுணர்வோ டெண்ண
    அறிவையும் அவன்மேல் வைத்தாள்!



## ௨.

ஊழிபோய் முடிந்தா லும்,என்
ஊழ்மட்டும் முடியா தென்றாள்!

குன்றினில் நிரைகள் மேயக்
குழந்தையோ டளவ ளாவிச்
சென்றநாட் கதைகள் சொல்வாள்!
செவந்தியென் பாளோர் தோழி
ஒன்றுவாள் ஐயை பேச்சில்!
உள்ளத்தை அவள்பால் கூறி
என்றுவந் தெய்தும் அந்நாள்
எனக்கூறி விருத்தொ ரேப்பாள்!

செவந்தியோ சிறிது கற்ற
    சிறியபெண்; பருவம் வாய்ந்தாள்!
நீவந்தபே ரழகி யில்லை;
    நிறமில்லை; எனினும் ஐயைக்
குவந்தநற் றோழி! நல்ல
    உணர்வுதோய் கனிந்த உள்ளம்!
தவந்தனை யொத்த ஐயை
    தனிக்காதல் திறம்வி யந்தாள்! 2

சிலமுறை சேரன் வந்து
    செம்மலின் வரவு கேட்பான்!
சிலமுறை தும்பை எங்கே
    சென்றனள் எனவி னிப்பான்!
நிலவரை பெயர்தல் போல
    நெஞ்சமும் துணுக்குற் றேங்க
இலைமறை கிளியைக் காட்டி
    எண்ணத்தை மாற்றி நிற்பாள்! 3

ஐயையும் செவந்திக் கத்தை
    அன்பினைச் சொல்வாள்: பெற்றோர்
எய்யாத குறையைத் தீர்த்த
    ஏற்றத்தைச் சொல்வாள்; தானும்
பொய்யாத காதல் நெஞ்சைப்
    புரையிலான் தன்மேல் வைத்து
நையாமல் நைந்து போன
    நயமிலாக் கதையும் சொல்வாள்! 4

அத்தைதன் மகன்மேல் வைத்த
அன்பையும், மகன்அன் னைமேல்
மெத்தவைத் திருந்த அன்பின்
மேன்மையும் எடுத்துக் கூறி,
அத்திரு வுளங்கள் தன்னால்
அறுபட்டுப் போன வென்றும்,
செத்திலா தின்னும் தான்வாழ்
சிறுமையும் வருந்திச் சொல்வாள்! 5

"தோழியே, செவந்தி யே,என்
துன்பத்தைக் கொட்டி னால்,அவ்
வாழியும் வற்றிப் போகும்!
அழிந்திலாப் பேதை யோள்,நான்!
நாழியும் எனக்கும், என்னை
நயந்தோர்க்கும் இன்பம் இல்லை!
ஊழிபோய் முடிந்தா லும்என்
ஊழ்மட்டும் முடியா" தென்றாள்! 6

"பிறந்துநான் விழுந்த போதே
பெற்றோரை இழந்தேன்; அத்தை
இறந்தொழி யாத என்னை
எடுத்தன்பாய் வளர்த்தார்; அந்தச்
சிறந்தபே ருள்ளத் திற்கும்
சிறுமையே என்னால். யானும்
மறந்திலா திருக்கும் அத்தை
மகனுக்கும் துயரே" என்றாள்! 7

"செம்மலை உயிராய்—காக்கும்
தெய்வமாய்—விரும்பி நின்றேன்!
விம்மலை எனக்கென் றாக்கி
வெற்புத்தோள் தும்பைக் கீந்தார்!
அம்ம!வாழ் கென்று வாழ்த்தி
அனைத்தையும் வெறுமை யாக்கி
விம்மினேன்; விக்கி னேன்;என்
துயரையும் விழுங்கிக் கொண்டேன்! 8

"இம்மையில் இலையென் றாலும்
மறுமையி லேனும் என்னைச்
செம்மலே மணத்தல் வேண்டும்,
எனவேண்டித் தும்பை வாழ்வு
செம்மையாய் விளங்கத் தெய்வம்
வழுத்தினேன்; சீரற் றோள்,நான்!
எம்முறை யும்போல் அஃதும்
ஏக்கமாய் முடிந்த" தென்றாள்! 9

"அன்புறு செவந்தி யே,பார்;
அன்னைநான்; இப்போ, திங்கே!
இன்புறல் இல்லை; பூத்த
இளமையும் மணந்த தில்லை;
மன்பதை வாழ்வில் நானோர்
மங்கைதான்; ஆனால் மூத்தோள்!
துன்பிது போல யார்க்கும்
தோன்றுதல் கூடா" தென்றாள்! 10

இத்தனைத் துயருற் றாலும்
    இருக்கின்றேன்; சாக வில்லை!
செத்தாலும் துயர்தீ ராது;
    மறுமையும் செறிக்கத் தோன்றும்!
எத்தனைத் துயரெ னக்கென்
    றிறைவன்வைத் துள்ளா னோ,நான்
அத்தனைத் துயர்க்கும் என்னை
    அணியமாய் இருத்திக் கொண்டேன்! 11

இத்தனைக் கும்பின் என்றன்
    ஏந்தலை—இறைவ னை—என்
அத்தானை—ஒருநாள் கண்டே
    அவர்க்குற்ற துயருக் காகக்
கத்தியென் உயிரை அன்னார்
    காலடி கரைத்தா லன்றிப்
பித்தியென் பிறவி போகா"
    தெனவுரைத் தழுதாள் பேதை! 12

முகத்திரு கைகள் பொத்தி
    முரல்வாய் அரற்றிக் கேவி
அகத்துள துன்ப மெல்லாம்
    அடங்கிடும் வரையில் பொங்கி
மகத்துயர் கொண்ட தாய்போல்
    மலைத்துயர் நீராய்ச் சாய்த்தாள்!
உகுத்தகண் ணீரில் தோழி
    உண்கண்ணீர் பாதி தேறும்! 13

வான்மின்னி இடித்துப் பொங்கி
வழிந்தமா மழைபோல், ஐயை
தான்எண்ணி அழுது தீர்த்தாள்!
செவந்தியும் தணித்து நின்றாள்!
ஏன்அன்னை அழுதா ளென்றே
எண்ணுதற் கறியாச் சேரன்
மான்கன்றாய் விசித்துத் தேம்பி
மடிபுதைத் தழுதல் கண்டாள்! 14

கண்டவள் மகனைத் தூக்கிக்
கனிவாயில் முத்தம் வைத்துத்
தண்டுடல் மார்பில் சேர்த்துத்
தன்னிலை தேற்றிக் கொண்டே,
"உண்டு,நான் உயிர்ப்பேன் என்றால்
ஒருயிர் இதற்கே" என்றே
அண்டையில் உற்ற தோழிக்
காறுதல் கூற லுற்றாள்! 15

ஒவ்வொரு நாளும் இவ்வா
றொழிந்தது; நிரைகள் தம்மை
ஒவ்வொரு நாளும் குன்றுக்
கோட்டுவாள்; காதற் செம்மல்
அவ்வொரு நாளி லேனும்
ஆங்கெதிர்ப் படுவா னென்றே
வெவ்வுயிர் உருகப் பார்ப்பாள்!
விரைந்ததந் நாளும் அந்தோ! 16

8.

(வேறு)

ஊருக்கு வருவதிலே தடையென்ன இவர்க்கே
உறவென்றே நாளொருத்தி உயிர்வாழ விலையா?

அன்றொருநாள் புன்மாலை!
வழக்கம்போல் ஐயை
ஆநிரைகள் மறிகளொடும்
அழகுமக ளோடும்
குன்றினின்று திரும்பிவந்தாள்!
கொந்தளிக்கும் உள்ளம்!
கூர்த்தவிழி பார்த்திருந்த
வெறுமைநிலை அன்றும்!
கன்றவிழ்த்துப் பால்கறந்து
காய்ச்சியமிழ் தூற்றிக்
கவின்நிலவின் எழில்காட்டிக்
கனிமகன்வாய் ஊட்டிச்
சென்றவனைத் தாலாட்டித்
தூங்கவைத்தாள்! பின்னைச்
சேல்விழிகள் மூடாமல்
பாய்கிடந்தாள் கோதை!

போருக்குச் சென்றவர்க்கு
விடுமுறைஉண் டென்று
பொழுதுக்கே அவளிடத்தில்
செவந்திசொல்லி யிருந்தாள்!
"ஆருக்கும் ஆண்டொன்றுக்
கொருமாதம் உண்டாம்!
அவர்போலும் படைமறவர்
அவ்வூரில் உளராம்!
ஊருக்கு வருவதிலே
தடையென்ன இவர்க்கே!
உறவென்றே நானொருத்தி
உயிர்வாழ விலையா?
பேருக்கே நான்எனினும்
மகனொருவன் இலனோ?
பேசாமல் வந்துவிட்டுப்
போனால்தான் என்ன?" 2

"அத்தையிருந் தாலொருகால்
வந்தாலும் வருவார்!
அன்றைக்கே எமைவெறுத்துப்
போயினவர் தாமே!
ஒத்திருந்தால் வந்திருப்பார்!
ஒருவேளை அத்தை
உயிர்துறந்த துயர்ச்செய்தி
கிட்டியிருக் காதோ?

செத்ததும்பை இருந்திருந்தால்
செலவுவர விருக்கும்!
செய்திக்கும் வழியில்லை;
முகவரியும் இல்லை!
பத்திருந்தா லும்பெற்ற
பிள்ளையின்மேற் பாசம்
பட்டாளம் போனவர்க்கும்
இருக்காதா என்ன?" 3

—என்றபடி ஐயைமனம்
இராமுழுதும் பேசும்!
இருவிழியும் நீர்வழியும்!
மேலும்மனம் ஏங்கும்:
"இன்றில்லை யாயினுமே
என்றேனும் வருவார்!
வந்தாலும் எனைமணந்து
கொள்வாரோ இலையோ?
ஒன்றுறுதி; அவர்வந்தால்
ஓடிப்போய் வீழ்ந்தே
உயிரையவர் காலடியின்
கீழ்வைத்துக் கேட்பேன்!
'நன்று;ஐயை, உனைமணப்பேன்'
என்றால்தான் எழுவேன்;
நா'வில்லை' எனமொழிமுன்
நானிறந்து போவேன்" 4

''அகல்உலகில் அவர்வெறுத்தால்
ஆரெனக்குத் துணையாம்!
அத்தையுள ரா,எனக்குப்
பரிந்தவர்பால் பேச?
புகல்எனக்கிங் கவர்தாமே!
புணர்ந்துகொளக் கேட்பேன்;
புலம்பவிட்டால் உயிர்துறந்து
போவதுதான் நன்று!
இகலெனக்கு வாராமல்
இறைவனெனைக் காப்பார்!
இதுவரைக்கும் துயர்ப்பட்டேன்;
இனியொருகால் நீங்கும்!
பகலிரவும் போல்தாமே
இன்பதுன்ப மெல்லாம்!
பட்டதெல்லாம் துயரிரவே;
பகலினித்தான் இருக்கும்!''

—எனப்பலவா றெண்ணியவள்
இமைநணைந்தாள்; என்றும்
இல்லாத நம்பிக்கை
பிறந்ததவட் கின்று!
மனப்பொறையும் குறைந்தவுடன்
மகிழ்வமைதி கொண்டாள்!
மலர்விழியை விடியலிலே
மருவியது தூக்கம்!

நினைப்பெழவே மீண்டுமெழுந்
தண்டையில்கண் ணுறங்கும்
நித்திலப்பொன் மேனிமகன்
நெற்றியில்கை நீவி,
வனப்பவிழ்ந்த முகம்நோக்கி,
வழிந்ததுகில் போர்த்து,
வந்தமர்ந்து உடல்சாய்த்தாள்;
வளர்துயிலுங் கொண்டாள்! 6

ஆங்கவளும் அமைதியுடன்
ஆழ்ந்துறங்கும் வேளை,
'ஐயை'எனும் குரல்கேட்டே
அதிர்ந்தெழுந்து நின்றாள்!
ஓங்குகதிர் மேலெழுந்தே
ஒளிவெள்ளம் பாய்ந்த
உணர்வின்றித் தான்துயின்ற
நிலைகடிந்து கொண்டாள்!
தாங்குவெயில் தனையறிந்து
வெளிப்பாய்ந்து வந்து,
தன்பெயரை யழைத்தகுரல்
தனக்குரியார் யாரென்
றேங்குமுளத் தோடிரண்டு
விழிசுழற்றிக் கண்டே
இறும்பூது கொண்டதிர்ந்து
மெய்ம்மறந்து போனாள்! 7

எவ்வுயிருள் தன்னுயிர்போய்
இணைந்ததென வெண்ணி
இதுவரைவாழ்ந் திருந்தாளோ—
எவ்வுடலைக் கண்டே
அவ்வுடலில் தான்ஒடுங்கும்
ஆவல்மிகக் கொண்டே
அங்காந்து கிடந்தாளோ—
அடடா,ஓ! அடடா!
அவ்வுயிரே, அவ்வுடலே
செம்மலெனும் ஆன்ற
அழகுபெயர் பூண்டுருவாய்
ஆங்கிருக்கக் கண்டாள்!
வவ்வுவிழி யாலருந்தி,
வல்லுணர்வால் மாந்தி
வைத்திருந்த ஆசையெல்லாம்
வழிந்தொழுக ஓடி, 8

'அத்தான்'என் றிதழ்துடிக்க
அகல்விழிநீர் சாய
அல்லிமலர்க் கைநீட்டி
அவனடிக்கீழ் வீழ்ந்தாள்!
"எத்தாலும் எப்பொழுதும்
உங்களைக்கா ணாமல்
இறவேன்நான்: இறவேன்நான்;
இறந்துபட மாட்டேன்!

எத்தனைநாள் எத்தனையாண்
டெத்தனையோ ஊழி
இருந்தாலும் எனக்குவந்தே
எதிர்ப்படுவீர் என்றே
இத்தனைநாள் காத்திருந்தேன்!
எதிர்வந்து விட்டீர்!
ஏனத்தான் இத்தனைநாள்?"
எனஅழுது கேட்டாள்! 9

பித்திச்சி போலானாள்;
பெயர்மறந்து போனாள்!
பிழைக்கவழி காணாமல்
பெருங்கடலுள் பாய்ந்து
தத்திச்சு பித்துச்சென்
றுயிர்தவித்த ஏழை,
தனித்துவந்த கப்பலிலே
தாவுங்கதை யானாள்!
முத்தச்சில் வார்த்ததுபோல்
முகத்திலொளி மின்ன
முழுநிலவில் தேங்குளிர்
மொய்த்திருக்க லானாள்!
புத்தெச்சில் வாய்சுரக்கப்
புதுநாணம் பூக்கப்
பொழில்சுமந்த எழில்சுமந்து
புதுப்பெண்ணாய் நின்றாள்! 10

நிற்கவைத்துப் பேசுமொரு
நினைவுவந்த பின்னை,
''நிற்கின்றீர், வாருங்கள்;
நம்வீட்டிற்'' கென்றே,
பொற்கையால் அவன்கையைப்
பொதிந்தழைத்துப் போனாள்!
பூப்பாயை விரித்தமர்த்திப்
புறம்அமர்ந்து கொண்டாள்!
கற்கையிலாக் கற்பமைந்த
கன்னிமைசேர் தெய்வம்,
கவின்தும்பை யிறந்ததற்கும்,
தாய்மறைந்த தற்கும்,
சொற்களினால் எடுத்தியம்பாப்
பெருந்துயரம் சாற்றிச்
சொல்மழலைச் சேரனையும்
ஆங்கெழுப்பி விட்டாள்!

வடிந்ததுயர் அத்துணையும்
வழித்தெறிந்த பின்னை,
வார்குழலைத் தான்முடித்து,
சேலைசரி செய்து,
படிந்ததுயர் முகங்கழுவிப்
பசுமஞ்சள் பூசி,
பார்த்தெடுத்த முல்லைமுகை
கோத்தெடுத்துச் சூடி—

இடிந்திருந்த குடிலகற்றி
எழில்மனையைக் கட்டி
இல்புகுமோர் ஏழையைப்போல்
இறுமாந்து நின்றே,
"விடிந்ததத்தான்; தெரியவில்லை;
விருந்துசெய்ய வேண்டும்!
வெந்நீர்வைத் திருக்கின்றேன்;
குளித்திருங்கள்" என்றாள்! 12

ஐயைக்கு நிறைமகிழ்ச்சி!
கண்தெரிய வில்லை!
அடுப்படியில் பெருவேலை!
அறுத்துவந்தாள் காய்கள்!
கையறுத்துக் கொண்டாள், அக்
காயரியும் போது!
கடுகையள்ளி உப்பென்று
'களுக்'கென, நகைத்தாள்!
மெய்யுடையைச் சரிசெய்தாள்;
நூறுமுறை மேன்மேல்
மேலாடை நழுவிவிழ
எடுத்தெடுத்துப் போட்டாள்!
பையனிடம் போவதுபோல்
பலமுறையும் செம்மல்
பக்கம்போய் நின்று, அவனைப்
பார்த்துமகிழ் வுற்றாள்! 13

கண்ணாடி முன்நின்றாள்;
கலைந்தகுழல் நீவிக்
கதிர்முகத்துப் புகைதுடைத்தாள்;
கவின்செய்யக் கற்றாள்!
பண்ணாடிப் பழம்பாடல்
வாயிசைத்தாள்; அவளைப்
பன்னூறு முறைபார்த்தாள்
விழிமின்னல் பாய்ச்சி!
உண்ணாடி வெளிநாடி
ஓட்டநடை யாக
ஒருகோடி முறைநடந்தாள்!
உதவிவரக் கேட்டாள்!
விண்ணாடி, முகில்நாடி,
விரிவிசும்பை நாடி,
விண்மீன்கள் கூட்டத்தில்
வெற்றியுலா வந்தாள்! 14

ஒருகாயைப் பொரித்தெடுத்தாள்;
ஒருகாயைத் துவட்டி,
ஒன்றினில்மோர்க் குழம்புசெய்தாள்;
ஒன்றைப்பருப் பிட்டாள்;
ஒருகாயைப் பூச்சீவி,
உறைத்ததயிர் ஊற்றி,
உறைப்புக்கு மிளகிட்டே
ஒருபுறத்தில் வைத்தாள்!

கருகாத பதத்திற்கொன்
றுப்புக்கென் றென்று;
கார்ப்புக்கும் புளிப்புக்கும்
ஒன்றென்றாய்ச் சுவைத்தாள்!
உருகாத நெய்யுருக்கி,
உருகுகின்ற அன்பால்
உண்ணுதற்கே அத்தானை
ஓடோடி அழைத்தாள்! 15

பெருவாழை யிலைவிரித்தாள்;
பெரும்படைய லிட்டாள்!
பிள்ளையினை அருகமர்த்திப்
பிசைந்ததன்வாய் ஊட்டி,
உருவான இன்பநிலைக்
குவந்திறைவன் வாழ்த்தி,
'உண்ணுங்கள், அத்தா'னென்
றுளமுருகச் சொன்னாள்;
ஒருவாய்க்கே அவள்கைச்சோ
றுவந்துதரக் கேட்டான்!
ஒண்டொடியும் மகிழ்ந்துருட்டி
உள்ளங்கைத் தந்தாள்!
தெருவாயில் அந்நொடியில்
ஆளரவங் கேட்டுத்
திரும்பின,அவ் விருமுகமும்!
திகைத்தனவே; அக்கால், 16

கருவேலன் முள்வந்து
கண்களிற்பாய்ந் ததுபோல்,
கடல்நடுவில் மலைமுகட்டில்
கலம்நொறுங்கி யதுபோல்,
கருவாகித் திருவாகிக்
காலமெல்லாம் காத்த
கதைநடக்கும் கொட்டகையில்
கனல்பற்றி யதுபோல்,
உருவான உலைத்தீயாய்
உருட்டுவிழி யோடே
உடல்நடுங்க நின்றிருந்தாள்,
உயிரிழந்த தும்பை!
ஒருவாய்க்குப் பிசைந்தளித்த
ஐயையின்கைச் சோற்றை
உண்ணுமல் வைத்திருந்தான்;
ஒண்டொடியாள் கண்டாள்! 17

நின்றிருந்த தும்பை, அவன்
முன்வந்து நின்ருள்!
நிழலெழுந்து நின்றதுபோல்
எழுந்துநின்ருள் ஐயை!
"குன்றெனவே ஆக்கிவைத்தேன்,
சோறுகறி யெல்லாம்;
கொஞ்சமுமங் குண்ணுமல்
இதையுண்ண வந்தீர்!

என்றிலிருந் தெனைவெறுத்தீர்?
எழுந்துவரு வீ"ரென்
றேந்தியகைச் சோற்றையவள்
எற்றியெறிந் திட்டு,
வென்றெழுந்த வேந்தனைப்போல்,
வெளிநடந்தாள்! செம்மல்
வீழ்ந்தவொரு சிற்றரசன்
போல்அவள்பின் போனான்! 18

உயர்மலையின் கொடுமுடியின்
அமைதியைப்போல் ஐயை
ஒருநிமையம் இருந்திருப்பாள்;
ஓவென்றே அலறி,
உயிர்குலைந்த ஓவியம்போல்,
ஒசிந்தபசுங் கொடிபோல்,
ஒல்கிடையாள் தரைசாய்ந்தே
உள்ளமுடைந் தாளாய்,
மயர்வுற,வாய் பதறி'அத்தான்,
அத்தா'னென் றரற்றி,
மைவிழியில் அருவிபொங்க,
மனம்விசிக்க அழுதாள்!
துயருறுமப் பசுங்கிளியின்
தோளைவந்து யாரோ
தொட்டழைத்தார்! உணர்வுவரத்
துடித்தெழுந்தாள்; அங்கே, 19

சிற்றிடையாள் செவந்திநின்றாள்;
உயிர்செகுத்த காட்சி
சிறிதேனும் நடந்ததுபோல்
தோற்றமெதும் இல்லை!
உற்றகுடில்; ஓட்டைப்பாய்;
உருண்டிருந்த பானை;
ஒருபுறத்தில் கொடியினிலே
உலரவைத்த சேலை;
பற்றவையாப் பாழடுப்பு;
பழையவெறுஞ் சால்கள்;
பக்கத்தில் உருண்டுறங்கும்
பால்முகத்துச் சேரன்!
முற்றிலுமே நிகழ்ந்தவெல்லாம்
கனவென்றே உணர்ந்து,
முன்னிருந்த தோழியின்தோள்
முகம்பதித்தே அழுதாள்!

கொட்டிலிலே கட்டியஆ
குரல்கொடுக்கும்; ஆட்டுக்
குட்டிகளோ இங்குமங்கும்
குதித்துவிளை யாடும்!
வட்டியின்மேல் முதல்மிதக்கும்
வறியவனைப் போல
வாழ்க்கையெலாம் வெறுமையெனும்
வழக்குணர்ந்தாள் நங்கை!

கிட்டிநின்ற செவந்திநிலை
கேட்டிடவும், ஐயை
கேள்வனவன் வந்தகதை
போனகதை யெல்லாம்
கொட்டிநின்று, "கனவினிலும்
கொடுமைகளே காண்பேன்
குருவிகளும் மகிழுதடி;
வாழுதடி" என்றாள்! 21

கேட்டிருந்த செவந்திசொன்னாள்;
"கேளிதுகாண் ஐயை,
கெடுதியொன்றிங் கூற்றகுறி
கிளர்ந்தகனா" வென்றாள்!
வாட்டியதாம் ஐயைமனம்;
வருந்தியழ லானாள்!
"வரவேண்டாம் துயரம்அவர்
வாழ்க்கைக்கினி" என்றே
நாட்டிலுள்ள தெய்வமெலாம்
வந்துதவக் கேட்டே
வழுத்திநின்றாள்; நூறுமுறை
வாய்திறந்து கூவி!
கூட்டினிலே ஆவியெனக்
குடியிருந்தான் செம்மல்
கோதையவள் நொடிநொடியாய்க்
குலைந்துவர லானாள்! 22

## 4.

அத்தையை எண்ணி விசித்தழுதாள், அவள்
அன்புக்கு நின்றழுதாள்!

(வேறு)

ஐயையின் தோழி
செவந்தியின் தாயறிந்
தங்குவந் தாளொருநாள்—அவள்
மெய்நலங் கெட்ட
நிலையினைக் கண்டுளம்
மேலுறத் தேற்றிநின்ருள்!—நல்ல
செய்யப சும்பொன்
மிளிர்ந்தது போன்றவள்
செவ்வுடல் சேர்த்தணைத்தே—"அடி
பையவுன் ஆவி
கவர்ந்தவன் வந்துனைப்
பார்த்துமகிழ்ந்திடுவான்!"

என்றுரைத் தையையின்
எண்ணம் புதுக்கினள்!
"இல்லைஇல்லை அவரின்—உயிர்
சென்றும றைந்தது;
சென்றும றைந்ததே"
என்று கதறினளாய்,—"நான்
அன்றொரு தீக்கனு
கண்டதைப் போல
அடுத்தொருநாளுங் கண்டேன்;—வான்
சென்று மறைந்தது
மெய்யென நம்புவேன்
செம்மலின் ஆருயிரே!" 2

"அத்தைவந் தாரக்
கனவினில் நானுமென்
ஆருயிர் உற்றவரும்—மலர்
மெத்தையின் மேலமர்ந்
தின்பமாய்ப் பற்பல
மேவி மகிழ்ந்திருந்தோம்!—உயர்
புத்தம் புதுவுடை
பொன்னகை, கைவளை
பூச்சூடி ஆங்கிருந்தேன்!—என்
அத்தன்வெண் பட்டுடை
மின்னிட வே,யெழில்
ஆர்ந்தரு கேயிருந்தார்! 3

கைகளி ரண்டுமே
    பின்னி யிருந்தன!
    காற்றில் பறந்திருந்தேன்!—"முகில்
மொய்குழ லே,உனை
    நான்மணப் பேன்;இது
    மெய்"எனக் கையடித்தார்!—"என்
செய்கதி ரேநில
    வே,உயி ரே,மணம்
    செய்குவீர்" என்றழுதேன்!—ஆங்
கெய்கணை போலவென்
    அத்தைவந் தார்உளம்
    ஏங்க எழுந்துவிட்டேன்" 4

கேளிது காண்மக
    ளே,உன்றன் மேனிக்கிச்
    சேலை நிறக்கவில்லை;—இது
கோள்"என வெள்ளை
    நிறத்தொரு சேலை
    கொடுத்துடேத்" தென்றுரைத்தார்!—அம்ம!
வாளில் எனைப்பிளந்
    தாலும் மகிழ்குவேன்!
    வெள்ளை உடைகொடுத்தார்—பின்
தோளிலச் சேலை
    புரண்டிடக் கண்டேன்;
    துவண்டுகண் ணீர்வடித்தேன்!" 5

''மற்றவர் சேரனைத்
தூக்கியென் கைதந்து,
'மகளே! இக் குழவியைப்பேண்'—எனச்
சொற்றவர் செம்மலைக்
கைப்பிடி யாய்க்கொண்டு
சென்று மறைந்துவிட்டார்!"—என்
றுற்ற கனவைச்
செவந்தியின் அன்னைக்
குரைத்துக்கண் ணீர்பொழிந்தாள்—தான்
பெற்றவள் அல்லவள்
ஆயினும் துன்பெனும்
பெண்மைக்குத் தாயமுதாள்!

ஆங்கவர் பேசி
யிருக்கையி லே,சிலர்
அங்குவந் துற்றனரே!—சீர்
தாங்கிய அன்னவர்
தம்மில் செவந்தியின்
தந்தையும் நின்றிருந்தார்!—அவர்
''ஈங்கிவள் தான்ஐயை
என்னும் பெயரினள்!
இவளத்தை முத்தம்மையே''—என
ஆங்கவர் சொன்னதும்
அவருள் உயர்ந்தவர்
ஐயைமுன் வந்துரைப்பார்;

"தாங்கிக்கொள் வீர், அம்மா,
துன்பத்தி னொரு
செய்தியை நானுரைப்பேன்;—மலை
தேங்கிய தோளொடும்
வீரச் செறிவொடும்
செம்மலென் பார்இறந்தார்"—!—என
ஆங்குமேல் சொல்லிட
வாயெடுத் தார்; அவள்
'ஐயோ'வென விழுந்தாள்—உடன்
'தாங்கினள் தோழியின்
தாயவள் மார்பினில்!
தண்ணீர் தெளித்தனரே! 8

"வையக மே, விசும்
பே, கதி ரே, இமை
வாங்கும்விண் மீனினமே!—என்
'ஐயை'யென் றேவொரு
பெண்ணைப் படைத்தினிர்?
ஆக்கமென் கண்டினிரோ?"—என
வெய்ய அரற்றி, உ
ரைத்தழு தாளவள்
மீள விழிக்கையிலே!—எதும்
செய்ய வறிந்திலர்;
ஆங்கிருந் தாருடன்
செவந்தியும் சேர்ந்தழுதாள்! 9

அத்தையை எண்ணி,வி
சித்தழு தாள்; அவள்
அன்புக்கு நின்றழுதாள்!—எழில்
முத்தினைப் போலொரு
வித்தைத் தான்பெற்ற
மொய்ம்பைப் புகழ்ந்தழுதாள்—பழஞ்
செத்தையை—தன்னை—
பயனில் பழுதையைச்
சீருடன் பேணியதை—முகம்
பொத்தி யறைந்து,வி
ழுந்தழு தாளொரு
பூவையைப் போன்ம்மகளே! 10

தூறை சுழன்றிருங்
காரிடித் தே,மின்னிச்
சூர்த்துக் கடல்முழுதும்—வந்து
பாறை பொடிப்பொடி
யாகிட மாமழை
யாகப் பொழிந்ததன்பின்—சிறு
தூறல்எ னத்துயர்
மாறி,வி சித்திடும்
தோகைக்கே ஆங்கிருந்தார்—பல
கூறலுற் றார்;அதன்
பின்னவள் வான்வெளி
கூர்த்து வெறித்தமர்ந்தாள்! 11

அந்நிலை கண்டங்கு
முன்னர் உரைத்த
அதிகாரி மேல்தொடர்ந்து—"யார்க்
கெந்நிலை யுற்றாலும்.
யாவும் இறைச்செயல்;
எம்மொழி கேளும்அம்மா!"—என
முன்னுரை கூறிமு
டித்தர சோலையை
முன்வந் துரைத்தளித்தார்!—அஃது
அன்னைக்கும் ஐயைக்கும்
ஐம்பதி னாயிரம்
ஆட்சிக் கொடையென்பதே! 12

"அத்துடன் பிள்ளையைக்
கல்விக் கனுப்பவும்
அரசுத் துணையிருக்கும்!—இனும்
எத்துணை வேண்டினும்
இந்தக் குடும்பத்திற்
கென்றும் உதவிதரும்"—எனப்
புத்துரை கூறியே
நின்றிருந் தார்; அது
பொற்செவி வீழ்ந்திடவும்—"இனி
இத்தரை வாழ்வுக்கும்
என்மனம் பற்ற
இறைவன் தொடுத்ததோ?" 13

—என்று நினைத்தனள்;
எண்ணினள், சேரனை!
இருகை அணைத்தனளே!—வே(று)
ஒன்றுமு ரைத்திலள்!
ஊழ்க்கும்கண் ணீரினள்!
ஊமை அசைவினளே!—அதன்
பின்றை யிருந்தவர்
பேசி முடித்தனர்;
பின்விடை பெற்றனரே!—ஐயை
அன்றுமு தல்,உரை
அதிகம் மொழிந்திலள்!
அன்புரு வாகினளே! 14



## ௫.

அவிந்ததுவே பழையகதை! அழிந்ததவள்பிறவி!
ஐயையெனும் பழம்பெயரில் புதுப்பிறவியானாள்!

(வேறு)

*அழகிழந்த ஓவியமாய்*
*அரியிழந்த மணியாய்*
*ஆற்றாமை குடிபுகுந்த*
*அவலமுறும் நெஞ்சாய்*
*நிழலிழந்த வெறுமரமாய்*
*நீரிழந்த குளமாய்*
*நெஞ்சேறித் துயர்புதைந்த*
*நினைவழுகும் குழியாய்ப்*
*பழகிழந்த பைங்கிளியாய்ப்*
*பசுமையிலா நிலமாய்ப்*
*பனிமதி,மீன், கதிரவிந்த*
*பாழ்வெளிதோய் வானாய்,*
*முழவிழந்த வெற்றிசையாய்,*
*முகிலிழந்த புகையாய்,*
*மொய்த்ததுயர் ஐயையொரு*
*முள்மரம்போல் வாழ்ந்தாள்!*

கொட்டிலில்லை; நிரைகளில்லை;
குன்றுசெல்வ தில்லை;
குட்டியுடன் மறிகளிடும்
குரலொலியும் இல்லை;
கட்டலில்லை எனமலர்கள்
கவின்மலர்த்த லில்லை;
கவலையில்லை; மகிழ்ச்சியில்லை;
கண்துயில்வ தில்லை;
நட்டலில்லை; நகைத்தலில்லை;
நலமுரைப்ப தில்லை;
நாலுவகைக் காய்கறிகள்
நாச்சுவைப்ப தில்லை;
பொட்டுமில்லை; பூவுமில்லை;
பூசுமஞ்சள் இல்லை;
பொக்கெனவே மனமவியப்
பொய்வாழ்வு வாழ்ந்தாள்! 2

மொய்குழலில் நெய்யில்லை;
முழுப்பின்ன லில்லை;
முழுமதியைத் தோற்கடிக்கும்
முகத்திலொளி இல்லை;
ஐவணஞ்சேர் உகிரில்லை;
அணிவளைகள் இல்லை;
அரும்புமுல்லைப் பல்தெறிக்கும்
அழகுசிரிப் பில்லை;

நெய்யூற்றிப் பிசைவதில்லை;
நேரமுண்ணற் கில்லை;
நித்தலுக்கும் இருவேளைப்
பால்குடிப்ப தில்லை;
வெய்துயரால் புலன்முழுதும்
வெறுக்கையுணர் வேற
வெற்றுடலாய்க் குற்றுயிராய்
வெப்புலகில் வாழ்ந்தாள்! 3

எண்ணமில்லை; எதிர்ப்புமில்லை;
எதுமுரைப்ப தில்லை;
ஏற்றமில்லை; மாற்றமில்லை;
இன்பதுன்ப மில்லை;
திண்ணமில்லை; நடையசைவில்
தென்புருப்ப தில்லை;
திகைத்தலில்லை; வியத்தலில்லை;
தெளிவெதிலும் இல்லை;
வண்ணமில்லை உடையினிலே;
வறியவெள்ளை ஆடை!
வாரலில்லை; கூந்தலினை
வகைமுடித்தல் இல்லை;
பண்ணலில்லை; இருத்தலில்லை;
பரபரப்பு மில்லை;
பையனுக்காய் உடலசைந்தோர்
பாவையைப்போல் வாழ்ந்தாள்! 4

செவந்திவந்து சிலபேசிச்
சிறுவனுடன் ஆடிச்
செய்வினைக்குத் துணையிருந்து
செல்வதுடன் நின்றாள்!
உவந்தநிலை சிறிதுண்டால்
ஒருமகனும் சேரன்
ஒளிமுகத்தின் பார்வையிலும்
உரைக்குமொழி யிலுமே!
நிவந்துயர்ந்த அத்தையன்பு
நிழல்படிந்து தோயும்!
நினைவினிலே செம்மலுரு
நெடுங்கல்லாய் நிற்கும்!
அவிந்ததுவே பழையகதை
அழிந்ததவள் பிறவி!
ஐயையெனும் பழம்பெயரில்
புதுப்பிறவி யானாள்! 5

செங்கதிரும் பொழுதுகளும்
வந்துவந்து போகும்;
செழுந்தென்றல் காற்றுவரும்;
வாடையென மாறும்!
பொங்குமதி தேய்ந்திருளும்;
புதுப்பிறைகள் தோன்றும்;
பொங்கல்வரும்; புனல்பெருகும்;
போனவிழா மீளும்!

தங்குளிர்ப் பருவம்வரும்;
தரைமுழுதும் பனிக்கும்;
தாங்குகிலாக் கோடைவரும்;
தனித்தனிப்பின் சேரும்!
இங்கிவைபோல் இயற்கையுடன்
இயற்கையுரு வாக
இமைஇமையாய் நாள்கடந்தாள்;
ஏகினமூ வாண்டே! 6



## 6.

தாய்மொழி பேணுக வென்றாள்!—தன்
தாய்நில உரிமைக்கும் போராடச் சொன்னாள்!

(வேறு)

ஐயையின் பெயரில் ஐம்பதி னாயிரம்
அடுத்துள நகர,வைப் பகத்தில்,
கையெடு கணக்காய் அரசினர் பதிந்தார்;
'காப்பு'—அவள் சேரனுக் கென்றார்!
பையனும் வளர்ந்தான்; பள்ளியில் சேர்ந்தான்;
படிப்படி யாய்ப்பல கற்றான்!
மெய்யுரு வாகச் சேரனை வளர்த்தாள்,
மேவிய அத்தையைப் போல!

ஆடுகள் மாடுகள் மாற்றிய பணமும்
அத்தைவைத் திருந்தநல் தொகையும்
ஓடென உலவிய ஐயைக்கும் மகற்கும்
உணவுடைக் குதவின நெடுநாள்!
ஏடுகள் பையனுக் கிலவய மாக
ஈந்தது மகிழ்வுடன் அரசு!
பாடுகள் இன்றிப் பயன்வரக் கண்டார்;
பலவகை எளிமைமேற் கொண்டார்! 2

வந்துகொண் டிருந்த செவந்தியும் மணந்து
வாழ்வதற் கயல்நகர் சென்றாள்!
நொந்துகொண் டிருந்த உள்ளமின் றில்லை;
நொடிந்திடும் சூழலும் இல்லை!
வெந்தவிந் தெல்லாம் சாம்பலாய்ப் போன
வினைகளே மீளவும் உயிர்த்தால்
வந்துகொண் டிருக்கும் உயிர்களுக் குலகில்
வாழ்வழி எங்ஙனம் இயலும்? 3

காலையில் எழுவதும் மகனையும் எழுப்பிக்
கற்றலில் உதவி,ஊண் தந்து,
சாலையின் வரையவன் மேல்விழி சார்த்திச்
சடுதியில் தன்வினை முடித்தே
மாலையில் அவனெதிர் பார்த்திருந் துவந்து
மனமறிந் தருத்தியே, கல்விச்
சாலையில் அவன்போய்க் கற்றவை மடுத்தே
சாய்வதும் அவள்பணித் தொடரே! 4

(வேறு)

தன்னிலை முற்றும் மறந்தாள்—முன்பு
தான்கண்ட வாழ்வையும் துயரையும் எண்ணாள்!
பொன்னையும் மண்ணையும் ஒன்றாய்—நோக்கும்
போக்கையவ் வுள்ளத்தில் தேக்கிய தாலே,
முன்னையும் பின்னையும் பாராள்!—ஒரு
முறைமையில்—எல்லையில் தன்னை நிறுத்தி
அன்னையும் தந்தையும் ஆகி—மகன்
ஆக்கத்திற் கே,உடல் உயிரையும் வைத்தாள்! 5

படிப்படி யாய்மனந் தேற்றி—அவள்
பையனின் படிப்பிலும் வாழ்விலும் ஆங்கோர்
பிடிப்புற நின்றிட லானாள்!—மழை
பெய்து குளிர்ந்த நறுநிலம் உற்ற
வெடிப்புகள் பொந்துகள் நீங்கி—பயிர்
விளைந்திடற் கேற்ற நிலைபெற்ற தேபோல்
துடிப்புற லாயினள்; நெஞ்சில்—முளை
தோன்றி மகிழ்ச்சி துளிர்விட்ட தங்கே! 6

தன்போலும் முன்பரு வத்தே—சேரன்
தாயினைத் தந்தையை இழந்தத னாலே
அன்பையுந் தாய்மையுந் தேக்கி—அவன்
ஆளாகி வாழ்வினில் மேலோங்கி நிற்கத்
தன்புது நோக்கினை ஏற்றாள்—அதைத்
தன்வாழ்வுக் குற்ற பயனென நோற்றாள்!
மன்பதை வாழ்க்கையில் இன்பம்—தான்
மற்றவர்க் காகியே நிற்றல்—என் கண்டாள்! 7

கண்டபின் கண்ணும் கருத்தும்—வைத்துக்
காத்தவன் கல்வியில் மூத்து விளங்கத்
தொண்டுகள் பற்பல செய்தாள்—ஒரு
தோழியாய் அவனுடன் ஆடவும் செய்தாள்!
வண்டுகள் போலவள் கண்கள்—அவன்
வாய்,முக மலர்களைச் சுற்றியே மொய்க்கும்!
பண்டுதன் வாழ்வினில் காணு—இன்பம்
பையனின் பார்வையில் மொழியினிற் கண்டாள்!

சேரனும் ஐயையின் அன்பில்—நன்கு
செழித்து வளரும் பயிரினைப் போல,
வீரமும் வாய்மையும் அன்பும்—கல்வி
விளக்கமும் கொண்டு விளைந்திட லானுன்!
நேரமங் குற்றிடும் போதில்—பல
நேர்மைப் பெரியோரின் வாழ்வுகள் சொல்லிச்
சாரமுள் ள,பொது வாழ்வை—அவன்
சார்ந்து புகழ்பெறல் நன்றெனச் சொன்ஞள்! 9

தாய்மொழி பேணுக வென்ருள்!—தன்
தாய்நில உரிமைக்கும் போராடச் சொன்ஞள்!
வாய்மைக் குழைத்திடல் ஒன்றே—எவர்
வாழ்விலும் இன்பத்தைச் சேர்த்திடும் என்ருள்!
ஏய்வுறும் பிறர்வாழ்க்கை யெல்லாம்—என்
றென்றைக்கு மே,துன்பம் நல்கிடும் என்ருள்!
தாய்மைச் சிறப்பையும் அன்பின்—உயர்
தரத்தையும் அறிவையும் அவன்பெறத் தந்தாள்! 10

பள்ளிப் படிப்பினில் இன்பம்--வந்து
பாய்ந்திடப் பாய்ந்திடச் சேரனும் மேன்மேல்
அள்ளிப் பருகிட லானுன்--கல்வி
ஆர்ந்திடும் இன்பத்தைத் தாயுக்குஞ் சொன்னுன்!
துள்ளிக் குதித்தது நெஞ்சம்--முன்
தோன்ருத இன்பங்கள் ஐயைக்குத் தோன்றும்!
வெள்ளப் பெருக்கதன் பின்னர்--நிலம்
மேன்மை யடைவது போல்நலங் கண்டாள்! 11

ஒருவழியில் உள்ளஞ் சோர்ந்தார்—மற்
ருெருவழி யில்செலும் துணிவிஇனப் பெற்ருல்
மருவுதல் காணுரோ இன்பம்--பொருள்
மயக்கத்தின் தீர்வன்ருே இன்பத்தின் வேராம்!
உருவங்கள் உணர்வுகள் கோடி!--அவை
உணர்கின்ற உயிர்களின் வழிகளும் கோடி!
ஒருவழி தவறின்மற் ருென்றே!—இறை
உகுத்துள்ள இன்பமும் இயற்கையும் அஃதே! 12

கருவழி யின்பினும் காற்ருய்—உருக்
கரந்துள்ள இன்பம்பல் கோடியுண் டுலகில்!
தெருவழி யில்மட்டிங் கில்லை—உளந்
தெளிவுறின் உயர்மலை முகட்டிலும் இன்பே!
திருவிழி யாமறி வென்னும்—ஒளி
சேர்விழி நன்கு திறக்கப்பெற் ருேர்க்கே
இருவிழி யுயிரினும் என்னும்?—இன்பம்
இணரிண ராய்ப்பூத்துக் குலுங்கக்கா ணுரோ? 13

முன்மனம் அன்பை அவாவி—அதில்
முழுவதும் தோல்விகண் டயர்ந்திட்ட பின்னை
இன்மனம் அறிவை அவாவ—நிலை
யின்பமும் வாழ்வின் நிறைவையுங் கண்டாள்!
தன்மகன் பள்ளிப் படிப்பில்—உள்ளஞ்
சார்புற நின்றவள் தானுங்கற் றுயர்ந்தாள்!
என்மகன் என்குரு வென்றாள்—அவன்
ஏற்றமே தன்னுயிர் ஏற்றமாய்க் கொண்டாள்! 14

அரைகுறை யாய்நின்ற கல்வி—மீண்டும்
ஐயைக்கு மகனொடு வளர்ந்தது கண்டீர்!
உரையுடன் செய்யுளுங் கற்றாள்—பின்
உயர்ந்திடும் இலக்கிய இலக்கணந் தோய்ந்தாள்!
கரையுடைத் தெழுந்ததவ் வார்வம்—கொண்டு
காலையும் மாலையும் இரவிலுங் கற்றாள்!
தரையொடு தரையாகிப் போன—உள்ளம்
தழைத்துப் பொலிந்து மணந்திடக் கண்டாள்! 15

பள்ளிப் படிப்பை முடித்தான்—மகன்!
பாவையும் பள்ளி இறுதியில் தேர்ந்தாள்!
கொள்ளை மகிழ்வதில் கொண்டாள்—இனிக்
கூடிய கல்லூரிக் கல்விக்கென் றயலூர்
கிள்ளையும் மகனுடன் செல்ல—உள்ளம்
கிளர்ந்திட இருவரும் சிற்றூரின் வாழ்வைத்
தள்ளி நகர்செல வெண்ணி—பெற்ற
தாய்வீட்டைத் துறந்திடும் நெகிழ்ச்சிகொண் டாரே!

கொட்டிலை எண்ணிக் குமைந்தாள்—அங்குக்
குதித்தோடி யாடிய குட்டிகள் எண்ணிக்
கட்டிய ஆநிரை தந்த—பால்,
கட்டித் தயிர்,வெண்ணெய், மோரை நினைத்து
நெட்டுயிர்ப் புற்றுளம் நைந்தாள்—காலை
நீட்டிப் படுத்தமுன் திண்ணை நினைந்தாள்!
விட்டகன் றேகுமுன் பார்த்தாள்—பின்
வீதிசெல் .லும்வரை பன்முறை பார்த்தாள்! 17

அன்றைய நாட்களை எண்ணித்—தன்
அத்தையை அவள்தந்த அன்பினை எண்ணித்
தொன்று கழிந்திட்ட வாழ்வை—காதல்
தோற்றிய செம்மலின் மறைவினை எண்ணிக்
குன்றைக் கடந்திடும் போதில்—மேற்
குவித்துள்ள கற்களின் கதையினை எண்ணிச்
சென்றுகொண் டிருந்தனள், ஐயை—விழி
சிந்திய நீரிற் கரைந்தன எல்லாம்! 18



## 7.

எச்சிறு வினைக்கும் தானே எழுந்துபோய்
அச்செனச் சுழன்றான்; ஐயையும் மகிழ்ந்தாள்!

(வேறு)

ஐயையும் சேரனும் நகரினை அடைந்து
துய்யஓர் மறுகில், துலங்கிய ஒருமனை
உரிமையின் பெற்றாங் குறுபொருள் நிரவிப்
பெருமை வாழ்வைப் பிழையறத் தொடங்கினர்!

சேரன் எனுமச் செம்மலின் தோன்றல்
வீரப் பொலிவினால் காளைபோல் விளங்கினான்.
மேனிலைக் கல்வி மிளிர்ந்திட வேண்டிக்
கானிலை யுற்றோர் கலைக்கழ கத்தில்
செழிப்புறத் தாய்மொழிச் செழுந்தமி ழோடு

பழிப்புறு ஆங்கிலப் பான்மை செறிந்தான்!
அறிவியல் தெரிந்தான்; அயல்நா கரிக
வெறியினில் மூழ்கி வெறுமை யுறாமல்
மனநலம் அழியா மாண்பொடு நின்றே
இனநலங் கருதி ஏற்றமுற் றுய்ந்தான்!

இளமை யழகொடும் ஏர்ந்த,ஆண் மையொடும்
வளமுறப் பொலிந்து வாலைப் பருவத்து
அரிமாக் குருளையென் றதர்ந்துலா வந்தான்!
சுரிமயிர், தடந்தோள், சுடர்ந்த திருமுகம்,
கரிமதர்ப் பேறிய கவின்பெறு மார்பு,
திரள்செறி முன்கை, திண்ணிய பொன்னுடல்,
உரன்பெற வலிவுற் றூன்றிய கணைக்கால்,
திமிர்ந்த நன்னடை, திகழொளி தெறிக்கும்
நிமிர்ந்த நோக்கு, நெகிழா உள்ளூரம்,
அமைந்து தோன்றி, ஐயை—அன்னை—
இமையாது கண்டு நெஞ்சுவந் தினிக்கும்
பான்மையின் விளங்கிப் பணிவுற நின்றான்!
கான்முளை அவர்க்கெனை எண்ணிக் களித்தாள்!

குன்றத் தமைதி நகரினில் குலைந்தது;
என்றாலும் ஐயையின் எளிமைச் செவ்வியால்
புதுக்குடிச் சூழல் புதுமையுற் றிருந்தது!
மதுக்குறை யாத மலர்,அவள் என்னினும்

முப்பத் தைந்தாண் டேறிய முதுபெண்
இப்பொழு தையை! ஈரொரு தலைமுடி
நரைகண் டிருந்த தாயினும் நல்லுடல்
புரையிலாக் காத்த இளமையால் பொலிந்தது!
மென்மை உணவினால் மெல்லுடல் தசைபெருத்
தன்மையின் இலங்கித் தகைவுற் றிருந்தது!
தூய வெள்ளாடை துவள உடுத்திய
தாயவள் முகத்தில் இறைமை தவழ்ந்து,
காண்பவர் உள்ளக் கசடுகள் நீக்கியும்
மாண்பைப் பெருக்கியும் மதிக்கச் செய்தது!

'அம்மா' என்றே சேரன் அழைத்திடும்
மம்மர் நீக்கும் மருவிலா ஒருசொல்,
ஐயையின் உள்ளத் தணுவெலாம் நிறைந்து
மெய்குளிர் விக்கும் மேன்மையைக் கண்டாள்!
பொய்யிலா தவன்மொழி அன்பு,அவள் வாழ்க்கை
வெயில்தணி வித்துக் குளிர்நிழல் விரித்தது!
அந்நிழல் அடியில் ஐயையும் அமர்ந்து
வெந்நிலை தவிர்ந்தாள்; இயற்கையை வியந்தாள்!

கல்லூரிக் கல்வி காளைக் கினித்தது;
சொல்லூறி நின்று,அவன் சோர்வைத் தணித்தது!
அன்னையின் தாய்மையும் அன்பும் அமைதியும்
தன்னை நிறைவுறச் செய்ததால் தந்தையின்
அன்பிலாக் குறையை அவனுங் குணர்ந்திலன்.
தென்பவன் உளத்தில் தேங்கி யிருந்தது!

ஐயையைப் பெற்ற அன்னை என்றே
மெய்யாய் எண்ணினான்; மேன்மையாய் நடந்தான்!

அவன்பொருட் டாகவே அன்னை வாழ்ந்திடும்
தவலறு ஈகந் தன்னை உணர்ந்தே,
கற்றிடும் வேளை தவிரக் கனிவினால்
உற்ற தாயுக் குதவியாய் நின்றான்!
எச்சிறு வினைக்கும் தானே எழுந்துபோய்
அச்செனச் சுழன்றான்! ஐயையும் மகிழ்ந்தாள்!

'அம்மா உண்டீரா? அயர்ந்துறங் கினீரா?
எவண்செலல் வேண்டும்?, எதுசெயல் வேண்டும்?'
—எனும்படி அவளை இயைபுற வினவியும்
உணும்படி உரைத்தும் உறங்கிடக் கேட்டும்
கவலை யறும்படி கனிவுடன் வேண்டியும்,
அவளை மகிழ்வித்து, அவள்முகம் மலர்த்தி,
ஈன்றவள் ஒருத்தியே என்னினும் அவட்குத்
தான்,அவள் மகன்றான், தன்தாய் அவள்தான்
என்றே உணர்த்தினான்; ஐயையும் ஈன்றிலா
தொன்றே தன்குறை எனவுணர்ந் துவகை
பெற்றாள்; பெற்றிடாப் பேற்றைப் பெற்றதாய்
உற்றாள்; உணர்ந்தாள்; உலக இன்பெலாம்
வந்து குவிந்ததாய் வாழ்த்தி, இறையருள்
தந்த நிறைவெனத் தானுணர்ந் தாளே!

## 8.

திங்களைத் தாழ்த்தும் ஒளிமுகத்தாள்—நகை
சிந்தி விளுவுதல் கேட்டான்—விழி
சிக்கி யிருந்ததை மீட்டான்!

(வேறு)

சேரன்,ப யின்றிடும் கல்லூரிக் கண்ணொரு
சேயிழை அவனெதிர் பார்த்து—தன்
நெஞ்சை விழியுடன் சேர்த்து—உயிர்
ஆர்த்து—அவன்

ஓர,வி ழிக்கணை தன்முகம் மீதினில்
ஒருமுறை பாயாதா வென்றே—ஒவ்
வொருநாளும் வரும்வழி நின்றே—மனந்
தின்றே—தோள்

சார,நி னைந்தனள்! இக்கதை நேர்வது
சேரன்,எ னுங்காதல் வென்றி—அறி
யான்;அவன் பார்வைக்கே அன்றி—காதல்
ஒன்றி—வேறு

யாருக்குந் தன்னைத் தருவதிங் கில்லென்றவ்
வாயிழை நெஞ்சுரங் கொண்டாள்—நிதம்
அங்காந்து தன்விழி வண்டால்—அன்றும்
கண்டாள்!

மொய்த்த,எ ழில்முகம், நெற்றி,நி லாப்பிறை
மொய்க்கும் இருவிழி வண்டு—முகத்
தாமரை யில்கனி வுண்டு;—மலர்ச்
செண்டு!—கீழ்

வைத்த,மு கைமூக்கு, முத்தின் ஒளிநகை
மூடிய வாய்பழக் கோவை—செவ்
வல்லி நிறம்ஒளிர் பூவை—அந்தப்
பாவை—விழி

தைத்ததின் றே,யவன் கண்ணிலும் மார்பிலும்;
தாங்கில னே,ஒளி மின்னல்—முகந்
தாழ்த்தின ளே;அந்தக் கன்னல்—தலைப்
பின்னல்—தனைக்

கைத்தளங் கொண்டவன் முன்னர்வந் தாள்,உயிர்க்
காதல் வருந்தேரைப் போலே—மனக்
காட்சிநேர் காண,அவன் பாலே—நின்
றாளே! 2

"உங்களைத் தான்வழி பார்த்திருந் தேன்;எனக்
கோருதவி செயல் நன்றே!—அதும்
உண்மையாய்ச் செய்குவீர் இன்றே!—குணக்
குன்றே!"—எனத்

திங்களைத் தாழ்த்தும் ஒளிமுகத்தாள்—நகை
சிந்திவினவுதல் கேட்டான்!—விழி
சிக்கி யிருந்ததை மீட்டான்!—நடை
போட்டான்!—அவள்,

"தங்களைத் தக்கவர் நல்லவர் வல்லவர்
என்றுசொன் ஞர்;நம்பி னேனே! —அது
தான்முழுப் பொய்;முற்றும் வீணே!—கண்டேன்
நானே!—இனி,
உங்களைக் கேட்கிலேன்; மன்னியுங் கள்" என
ஓரடி முன்வந்து சொன்ஞள்.—கணை
யொத்த கருவிழிக் கண்ஞள்;—இடை
மின்ஞள்! 3

"நல்லவ ஞே,இலை வல்லவ ஞே—இதை
நாட்டுதற் கென்செய்ய வேண்டும்?"—என
நாவை அவிழ்த்தவன் மீண்டும்—உயிர்
தூண்டும்—படி
மெல்ல,வி ஞவிஞன்; ஆங்குயிர் மீண்டிட
மேனி சிலிர்த்தனள் தோகை—சூடிக்
கொண்டவ ளாய்வெற்றி வாகை,—மன
ஓகை—கொண்டு,
முல்லை முகைநகைப் பற்கள் தெறித்திள
மூங்கிலெ னுந்தோள்,கு லுக்கி—நகை
மொக்கவிழ்ந் தே,உயிர் விக்கி—உரை
திக்கி—அவள்,
"வல்லவர் நல்லவர் தக்கவ ரை,ஒரு
வாலைப்பெண் என்செயச் சொல்வாள்?—எண்ணும்
வாய்ப்பிலை யோ?"-என்ருள். வில்,வாள்-கொண்டு
கொல்வாள்! 4

மெத்த விளங்கிட, மேலும்ஓர் புன்னகை
மீன்விழிப் பார்வைக்குச் சிந்தி—விழி
மீட்டுக்கொண் டே,நடை முந்தி—உயிர்
கொந்தி—அந்தக்
கூத்து விளக்கங்கு நின்றிடச் சென்றனன்!
கோதையும் மீறிமுன் சென்றாள்!—உயிர்
கொத்தி யெடுக்க முன்நின்றாள்;—வாய்
மென்றாள்—பின்
முத்துமுத் தாகவே கண்ணீர் சொரிந்திட
"முன்வந்து நாண்விட்டுக் கேட்டேன்;—நெஞ்சு
முழுவது மே,அதில் போட்டேன்!--காதல்
வேட்டேன்!--நான்
செத்தாலும் உங்களைத் தான்மணப் பேன்;இந்தச்
செங்கதிர் மேல்ஆணை" என்றாள்!—அச்
செவ்வரிக் கண்ணீர்க ழன்றாள்!—பின்
சென்றாள்! 5

(வேறு)

புத்தமிழ்தப் பெண்ணொருத்தி தன்முன் தோன்றிப்
புகன்றமொழி சேரன்கேட் டதிர்ந்தே போனான்!
"இத்தரையில் இவ்வாறும் நடப்ப துண்டோ?
என்னுடலும் நடுக்கமுற்ற தேனோ" வென்று,
பித்தனைப்போல் தனக்குத்தான் பிதற்றிக் கொண்டான்!
பெருவியப்புக் கொண்டவனாய்ச் சிலைபோல் நின்றான்!
"எத்தகையா ளோ?வென்ன பெயரோ? ஊரோ?
எத்தனைநாள் காத்திருந்தே இதைச்செய் தாளோ?" 6

"முத்துநகை செய்தாளே! அக்கால், என்றன்
முழுவுயிரும் ஏன்மகிழ்தல் வேண்டும்? இந்தத்
தொத்துமிணி தன்னைத்தான் காதல் என்றே,
தொல்லறிவோர் மொழிந்தனரோ? ஐயோ, உள்ளம்
கொத்துகின்ற பார்வையினைச் சிந்தி னளே!
கோதையினுக் கென்செய்தேன்? கொடியோள் என்னைப்
பித்தாக்கி விட்டாளே; நொடிநே ரத்தில்!
பிழைப்பேனே, நான்" என்றே நினைக்க லுற்றான்! 7

"அன்னையவர் ஈதறிந்தால் என்நி னைப்பார்?
அத்தெய்வம் என்பொருட்டே வாழும் அன்றோ!
என்னையவர் உயர்வொழுக்கம் பெற்றா னென்றே
இதுவரையில் நினைத்திருந்தார்; இனியென் சொல்வார்?
என்னை,இது பெரும்பிழையைச் செய்திட் டேனே!
எவரிடம்போய் இதைச்சொல்வேன்? யார்ம திப்பார்?
மின்னையன்றோ பார்வையினால் பாய்ச்சிச் சென்றாள்!
மீளவந்து பேசலுற்றால் என்ன செய்வேன்?" 8

—என்றபடி எண்ணியெண்ணித் துயர முற்றான்.
இருந்தாலும் அவள்நினைவாங் கெழுந்தெ ழுந்து
நின்றபடி மறைந்தபடி இருந்த துள்ளம்
நெகிழ்ந்தபடி இனிமேலும் எண்ண லுற்றான்:
"சென்றபடி சொல்லிவிட்டாள்; நின்றி ருந்தால்
சேயிழையை மற்றொருகால் கண்டி ருப்பேன்!
கொன்றபடி அவள்மனத்தைத் துயர்செய் திட்டேன்;
கொடியனென நினைப்பாளோ?" எனக்-கு மைந்தான்! 9

கல்லூரிக் கன்றவனும் செல்ல வில்லை;
கடுகிமனை மீண்டுசென்றான் நடுக்கத் தோடே!
வல்லூற்றின் கால்சிக்கி விழுந்த குஞ்சாய்
வாயடைத்துத் துடிதுடிக்கும் வகையைப் போல
நல்லியலாள் பார்வைபட்டே ஒருபால் நொந்தான்;
நல்லன்னை நினைத்தொருபால் வருத்த முற்றான்!
மெல்லியலாள் மாலையங்கே அவனுக் கென்றே
மேற்றிசைவான் இருளுமட்டும் காத்து நின்றாள்! 10

உள்ளத்தில் பெருந்துயரோ டுடல்ந டுக்கோ
டுள்வீட்டில் கால்வைத்தான் சேரன்; ஐயை
துள்ளியெழுந் தோடிவந்தே தோளைத் தொட்டாள்;
துணுக்குற்றாள்; உடல்கொதித்த துள்ளம் நைந்தாள்!
கள்ளமிலா அன்புடையாள் "காய்ச்ச லோடு
கல்லூரிக் கேன்சென்றாய், தம்பி?" என்றாள்!
வெள்ளமெனக் கண்களில்நீர் வடிக்க லுற்றாள்!
வெந்நீரில் மருந்துதந்து படுக்க வைத்தாள்! 11



௯.

நின்றவனை நோக்கிநின்றாள், நேரிழையாள்! நோக்கியவளைக்
குன்றுதோ ளானுமங்குக் கூசாமல் கண்டுநின்றான்!

(வேறு)

அன்றைப் பகலும்
அடுத்த இராமுழுதும்
ஒன்றினையும் எண்ணாமல்,
ஒன்றினையும் செய்யாமல்,
ஐயை உறக்கமின்றி
அண்டைசென்று நிற்பதுவும்,
கையையவன் நெற்றியின்மேல்
வைத்துக் கவல்வதுவும்,

''என்னப்பா வேண்டும்? உடல்
எவ்வா றுளதென்றும்,
'தின்னுபழம்' என்றும், பால்
தித்திப்புண் டா?''வென்றும்,
அவ்வப் பொழுதவனை
அன்பொழுகக் கேட்பதுடன்,
'ஒவ்வாதிக் காற்றென்றே,
சாளரத்தை ஓடிப்போய்
மூடி, யொரு போர்வையினைச்
சேரனுக்குப் போர்த்துவிட்டே,
வாடியுளஞ் சோர்ந்தே
வருவதுமாய்ப் போவதுமாய்
ஆங்கிருந்தாள். சேரனோ
அன்னை படுந்துயரம்
தாங்குகிலா உள்ளத்தால்
தன்னைமிக நொந்துகொண்டான்!
''என்றாலும் நான் அவளை
ஏறெடுத்துப் பார்த்தங்கு
நின்றிருக்கக் கூடாது;
நின்றிருந்தா லும்அவள்பால்
பேசியதோ மிக்கபிழை!
பேசாமல் வந்திருந்தால்
கூசியுடன் சென்றிருப்பாள்''
என்றுமனம் கூறியது!

பின்னோர் நொடிநேரம்
பேசா தமைந்திருந்த

இன்னோர் மனம் அவன்பால்
இவ்வா றெடுத்துரைக்கும்:

"ஆனாலும் என்னை
அவளே மிகவிரும்பி
நாணாமல் வந்தென்பால்
நட்ட நடுத்தெருவில்
நிற்கவைத்துக் கேட்ட
நிலையை உணர்ந்தாலும்,
விற்கணையை விட்டதுபோல்
பார்த்த விழியிரண்டில்
கண்ணீர் கசிந்தநிலை
ஆழ்ந்து கணித்தாலும்,
'உண்ணோர்என் ஆவி
உகுத்தாலும் உங்களையே
நான்மணப்பேன்' என்று
நடுக்கதிர்மேல் சூளுரைத்துப்
போன திறமெண்ணிப்
பார்த்தாலும், பொற்றொடிக்கு
வாய்ந்திருக்கும் அன்பிற்கோர்
வன்மலையுந் தாழ்ந்ததென்பேன்!
ஏய்ந்த பசுங்கொடிக்கே
என்னகுறை? நான் அவளை
ஏன்மணக்கக் கூடாதாம்?"
என்றவனைக் கேட்டதுளம்!
வான் இடிபோல் உள்மனங்கள்
வந்திடிக்கும் சொல்கேட்டான்!

பின்னும் முதல்மனமே
ஆங்கெழுந்து பேசியது:

"அன்னை நினைவை
அடியாய் மறந்தனையா?
உன்னை வளர்ப்பதற்கும்
உன்றன் படிப்பினிற்கும்
என்னைத் துயருற்றார்!
ஈகஞ்செய் தார்,தம்மை
நீ,மறந்து போகாதே"
—என்று நிகழ்த்திடவும்
தீயுறழ்ந்து காய்ச்சுதல்போல்
எண்ணத் தெறவெழவே,
"நான்மறவேன்; நான்மறவேன்"
என்று வெளிப்படையாய்,
ஆன்று கதறிவிட்டான்!
ஐயை துடிதுடித்தே,

"என்ன தம்பி! என்ன இது?
எவரை மறவாய்,நீ?
என்ன கனவுகண்டாய்"
என்றவனின் நெற்றியைப்போய்த்
தொட்டுப்பார்த் துள்ளம்
துணுக்குற்றுக் "காய்ச்சலின்னும்
விட்டபா டில்லையே!
நான்போய் விரைவாகத்

தக்க மருத்துவராய்ப்
    பார்த்துத் தமையழைத்து,
ஒக்கபடி மீள்வேன்;
    உறங்குக,நீ''—என்றுரைத்தே,
மாற்றுத் துணியுடுத்தி
    மங்கை திரும்புகையில்
வேற்றொருவர் யாரோ
    வெளிக்கதவைத் தட்டிநின்றார்!

ஆங்குடன்போய்த் தாழ்திறந்தாள்!
    ஆய்ந்த எழிலெல்லாம்
பாங்கமைந்த ஓவியம்போல்,
    பண்ணிவைத்த பொற்சிலைபோல்,
கன்னி ஒருத்தி
    கதவருகில் நின்றிருந்தே,
புன்னகைசெய் தே,மகிழ்ந்து
    பொத்தியிரு கைகூப்பிச்
செம்மா துளைவாய்
    விரித்து சிரித்ததுபோல்,
''அம்மா, வணக்கம்;நான்
    அண்டைத் தெருவிலுள்ளேன்!
உங்கள் மகளோ
    டுடன்பயிலும் மாணவி,நான்!
எங்கள்பே ராசிரியர்
    ஏன்சேரன் நேற்றுவர
வில்லையென்று கேட்டறிய
    வீட்டுக் கெனைவிடுத்தார்!

தொல்லையுடற் கில்லையே?"
    என்றவளும் தோதாக,
ஐயயினைக் கேட்டாள்!
    அயர்ந்துநின்றே ஆங்கவளும்,
பையவிழ்ந்த தாமரையைப்—
    பாலுமிழும் வெண்ணிலவை—
மேயுமிரு மீன்விழியை—
    மேலொளிர்ந்த வில்நுதலை
ஆயும் வகையால்
    அரைநாழி நோக்கியபின்
கன்னியவள் கூற்றில்
    கலந்திருக்கும் உள்ளுணர்வை
உன்னி உணர்ந்தவளாய்
    உள்ளத் துவகையெழப்
பேசுதற்கு வாயெடுத்தாள்;
    ஆங்கதற்குள் பிள்ளையவன்
மூசுகின்ற பேச்சையெல்லாம்
    முன்னிருந்தே கேட்டவனாய்,
"அங்குவந்த தார்,அம்மா?"
    என்றே அடிக்குரலில்
பொங்குகின்ற உள்ளுணர்வைப்
    போர்த்துவெளி மூடியவா
றுள்ளிருந்து கேட்டான்!
    உவகை நெளிந்தோட,
கள்ளவிழ்ந்த கோதை
    கருத்துக்கும் ஒத்தபடி

"யாருமில்லை, தம்பி!
மருத்துவரே வந்துவிட்டார்;
பார்,வந்தே" என்றுசொல்லிப்
பாவைவாய்க் கைமூடி,
நின்றிருந்தாள் ஐயை!
நீண்டநொடி செல்லவில்லை!
முன்றில்வந் தே,தன்
முகங்காட்டி நின்றுவிட்டான்!

நின்றவனை நோக்கிநின்றாள்,
நேரிழையாள்! நோக்கியளைக்
குன்றுதோ ளானுமங்குக்
கூசாமல் கண்டுநின்றான்!

ஆங்கவனின் நோக்கும்
அணிமயிலின் தன்னோக்கும்,
தேங்குமுத வாயில்
தெறித்த உணர்வுகளும்,
மெல்லிதழ்கள் வீசுகின்ற
மின்னோட்டப் புன்னகையும்,
நல்லியலாள் தான்காண
நாணுற் றிருந்ததையும்,
ஐயை,உடன் கண்டுணர்ந்தாள்!
"அன்னையவர் கண்டுகொண்டார்;

பொய்யுரைத்தல் கூடா''தென்
றெண்ணிப் புறத்தினிலே,
நேர்ந்ததொன்று மில்லான்போல்,
நெஞ்சம் நிலைநிறுத்தி
''ஆரிந்தப் பெண்,அம்மா?"
என்றே அவன்கேட்டு,
மீள ஒருமுறையும்
மின்னாளைப் பார்த்துநின்றான்!
நீளச் சிரித்தபடி
ஐயையவள் நேர்திரும்பி,
''நீயேசொல்''—என்றவளை
நேர்க்குநேர் நிற்கவைத்தாள்!
வாயே எழாமலந்த
வாலை முகங்கவிழ்ந்தாள்!

''இங்கிவளை நீயும்
இதற்குமுனம் பார்க்கிலையோ?''
அங்கவனை இவ்வாறாய்
அன்னையவள் கேட்க,அவன்
கீழே குனிந்தபடி
கால்விரலால் கீறிநின்றான்!
யாழே நகைத்ததுபோல்
யாப்புநகை ஐயைசெய்தாள்!

பின்னவளை ஐயையங்குப்
பின்னறைக்கே இட்டேக,

அன்னவனும் பின்தொடர்ந்தான்!
ஆங்கவன்பால் தாய்திரும்பிப்
போய்,நீ படுத்துறங்காய்!"
—என்றே புறம்விடுத்தாள்!

தாயும் அவளும்
தனித்தவனை விட்டபடி,
நீண்ட நெடுநேரம்
பேச்சு நிகழ்த்தியபின்,
ஆண்டந்தப் பூங்கொடியோ(டு)
ஐயை,வா யில்வரைபோய்,

நின்று வழியனுப்பி,
நேராய் அவனறைக்குச்
சென்றவளும் பார்த்திடவே,
சேரன் துயில்வதுபோல்
பொய்யாய் விழிமூடிப்
போர்த்துப் படுத்திருந்தான்!
ஐயை உளம்பதறி
ஆங்கருகில் சென்றவன்,தோள்
மெல்லவே கைதொட்டாள்!
மேனி குளிர்ந்திருக்க
முல்லை முகையவிழ்ந்தாள் முன்பு!

## 10.

(வேறு)

நச்சும் இளமையில் செம்மலைத் தான்கண்ட
நாட்களை மீண்டும் நினைத்து வந்தாள்!

பச்சைப் பசுமயில் போன்றவள் சேரனைப்
பார்த்திடக் காலையில் வந்ததையும்,
எச்சில் விழுங்கியவ் வேந்திழை யாளையவ்
வேந்தலும் பார்த்துவாய் மென்றதையும்,
மெச்சி மிகமகிழ்ந்(து) ஐயையும் தான்துயில்
வேளையில் எண்ணிச் சிரித்திருந்தாள்!
நச்சும் இளமையில் செம்மலைத் தான்கண்ட
நாட்களை மீண்டும் நினைத்துவந்தாள்!

கொச்சிமஞ் சள்குழைத் தே,முகம் பூசிச்செஞ்
சாந்தணிந் தே,விழி மையெழுதி
அச்சினில் வார்த்த,பொன் மேனியில் சிற்றுடை
ஆர்ந்திடச் செம்மல்முன் நின்றதுபோல்,
பச்சைக் கிளிவந்து நின்றிடப் பார்த்தவன்
பக்கலில் நின்றதன் தாய்மறந்தே
உச்சிமுதல் உள்ளங் கால்வரைக் கண்டுளம்
ஊறிய தென்னணி உளம் மகிழ்ந்தாள்! 2

தோளில் அணைத்திடுஞ் சின்னஞ் சிறுவனுய்த்
தோன்றி யிடைசுற்றி வந்ததையும்,
நாளில் அவனொரு காளைய னுகி,யந்
நங்கைமுன் நின்றநல் காட்சியையும்,
வாளில் சிதைப்பது போல்விழி யால்,அவன்
மார்பைச் சிதைத்தவள் வாய்மொழியும்,
நீள நினைத்தவள் நெட்டுயிர்த்தாள்; அந்த
நேரிழை தும்பைக் குளம்நெகிழ்ந்தாள்! 3

முத்தைப் பழித்த முறுவல் செய்தே,அவள்
முன்பு நடந்த கதையனைத்தும்,
நித்தநித் தம்அவன் பார்வைக்கு நூலிடை
நேரும் வழியெதிர் பார்ப்பதுவும்,
பித்த வெறியுடன் தன்னிடம் கூறி,அப்
பேதை மணஞ்செய்ய வேண்டியதும்,
அத்தை யிடமன்று சொன்னது போலவே
ஆயிழை சொன்ன திறம்வியந்தாள்! 4

நீல இருவிழி சோரும்வரை, அவன்
நின்றிருந்த எழில் தான்பருகிக்
கோல மயில்நெஞ்சின் ஏக்கந் தணியாமல்
கொஞ்சநே ரம்பேசக் கெஞ்சியதும்,
"காலம் வரட்டும்,நீ காத்திருப் பாய்"எனக்
கன்னிக் குரைத்து மறுத்ததுவும்,
ஏல மொழிவிழி நீருகுத்தே, பின்னர்
ஏகியதும் எண்ணி நெஞ்சவிழ்ந்தாள்! 5

வெள்ளிநிலாமுகப் பெண்ணவளைக் கண்டதும்,
வீசிய காய்ச்சலும் தண்புனலில்
கொள்ளி யணைந்தது போலடங் கிக்குளிர்
கொண்டதும், பொய்த்துயில் கண்டதுவும்,
பள்ளி துறந்துகல் லூரிசென் று,ஒரு
பாண்மையில் காலஞ்செய் கோலமதும்,
உள்ளி மகிழ்ந்தனள்; ஐயையும் பின்துயி
லுற்றனள்! சேரன்துயின் றிலனே! 6

11

'காயென்று மறந்துவிடு; கனியுனக்குக்
கைக்குவரும்; காத்திருப்பாய்; எழு,செல்' என்றாள்

'கண்காட்டும் மீனுக்கும் வட்டநி லாமுகக்
காமனுக் கும்முகம் காட்டிவிட்டால்,
பெண்காட்டும் கற்பில் பிழைகாட்டிப் பேசியே
பெயராப் பெரும்பழி கூறிடுவார்
மண்காட்டும் பெண்டிர்'—எனக்குளத் தாமரை
மலர்முகம் காட்டாத பொற்பறிந்து,
விண்காட்டும் செங்கதிர்க் கைகளி னலதன்
வீழ்முகந் தூக்கி மலர்த்தினனே!

காலை மலர்ந்ததும் அன்னையின் முன்முகங்
காட்டுதல் யாங்ஙனம் என்றுமகன்
ஆலை யிடைக்கரும் பாகி நசுங்கிடும்
அந்நிலையில் ஒளிசேர் முகமும்
பாலை நிகர்த்திடும் வெள்ளுடை யும்பூண்டு,
பையன் அறைக்குள்ளே ஐயைவரக்
காலை யிரு கையால் தொட்டு வணங்கியே
கண்ணீர் வடித்திட நின்றிருந்தான்! 2

கண்களில் நீர்வரக் கண்டதும்,தீயினிய்
கைபட் டெடுத்த துடிப்புடனே
பெண்களின் பெண்மை யனைத்தும் நிரம்பிய
பெற்றியி னாள்,அவன் தோளணைத்துக்
"கண்மணி யே,அழத் தக்கதொன் றில்லை;உன்
காய்ச்சலெவ் வாறுள" தென்றவனின்
கண்களைத் தன்மலர்க் கையில் துடைத்தவள்
காந்த முகத்தினை ஏந்திநின்றாள்! 3

அன்னை முகத்தினை நேர்முக மாய்,அவன்
அண்ணாந்து நோக்கிய போழ்தில்,ஒளி
மின்னல் இருவிழி யாகவும், செங்கதிர்
மேவிய தோர்முக மாகவும்,கால்
துன்னி யிருப்பதுங் கண்டனன்; கண்டதும்
தூக்கி யிருகை வணங்கி நின்றே
'அன்னாய்! பிழைபொறுப் பீர்"என வேண்டி
யழுதனன்; ஆங்கவள் தேற்றினளே! 4

(வேறு)

"நீயிங்கே ஒருபிழையும் செய்ய வில்லை,
நினைத்தபிழை யல்லால்! என் கண்ணே, நான், உன்
தாயிங்கே உரைக்கின்றேன்; மனந்தேற் றிக்கொள்;
தந்தையைப்போல் நன்குபடி; பெருமை பெற்று
வா, யிங்கே; நீவிரும்பும் பெண்ணை அக்கால்
வரித்துக்கொள்; இன்றிந்த வஞ்சி தன்னைக்
காயென்று மறந்துவிடு; கனியு னக்குக்
கைக்குவரும்; காத்திருப்பாய்; எழு; செல்!" என்றாள்! 5

வில்துவண்டு நின்றதுபோல் எழுந்து நின்றான்,
வீரமகன்; அன்னைமுகம் ஒருகால் பார்த்தான்!
சொல்துவண்டான் அவையெல்லாம் நகைக்கக் கண்டு
சோர்வுற்று நடந்ததுபோல் நடந்து சென்று
பல்துலக்கிக் குளித்துடுத்தான்; அதற்குள் ஐயை
பண்ணியங்கள் செய்தவன்முன் கொணர்ந்து வைத்தாள்!
கல்தவிர்த்துத் தின்பவன்போல் தின்றெ ழுந்தே
கல்லூரிக் கன்னையிடம் சொல்லிச் சென்றான்! 6

'அத்தையிடம் சொல்லாடித் தணந்து சென்ற
அவன்தந்தை செம்மலைப்போல் இலையென் றாலும்,
மெத்தவுரை கூறாமல் இரண்டோர் சொற்கள்
மேலுக்குப் பேசிவிட்டுச் செல்கின் றானே!
எத்திறமோ ஆண்கள்திறம்? பருவம் வந்தால்
இளம்பெண்ணைத் தாயினும்மேல் என்பார் போலும்!
அத்திறத்தான் இவனில்லை, எனினும் நாட்கள்
ஆகட்டும்; சரியாய்ப்போம்" என்றாள் ஐயை! 7

கல்லூரி செல்லுகின்ற வழியி லெல்லாம்
காலையவன் நெஞ்சினிலே தாயும், கண்ணில்,
சொல்லூறி யாழுரையாய் மிழற்றி னாளே,
சொக்கப்பொன் மேனியினாள் அவளும், நிற்க,
வல்லூற்றின் விழிகொண்டே அவள்நிற் கின்ற
வான்தோய்ந்த மரத்துநிழல் பார்த்துக் கொண்டே,
நல்லாளை "மறந்துவி"டென் றன்னை சொன்ன
நயமில்லாச் சொல்லையசை போட்டுச் சென்றான்! 8

"விழிமறந்து, மின்மறந்து, நுதல்ம றந்து
வில்புருவந் தனைமறந்து, தாம ரைவாய்
மொழிமறந்து, முல்லைமுகைப் பல்ம றந்து,
முறுவலிக்கும் செம்பவள இதழ் மறந்து,
வழிமறந்தே அவள்நிற்கும் நிழல்ம றந்து,
வந்தென்னைக் கேட்டவொரு வினும றந்து,
பழிமறந்து, செயல்மறந்த பின்னை யன்றோ
பாவையினை நான்மறத்தல் இயலும்" என்றான்! 9

"தாயன்று சொன்னசொற்கள் தம்மை யெல்லாம்
தனித்தனியாய் எண்ணியெண்ணி விளங்கிக்
[கொண்டேன்!
காயென்று சொன்னாரே, பழுத்து நிற்கும்
கனியைப்போய்; அதன்விளக்கம் தெரிய வில்லை!
போயன்று தனியறையில் அவளி டத்தில்
புகன்றதென்ன வாயிருக்கும்? தானே வந்தால்
நாயென்று தள்ளுவதோ? காத லுக்கே
நாணமென்ன? தடையென்ன?" எனநினைத்தான்! 10

"பெண்ணொருத்தி தானேமுன் வந்து சொன்னால்
பேரன்பும் பிழைபட்ட தாமோ? காதல்
பண்ணொருத்தி முன்னிசைத்து விட்டா ளென்றால்
பண்கெட்டுப் போய்விடுமோ? பறந்து சென்றே
விண்ணொருத்தி ஆய்ந்துவரும் இக்கா லத்தில்
வெளிப்படையாய் ஒருத்திவந்து காதல் பேசில்
கண்ணுறுத்திப் பார்த்துலகம் பழித்தல் நன்றோ?
கணித்திருக்க வேண்டும்,அன்னை-"எனநி னைத்தான்! 11

நினைத்தபடி நாளுமவள் வந்து நிற்கும்
நிழல்செறிந்த மரத்தினடி நின்று பார்த்தான்!
சினைத்தலர்ந்த முல்லையினைச் சுமந்து நிற்கும்
செழுங்கூந்தல் நிலவுமுகம் காண வில்லை!
"எனைத்தளர்த்தி விட்டாளோ? அன்னை சொல்லால்
இனிமறந்து விடுவாளோ?" என்றே எண்ணி
முனைத்தகன்று செல்வானின் தோள்மேல் ஓர்கை
மொத்தென்று விழத்,திரும்பச், சோழன் நின்றான்! 12


சோழனவன் கல்லூரித் தோழன்; நல்ல
சொலல்வல்லன்; தமிழ்மன்றச் செயலன்;ஆனால்
ஏழையவன்; கல்வியிலே எடுப்பாய் நிற்போன்.
"ஏன்,சேரா! யாரையிங்குப் பார்த்து நின்றாய்?
தாழைமலர்ச் சிரிப்பொருத்தி வீசு வாளே
தளிர்க்கொடியாள் அவளையா?"—வென் றன்பாய்க்
[கேட்டான்!
வாழையிலை கிழிந்ததுபோல் மென்மை உள்ளம்
வாய்ந்திருந்த சேரன்மனம் கிழிந்த தங்கே! 13

நெஞ்சதிர்ந்து நின்றவன்பால் சோழன் மீண்டும்
"நேற்றைக்கேன் வரவில்லை? நாளை மாலை
கொஞ்சுதமிழ்ச் சொற்பொழிவு நிகழ்த்த உன்னைக்
குறித்துள்ளேன்; அறிக்கைவரும்; அணியந் தானே?
அஞ்சாதே பே"சென்றே தோளைத் தட்டி
ஆர்வமெழ ஊக்கிநின்றான்; அவன்பால் சேரன்
கெஞ்சுவது போல்—தவிர்த்தான்; மறுத்தான் நண்பன்!
கேட்டதன்பின் தலைப்புரைத்துச் சென்றான் சோழன்! 14

ஒண்டொடியாள் மேல்கவிந்த உயர்ந்த எண்ணம்
ஒருநொடிக்குள் தகர்ந்ததெண்ணி வியந்து போனான்!
கண்டெனவே அன்னைசொன்ன கனிவு ரைக்கும்
காதுகொடா திருந்தவுள்ளம் சோழன் தந்த
மண்டையடி யால்குலைந்து சுக்கு நூறாய்
மண்ணொடுமண் ணாய்ப்புதைந்த நிலையை யெண்ணித்
தொண்டையிலே சிக்கிநின்ற எலும்புத் துண்டு
தும்மலிலே விழுந்ததைப்போல் நிறைவு கொண்டான்!

ஆனாலும் அவள்பற்றி அறிய வேண்டி,
அவாவுற்றுச் சோழனைப்போய் விளக்கம் கேட்டான்!
"போனாலும் போகட்டும்; இதன்மேல் அந்தப்
பொல்லாத சிறுக்கியை,நீ நினைத்தல் வேண்டாம்!
தேனாகக் 'குறிஞ்சி'யென்று பெயர்வைத் துள்ளார்!
தெரியாதார் கைப்பொருளை உறிஞ்சித் தீர்ப்பாள்!
நானாகத் தான்கேட்டேன்; நன்றா யிற்று!
'நாளைக்குப் பார்ப்ப'மென நவின்று சென்றான்! 16

கோதையினைப் பற்றியவன் சொன்ன சொல்லும்
'குறிஞ்சி'யினை 'உறிஞ்சி'யென்ற நகைக்கு றிப்பும்,
பாதையிலே நடக்குமட்டும் சேரன் நெஞ்சில்
பந்தாடிக் கொண்டிருக்க நகைத்துக் கொண்டான்!
காதினிலே ஈப்புகுந்து குடைந்தி ருந்து
கடைசியிலே செத்துவெளி வந்ததைப் போல்,
ஓதையுற்றே ஓய்ந்தமனம் அமைதி கொள்ள,
ஒளிர்ந்ததங்கே அன்னைகொண்ட உண்மை அன்பே! 17



## 12.

**உன்னைக் கவர்ந்தாளின் உள்ளத்தை நீ கவர்தல்**
**உண்மை அன்பும் அறிவுமாம்!**

*"நாளைக்கு மாலையில் நடக்கின்ற சொற்பொழிவில்*
*நானும்உரை யாற்றுகின்றேன்—அந்த*
*வேளையில் நீங்களும் உடன்வந்து கேட்டென்றன்*
*வெற்றிக்கு வாழ்த்திடுங்கள்"—எனத்*
*தோளைமுன் வைத்தன்று மாலைதன் அன்னையைச்*
*சேரனும் வேண்டிநின்றான்!—அந்த*
*நாளையும் தானெதிர் பார்த்தவ ளாய்,ஐயை*
*'நல்ல'தென் றே,வுரைத்தாள்!*

காலையிற் செல்கையில் கலகலப் பின்றியே
    காணப்பெற் றிருந்த மகனும்—அன்று
மாலையில் உள்ளமும் முகமும் தெளிவடைந்த
    மாற்றத்தைக் கண்டு மகிழ்ந்தே—"இன்று
சாலையில் அவள்வந்து நிற்கவில் லை,யென்னும்
    சான்றிதாம்" என்று ணர்ந்தாள்!—பசும்
பாலையென் வயிற்றினில் வார்த்தனள்" என்றந்தப்
    பாவை'யும் வாழ்த்தி உவந்தாள்! 2

இரவினில் உணவுண்ணும் வேளையில். மகனிடம்
    இரக்கமும் அன்பும் கலந்து—ஒரு
கரவிலா உணர்வுடன் "கண்மணி நானுனைக்
    காலையில் கடிந்தவற் றுள்—பிழை
விரவிட வில்லையென் றெண்ணுவேன்; உண்டெனில்
    என்னுரை பொறுத்து, மறப்பாய்!"—என
இரவுரை கூறவும் இருகை வணங்கியே
    "இலை, அம்மா! இல்லை" என்றான்! 3

"பிழையிலா, மகனே! கேள்; பெண்பிறவி என்றுமே
    பீடுற்ற உயர்ந்த பிறவி!—பெய்
மழையிலா நிலம்போல, மணமிலா மலர்போல
    மாண்பிலாப் பெண்மை யாகும்!—வெறுந்
தழைகுலா வியசெடி மகிழ்விலா தெவர்க்குமே!
    தாய்மையோ பெண்மை முதிர்ச்சி!—ஆண்
விழைவிலா தெதிர்வரும் பெண்மையால் துன்பமே!
    வேட்கையும் பெண்மைக் களவே!" 4

"மென்மையே பெண்மையாம்; தண்மையாம்; எல்லைமிகின்
மிகுகேடு சூழும்உலகம்;—இனி
வன்மையே ஆண்மையாம்; தெறலுமாம்; அளவுமிகின்
வலிமைசூழ்ந் துயிர்க ளழியும்!—எனின்
மென்மைக்கு வன்மையும், வன்மைக்கு மென்மையும்
மிகுதுணை; மிகுகாவலாம்!—இத்
தன்மையை அறிகிலார் எவராயி னுந்துயர்
தப்பாமல் உறுவர்; அறிக!" 5

"அடக்கமே பெண்மைக் கழகும், உயர்வுமாம்!
அடங்கிலாப் பெண்மை அழியும்!—உயிர்த்
தொடக்கமும் முடிவதும் பெண்மையால்; இடைவாழ்வு
துலங்குதல் ஆண்தன்மை யால்!—கரை
கடக்கக் கருதுதல் பெண்தவிர் பெண்மையும்
ஆண்தவிர் ஆண்மையும் காண்!—இடை
நடக்கும் இழிவெலாம் நலிவுக்கு வித்துமாம்!
நடுநின்று ஆய்வரறிவார்!" 6

"ஒன்றுமிகின் ஒன்றுகும்; ஒன்றிழியின் ஒன்றுகும்!
ஒன்றடுத்த தொன்றின்வாழ் வாம்!—ஒவ்
வொன்றும் பெருமையுற உலகம் செழித்துயரும்!
உயர்தாழ்ச்சி யுறலறிவுமாம்!—இவை
அன்றுமே உண்மையாம்; இன்றுமே உண்மையாம்!
அடுத்தென்று மே,உண்மை யாம்!—இதை
என்றும் மறவாதே! ஒழுக்கம் இறவாதே!
இம்மியும் இழிவுறாதே!" 7

"நின்னை ஒருத்திக்கு நீதந்தால் அவளவனை
நினக்குத்தந் துன்னைப்பெறுவாள்—பெண்
தன்னை முதல்தருதல் தாழ்ச்சியாம்; வீழ்ச்சியாம்;
தாளாத பெருந்துன்ப மாம்!--உன்
அன்னை உரைக்கிறேன், அன்புடை மகனே,கேள்;
அணங்குபின் செல்லல் இழிவாம்!—இனி
உன்னைக் கவர்ந்தாளின் உள்ளத்தை நீகவர்தல்
உண்மையன் பும்;அறிவு மாம்!" 8

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்றறம்
பேசுவதைக் கேட்ட திலையோ?--ஒரு
பெண்ணோர் நிலைநிற்பின் பெருமையாம்; நிலைதவறின்
பெண்ணே பெருஞ் சிறுமையாம்!—வெறும்
மண்ணே எனமதிக்கப் படுவள்காண்! கெடுவள்காண்!
மாண்பற்றே அழிவ ளெனக்காண்!—என்
கண்ணே! உனைத்தடுத்துக் காத்தேனஃ துன்பொருட்டே!
கவலற்க; கல்வி தேர்க!" 9

—என்றே அறங்கூறி ஐயையுந் தன்மகனை
எதிர்வந்தே உச்சிமோந்து—"உயிர்க்
குன்றே!நான் உனக்காக வே,உயிர் வாழ்ந்துவரும்
குறிக்கோளை அறிந்து கொள்க!--நீ
நன்றேவாழ்ந் தென்றும்உன் தந்தையின் பெயருடன்,
நற்றாயின் 'தும்பைப்' பெயரும்—இங்
கென்றும் நிலைத்திருக்கச் செய்வாய்;இவ் வன்னையின்
எண்ணமும் இன்பும் அதுவே" 10

—இன்னே உரைத்தவளும் விழிநீர் உகுக்க,மகன்,
"என்தெய்வ மே,அன்னையே!--வாழ்
மன்னே!மங் கையர்குலத்தின் மாண்பேகற் பவிழாத
மாணிக்க மலையின் வடிவே!—நான்
கொன்னே அறிவிழந்து செய்தபிழை நன்குணர்ந்து
கொண்டேன்; இனிச்செய்கி லேன்.—என்
அன்னே! எனைப்பொறுப்பீர்! ஆட்கொண் டருள்வீ"ரென-
அடிவீழ்ந்து வணங்கினனே! 11

வணங்கும் மகனையவள் வாரி நிலைநிறுத்தி
"வளர்கின்ற திருவே! உன்னை--நறுங்
குணங்கொள் மகனெனவே என்றும் நினைத்திருப்பேன்!
குறைவிலா துயர்ந்து வாழ்வாய்!--திரு
மணங்கொள் நிலையுனக்கு வருநாள் வரைக்குநிலை
மாறா திருந்து, சிறந்தே,--ஒத்த
கணங்கொள்; பெருமை பெறு"கென்றாள் கனிவுநிறை
கன்னிமைப் பெண்தெய்வமே! 12



# 13.

மாணவர் நிலைக்கு மங்கையும் வருந்தி
பேணுவ தில்லாப் பெற்றோர் இகழ்ந்தாள்!

(வேறு)

எல்லா மருங்கிலும் எழில்தோ ரணத்துடன்
கல்லூரி அரங்கம் கவின்பெற் றிருந்தது!
மேடைப் புனைவும் மிசைமலர்க் கொத்தும்
ஆடை விரிப்பும் அலையொலி பரப்பியோ
டனைத்தும் நிறைந்தே அணிபெறத் திகழ்ந்து,
முனைத்தெடு விழாவின் முழுமை காட்டின!

நிமைய நிமையம் இளைஞர்கள் நிரம்பி,
அமைவுடன் அமர்தல் அழகிலை யென்று,
தமைப்பிறர் அறிந்திடும் வகைதிரி தந்தும்,
சுமைசுமை யானகுறும்புகள் சுமந்தும்,

வீணுரை யாடியும், வெளிப்புறத் துலவியும்,
தூண்புறத் தொடுங்கியும், விசிகளில் துவைந்தும்,
அரங்கடுத் திருக்கும் ஆலம் விழுதினிற்
குரங்கெனத் தொங்கியும், குப்பல் குப்பலாய்
ஊளை ஒலிகள் உரப்பியும், சீழ்த்தும்;
கூழைச் சிரிப்புகள் 'கொல்'லென் றவிழ்த்தும்
தாளிற் செய்த வாலம் புகளை
ஆளைப் பார்த்தே அடித்து மறைந்தும்,
கண்பட அசையும் கன்னியர் கண்டால்
புண்படு சொல்லாற் புகழுரை(!) கூறியும்,
பாண்புல வோர்போல் பாட்டிசை கூட்டியும்,
மாண்பவி யாத மாணவர் கூட்டம்,
அமர்ந்தும், நின்றும், அரங்கம் நுழைந்து,
நிமிர்ந்து,சொற் பொழிவு நிகழ விருக்கும்
மேடையில் கண்களை வீசி யிருந்தனர்!

கூடையுள் மூடிய கோழிக் குஞ்சுகள்
நாழி நேரத்தில் தாயடி குடைந்து
கூழையாப் பஞ்சுடல் குறுக்கித் தாய்வயி(று)
ஒட்டியுள் ளொடுங்கி, ஒழுகப் பொரிந்த
சிட்டிசை யடங்கிச் சிறத்தல் போல
அரங்கம் அமைவுற, ஆங்கொரு மாணவன்
உரங்கொள் குரலில் ஒலிவாங் கியின்முன்
வரவேற் புரையினை வடித்துக் கூறித்
திருவின் அமைந்தவோர் தலைவரை அமர்த்தி

நிகழ்ச்சியைத் தொடங்கினான்! நிவந்தமுன் வரிசையில்
நிகழ்ந்திருந் தனரே ஐயையும் சேரனும்!

வெள்ளுடை அவள்தன் மேனியில் விரவ
உள்ளம் ஆர்வமாய்ச் சேரனின் உரைக்குக்
காத்திருக் கையிலே, கண்களை விரித்துப்
பூத்த முகத்தொடு குறிஞ்சியுட் புகுந்தே,
ஐயையைக் கண்டாங் கழகுற வணங்கிப்
பைய வந்து,அவள் பக்கத் தமர்ந்தாள்!

குறிஞ்சி வந்ததும் குசுமுசு வொலியும்
உறிஞ்சுமூக் கோசையும் உரக்க வெழுப்பி
மாணவர் நகைத்ததை மனநை வுடனும்
வீணவர் வாழ்க்கை எனும்வெறுப் புடனும்
ஐயையும் கண்டாள்! குறிஞ்சியின் அழல்முகம்
வெய்யச் சிவந்தது; விழிவெறுப் புமிழ்ந்தது!
சேரன் முகத்தினைச் சிறக்கணித் தெழுந்து
நேராய் மேடைக்குச் சென்றாங் கமர்ந்தான்!

தலைவர் முன்னுரை தாம்நிகழ்த் துகையில்
அலைச்சிரிப் பிடையிடை ஆர்த்தனர் மாணவர்!
அறிவு வேட்கைக் கங்காக்கும் நாளில்
குறியொன் றில்லாக் குருட ராகி
வெறிபிடித் தலையும் வீணர் போல
நெறிபிறழ்ந் திப்படி நெகிழ்வுற் றிருக்கும்
மாணவர் நிலைக்கு மங்கையும் வருந்தி
பேணுவ தில்லாப் பெற்றோர் இகழ்ந்தாள்!

இவ்விழி மாணவர்க் கிடையில் தான்,என்
மெய்வழி நெஞ்சின் மேன்மை அன்பினை
உணரா திருந்திட வேண்டும், செம்மல்—என்
றணலார் மெழுகாய் ஐயை உருகினள்!

ஓரிரு மாணவர் உரைக்குப் பின்னர்
சேரன் பெயரைச் செப்பினர் தலைவர்
'கற்பதும் நிற்பதும்' என்னும் கருத்திலோர்
பொற்புரை நிகழ்த்தினன்; பூவை கேட்டாள்;

"கற்பதிந் நாளில் காசுக் காகவே!
விற்பனைக் காலமிவ் வியனுறு காலம்!
எத்துறைக் கல்வியால் எத்துணைப் பொருள்வரும்?
அத்தொகை கணக்கிட் டத்துறை யுய்க்கக்
கல்விக் கொருபடி கையூட் டிருபடி
செல்வம் அளித்துச் செல்வம் சேர்க்கவே
மக்கள் கல்வியை மதிக்கின்ற காலம்!
'தக்க அறிவெது? மேன்மைத் தரமெது?
புரையா வாழ்வில் புகுத்தும் துறையெது?
வரைவிலாப் புகழை வழங்கும் நிலையெது?'
என்றெலாம் எண்ணி இடர்ப்பா டுறுமல்,
தின்று குவிப்பதே' வாழ்வெனத் தேர்ந்தே,
இருந்த விடத்திலே இருகை நீட்டிப்
பெருந்தொகை பெறுகின்ற கல்வி பேணுமோர்
காலமிக் காலம்! கருத்திலாக் காலம்!

அறிவையே குளிகையா ஆக்கிக் கொடுப்பினும்
செறிவிலை போக்குவ தல்லால் செரித்ததால்
நல்லறி வுறப்பெறும் நாட்டமின் றில்லை;
இல்லறச் சிறப்பும் எவர்க்குமிங் கில்லை!
நல்லறம் பேசுதல் நான்று கொள்ளுதல்!
பொல்லா தனவே பொலிவொடு திகழும்!
எனவே; எவரும் எங்குமெப் பொழுதும்
மனம்வே றாகச் சொல்வே றாக
வினைகளோ அவற்றினும் வேறுவே றாகப்
புனைவுற வாழுமிப் பொல்லாக் காலத்துக்
கற்பதும் அதுதக நிற்பதும் கனவே!
முற்கா லத்து,அது முடிந்த தாகலாம்!

இக்கா லத்து,அஃது எலா வெறுமொழி!
சுக்கோ மிளகோ சுவடியில் கற்றுப்
பொய்யோ புனைவோ புதுமையாய்ப் பேசிப்,
கையோ காலோ கழுத்தோ பிடித்துப்
பதவியை வாங்கிப் பணத்தைச் செய்து,
மதமத வென,வாய் வயிறே மனமாய்,
உண்டி கொழுத்தே, ஊர்தியில் வந்து,
பெண்டுகள் பலரும், பிள்ளைகள் பலவும்,
நிறைவுறக் கண்டு, நிலவுதோய் முற்றத்து
அறையில் படுத்தே அன்றுடம் உறங்கும்
வாழ்வே வாழ்வென வண்ணித்துப் பேசும்
சூழ்வே இன்றைய உலகத்துச் சூழலாம்!

முற்றும் நனைந்தவர்க் கீரமும் இல்லை!
முழுதும் கெட்டார்க்கு நாணமும் இல்லை;
கற்றுநில் லாதார்க்குக் கல்வியும் இல்லை;
கானில் உறைவார்க்குப் பாதையும் இல்லை!
விற்பதும் பெறுவதும் என்னும் வினைக்கலால்
முற்பழங் காலத்துப் போலும் முழுமையாய்க்
கற்பதும் இல்லை; நிற்பதும் இனுமிலை!
எப்புது நோக்கினும் எளிமை எளிமையே!

ஆகவே, மாணவர் அனைவரும் அவரவர்
வேக உணர்வுக்குத் தக்க விருப்பொடு,
கற்கவேண் டாதன கற்கலாம்; கற்று
நிற்கவேண் டும்என நினைத்தலும் வேண்டா!
எதுவும் கற்கலாம்; எதையும் பேசலாம்;
எதுவும் செய்யலாம்; எங்ஙனும் இயங்கலாம்!
வெந்ததைத் தின்னும் விருப்ப மாணவர்
வெந்ததைத் தின்றே வெந்து போகலாம்!
வேகாமல் தின்னும் விருப்ப முள்ளவர்
வேகாமல் தின்று வேகாமல் நிற்கலாம்!

இதையிதை இவரிவர் இப்படி இப்படி
எண்ணுதல் பேசுதல் இயற்றுதல் என்னும்
முன்னோர் ஒழுக்கும் முழக்கும் எழுத்தும்
மண்ணாய்ப் போக; மண்ணாய்ப் போகவே!
கற்பது கனவு; நிற்பது வாழ்க்கை!
இப்புதுக் கொள்கையை இங்குள மாணவர்

ஏற்றுக் கொள்ளுவர் என்றே நினைக்கிறேன்;
மாற்றுக் கருத்துளார் மக்க ளாய்இரார்"

-என்று வேகமாய்ச் சேரன் இடியென
நின்று முழக்கினான்! நிகழ்த்திய உரைகேட்(டு)
ஐயை விழிகளில் அருவி வழிந்தது!
மெய்யாய் ஈன்ற 'தும்பை'யின் மேன்மையைக்
கண்டு களிக்கவும் காதால் கேட்கவும்
ஆங்கிலை யே,என உள்ளமும் அழுதது!
தாங்கிலா இன்பினால் தணிந்தது நெஞ்சம்!

சேரனின் உரையால் மாணவர் செருக்கின்
ஆர வாரம் அடங்கி யிருந்தது!
அலையலை யாக மகிழ்ச்சி ஆர்ந்தது!
தலைவரும் அவனைத் தட்டிக் கொடுத்தார்!
பின்னர், தலைவர் 'நெய்தல்'—என் பெண்ணை
"என்றும் மாறாத நிலைகள்"—என் தலைப்பில்
பேசுதற் கழைத்தார்; பிழையிலா ஐயையும்
ஆசையால் அவளை ஆங்கெதிர் பார்க்கையில்,

"தவழும் மின்னலோ? தகைவான் வில்லோ?
பவழக் கொடியோ? பால்நிலா நழுவியோர்
மங்கையா உருப்பெற்று மணிநடை யிட்டதோ?
பொங்கும் அருவியோ? பொலிந்தபூக் காடோ?
நீல மயிலோ? நித்திலச் செல்வியோ?
கோலப் பதுமையோ? குவிந்த எழிலெலாம்
தத்து நடையிடத் தாவிவந் ததுவோ?—

எத்திறத் தாளோ? இவ்விளம் பெண்"—என
அனைவரும் வியந்தே அண்ணாந்து நோக்க,
புனைவிலா ஓவியம் போல ஒருத்தி
மேடையில் நின்றாள்! மெய்ம்மறந் தையை,யவ்
ஓடைக் குளிர்மலர் உற்று நோக்கி
உள்ளம் மகிழ்வுற உயிரவட் பொருந்த
அள்ளும் உணர்வினால் அவள்உரை கேட்பாள்;

''என்றும் மாறா நிலைகள்' என்பன,
என்றுமே உயிர்களுக் கின்பம் தருவதும்,
என்றுமே உயிர்களின் தேவைக் கிருப்பதும்,
என்றுமே உயிர்கள் விரும்பி ஏற்பதும்—
எவையோ அவையாய் இருத்தல் வேண்டும்!

அன்றைய வாழ்க்கை அமைப்புகள் இன்றில;
இன்றைய நிலைகள் இனியிலா திருக்கலாம்;
உணவுகள் மாறலாம்; உடைகள் மாறலாம்;
உணர்வுகள், இடங்கள் காலங்கட் கேற்பப்
பற்பல உண்டிகள்; பற்பல சுவைகள்;
பற்பல உணவுப் பழக்க வழக்கங்கள்!
இருப்பினும் பசியுணர் வென்றும் ஒன்றுதான்!
திருப்பம் அதிலே நிகழுவ தில்லை!
உண்ணும் அவாவின்— உடுத்தும் ஆசையின்—
எண்ணம் என்றும் இருந்துகொண் டிருக்கும்!
உள்ளத் துணர்வுகள் என்றும் உளவாம்!
உண்மையில் உள்ளம் என்றும் உள்ளது!

உண்ணற் பொருள்களும் உடுத்தற் பொருள்களும்
எண்ணிலா மாற்றம் எய்துவ எனினும்
பசியும் மானமும் பாழுறு உணர்வுபோல்
கசிவும் இரக்கமும் கனிவும் அன்பும்
அறிவும் அருளும் அணைப்பும் புரப்பும்
நெறியும் ஒழுக்கும் நிறைவும் இன்பமும்
என்றும் மாறா இறைமை உணர்வுகள்!
என்றும் உயிர்களோ டிவையும் இருக்கும்!

மறுநிலை யுறுவது மாறுவ தாகும்!
மாறா நிலைகள் மனத்தின் நிலைகளே!
விருப்பு,மா றாது; வினைகள் மாறலாம்!
வினைகள் மாறினும் விளைவுகள் மாறா!
விருப்பினும் விளைவினும் இடையிலாம் வினைகள்!
வினையே காலம், பொழுதிடம் பொருளே
மனத்தொடு மலையும் உயிரின் குணமே!
மனங்குரக் கென்பார் மயலறி வுற்றோர்!
புனலின் தூய்மை புலத்தினால் கெடல்போல்
காற்றின் தூய்மை கலப்பினால் கெடல்போல்
மனத்தின் தூய்மையும் பொறிகளால் மலையும்!
அறிவெனுந் தோட்டியான் ஐம்பொறி காத்துச்
செறிவுற நிறுத்துக செம்மையின் மனத்தை!

மன்னும் நிலையால் மனம்என நவின்றார்;
உள்ளல் தன்மையால் உளம்என உரைத்தார்;
நிற்றல் இயல்பால் நெஞ்சம் என்றார்:

உள்ளதை உணர்தல் உள்ளல் ஆகும்!
நிலைத்ததை அறிதல் நினைத்தல் ஆகும்!
மன்னியது ஓர்தல் முன்னுதல் ஆகும்!
எண்ணெனின் கூர்மை; எண்ணுதல் கூர்தல்;
எண்ணலும் எழுவதும் எண்ணும் எழுத்தும்!
உண்ணல் உறங்கல் உறல்,ஆங் குவத்தல்
பண்ணல் பயிறல் எண்ண வினைவுகள்!

அறிவியல் தெரிவால் அனைத்தும் தன்வயத்
துறுவன என்றே மாந்தன் உவப்பான்!
இயற்கையை வென்றதா இறுமாப் புறுவான்!
இயற்கையுள் இவனும் இயங்குவ தறியான்!
புறத்துப் பொருளெலாம் புலந்திரி வனவே!
அறத்தின் நிற்ப அகநிலைப் பொருள்கள்!

பூதுதல் என்பது புறத்துறு வெழுச்சி!
பூதப் பொருள்களே புறமா றுவன!
உள்ளம் உள்ளது; யாண்டும் ஒளிர்வது!
வெள்ளமா வளியா விளங்கும் ஒளியது!
உள்ள நிலையெலாம் உள்ள நிலைகளே!
தள்ளும் நிலையெலாம் பூதத் தளைகளே!

என்றும் இன்பமே உள்ளத் தியல்பாம்!
ஒன்றுந் துன்பமோ உள்ள நெகிழ்ச்சி!
துன்பம் என்பது புறத்தே தோன்றுதல்!
இன்பம் என்பதோ இருந்திடும் உணர்வு!
தோன்றும் பிறவெலாம் தொலைகின்ற உணர்வே!

ஆன்றிருப் பனவோ அழியா உணர்வுகள்!
பொய்யினை என்றும் எவரும் போற்றிடார்!
மெய்யினை என்றும் எவரும் தூற்றிடார்!
அறமில் வினைகளை அனைவரும் தவிர்ப்பர்!
மறமில் வினைகளை என்றுமே மதிப்பர்!
உயர்ந்த எண்ணமும் உயர்ந்த செயல்களும்
மயர்விலா தென்றும் மதிக்கவே பெறுவன!
ஒழுக்கம் என்றுமே இழுக்க முறாது!
மழுக்கம் என்றுமே மதிப்புப் பெறாது!

பொய்யதும் என்றும் பொய்யே! பொய்யறு
மெய்யதும் என்றும் மெய்யே! வாழ்க்கை
மெய்யின் பாலதே; மேன்மையும் அதுவே!
எய்யும் சிறுவினைச் சிறப்பெலாம் என்றும்
மாறுதல் உறுவன! மாறாத துள்ளம்!
மாறுதற் பொருளால் மாறா மனத்தினை
வேறுபட் டியக்கித் துன்பினை விளைப்பீர்!
மாந்தரை மீமிசை மாந்தராய்ச் செய்யும்
ஆர்ந்த எண்ணங்கள் செயல்கள் அனைத்தும்
என்றும் மாறாமல் இருக்கும் நிலைகளே!
அன்றைய அறமே இன்றைய அறமும்;
என்றுமே அறந்தான் இறைமையும் ஆகும்!
என்றுமே அதுதான் இன்பமும் தேவையும்!
மதிகெடக் கேடுறு மனகோட் டத்தர்
எதிலும் இன்புறார்; எதனையும் இழிப்பார்,
அறிவுக் கோட்டமும் ஆராத் துன்பமே!

அறியாமை அகலல் அனைத்தினும் இன்பம்!
மனவிருள் நீக்கலே மன்னிய இன்பம்!
எனவே, மனத்தொளி ஏற்றுக இன்றே"

என்று நெய்தலங் கியற்றிய பொழிவுரை
சென்றாங் கவையினர் செவியினுள் நுழைந்தே,
உள்ளிருள் நீக்கி ஒளிதந் துவகை
வெள்ளம் பாய்ச்சிட, ஐயையும் வியந்தே,
உரைமுடித் திறங்கிய ஒண்டொடி தன்னை
விரைந்தெதிர்க் கொண்டு, "விழுமிய ஒருமை
ஏந்தனை பெண்ணாய்! என்றும் வாழ்"கெனக்
காந்தளஞ் செவ்விரல் கைம்மலர் பற்றித்
தோள்கை சேர்த்துத் தோகையை அணைத்து
வாள்நெடுங் கண்ணி குறிஞ்சி வருந்த
அழைத்துவந் தருகில் அமர்த்திக் கொண்டாள்!

தழைத்துப் பொலிந்த தாய்மை உணர்வினால்,
நெய்தலும் மகிழ்ந்து உள்ளம் நெகிழ்ந்திட
எய்த வாழ்த்துக்கு நன்றி இயற்றி,
ஆங்கவள் சேரனின் அன்னையென் றறிந்து,
பூங்குமு த முகம் நாணிப் புலர்ந்து,
தான்பயில் கல்வியின் தகுநிலை கலந்து,
மீன்பயில் விழிகளில் அன்பு மேவிட,
"அன்னாய்! ஒருநாள் அடியவள் மனைக்கு
மன்னிவந் திருந்து மலர்த்துக எமை"—என
வேண்டிட, ஐயையும் வியந்து மகிழ்ந்தே,

“ஆண்டுயாம் வருமுன் அன்னையும் நீயும்
நம்முடை இல்லம் நனிவந் திடு”கென
மும்முறை கூறினள்! நெய்தல் முகமலர்ந்து
“ஆங்ஙனே வருவ”மென் றுறுதி யளித்தே
பூங்கை வணங்கிப் போயினள்; விழவும்
இனிதாய் முடிவுற யாவரும் சென்றனர்!
பனிதோய் விழியொடு பிரிந்தனள் குறிஞ்சியே!



## 14.

நெய்தலை நினைத்தாள் நாளும்,
சேரனை நினைக்கும் போது!

### (வேறு)

நெய்தலந் தோகை யாங்கே
    நிகழ்த்திய உரையால், ஐயை
எய்திய மகிழ்வைச் சேரற்
    கெடுத்துரைத் தில்லம் சென்று,
"பொய்தவிர் உள்ளங் கொண்ட
    புரையிலா அறிவி னோர்தாம்
செய்தவப் பயனுய் அன்ன
    மெய்யுரை செய்வார்" என்றுள்!

"கருவினில் திருவாய்ந் துள்ளக்
கசடிலார் புரப்பின் வாழ்ந்தே,
உருவினுந் திருவாய்ந்(து) ஊறும்
உரையினும் நிறைவு பெற்று,
மருவிலா மனமும் கொண்டாள்
மங்கையாள் நெய்தல்" என்று
வருவதொன் றுரைப்பாள் போல
வாய்மையான் கேட்பச் சொன்னாள்! 2

அன்னையோ டவளை வீட்டிற்
கழைத்ததை மகிழ்ந்து சொல்லி
முன்னையக் குறிஞ்சி நோக்கை
முறித்ததும், நெய்தல் உள்ளம்
தன்னைநன் நிறைவு செய்த
தகைமையும் எடுத்துக் கூறி,
"என்னையோ அவள்பால் நெஞ்சம்
இணைவதே!" எனவி யந்தாள்! 3

"அறிவினும் அழகி னானும்
அமைவுறும் உள்ளத் தானும்
செறிவுறத் தோன்றும் நெய்தல்
சேரற்கு வாய்த்து விட்டால்,
முறிவுற்ற தனது நெஞ்சம்
முழுமையுற் றுவகை எய்தும்!
குறியெதோ இறைவற் குற்ற
கோளெதோ" வென நினைந்தாள்! 4

அன்னையார் மகிழ்ந்த செய்தி
ஆங்கவன் உறுத்துக் கேட்டுத்
தன்னையும் நெய்தல் பெண்ணாள்
தகைவுறக் கவர்ந்த உண்மை
முன்னையே சூடு பட்ட
முறையினால் மறைத்தா னேனும்
என்னையும் உரையா னாகி
இருந்ததால் உணர்ந்து கொண்டாள்! 5

நெய்தலை நினைத்தாள் நாளும்;
சேரனை நினைக்கும் போது!
நெய்தலைக் கேட்டாள் நாளும்,
சேரன்பால் 'நினைவாய் மாலை!
வெய்துயர்ப் பட்ட தெல்லாம்
விலகிட, அவளால் நேரும்
உய்தியொன் றுண்டாம் போல
உறுதியொன் றுளத்திற் கொண்டாள்! 6

சேரனும் கல்லூ ரிக்குச்
செல்லும்போ தெல்லாம், ஐயை
ஆரணங் கவளைக் கண்டே
அழைத்ததாய்க் கூறு கென்பாள்!
"நேரிழை கண்டாள்" என்றும்,
"நிற்காமல் சென்றாள்" என்றும்,
"காரணம் அறியேன்" என்றும்
கவலையாய் வந்து சொல்வான்! 7

அச்செய்தி கேட்டே ஐயை
　　அவள்ஒழுங் கெண்ணி யுள்ளே
மெச்சுவாள்! எனினும் அந்த
　　மெல்லிழை காண உள்ளம்
நச்சுவாள்! சேரன் போக்கை
　　நயந்துளம் வியப்பாள்! இன்னே
அச்சினில் சுழல்தல் போல
　　நாட்களும் அணியிற் செல்லும்! ௬



## 16.

ஒப்பி யிருந்தனள் நெய்தலுந்தான்!—நிலை
ஒத்து வராமல் அமைந்திருந்தாள்!

### (வேறு)

*நெய்தலை ஐயை புகழ்ந்ததையும்—தன்*
*நேரில் அவளை அணைத்ததையும்--கண்டு*
*வெய்யிலில் வீழ்ந்த புழுவினைப்போல்--நெஞ்சு*
*வெந்து, குறிஞ்சி புழுங்கினளே!* 1

***முன்னரே நெய்தலைத் தான்வெறுத்தாள்—அவள்***
***மூதறி வெண்ணிப் பொருதிருந்தாள்—இங்***
***கின்னமும் ஐயை இணைந்திடவே—அதை***
***எங்கனும் துண்டிப்ப தென்றிருந்தாள்!*** 2

தக்க வொருநேரம் பார்த்திருந்தே—நெய்தல்
தான்தனி கண்டு முகமலர்ந்தே—சென்று
ஒக்க உரையாடி 'வேட்டு' வைத்தாள்!—அவள்
ஓங்கிய எண்ணம் சிதைத்தெறிந்தாள்! 3

தந்தையின் பேரறி யாதவனும்—சேரன்
தாயும் ஒழுக்கம் இலாதவளாம்!—என
வெந்த உளத்துக் குறிஞ்சிசொன்னாள்—தூய
வெள்ளை மனங்கொண்ட நெய்தலின்பால்! 4

தன்னைவந் தன்னவன் காதலித்தான்—அவன்
தாயும் அதற்குக் கருத்திசைந்தாள்—அதன்
பின்னை யவர்நிலை கண்டறிந்தே—மனப்
பித்தந் தெளிந்ததாய்ப் பீற்றிக்கொண்டாள்! 5

ஊருராய் மாறி வருபவராம்—எங்கும்
ஒட்டும் உறவும் இலாதவராம்—வேறு
யாரும் அவரை அறிந்திலராம்—என
யாப்புற வாய்நன்கு கட்டுரைத்தாள்! 6

குறிஞ்சியின் தீத்திறங் கண்டிருந்தும்—அவள்
கோள்மொழி சொல்லல் அறிந்திருந்தும்—அவள்
எறிந்த இழிமொழி யாலவர்மேல்—கொண்ட
ஏற்றங் குறைந்தது நெய்தலுக்கே! 7

ஆகவே சேரனைக் கண்டவுடன்—எங்கோ
அப்புறம் பார்ப்பவள் போல்முகத்தை--வைத்துப்
போகவும் நெய்தல் தொடங்கிவிட்டாள்;--அன்பு
பொங்கிய நெஞ்சையும் தானடக்கி! 8

சேரனை முன்பே உணர்ந்திருந்தாள்--வழிச்
செல்கையில் பார்த்து வியந்திருந்தாள்—ஒரு
வீரனைப் போல நடந்துசெல்லும்--அவன்
வெற்பெனுந் தோளும் நயந்திருந்தாள்! 9

எப்படி யாகிலும் நின்றவனோ—டெதிர்
இன்பமாய் நல்லுரை யாடுதற்கே—மனம்
ஒப்பி யிருந்தனள் நெய்தலுந்தான்!--நிலை
ஒத்து வராமல் அமைந்திருந்தாள்! 10

இந்த நிலையினில் தான்குறிஞ்சி—அவன்
எப்படி யுந்தனைக் காதலிக்க—ஒரு
தந்திரம் அன்றங்குச் செய்தனளே!—நெய்தல்
தானுமன் னோடே ஒதுங்கினளே! 11

ஆயினும் அன்னவள் தோற்றத்தையும்--அவன்
ஆருக்கும் சாயாமல் நின்றதையும்—சிலர்
வாய்மொழி கேட்டு மகிழ்ந்தவளாய்—நல்ல
வாய்ப்பையும் தானெதிர் பார்த்திருந்தாள்! 12

சேரனும் அன்னையும் தாம்வரவே—ஒன்றும்
செய்திடத் தோன்றுமல் நெய்தல்,அன்றே--ஓர்
ஓரமாய் ஏங்கி யமர்ந்திருந்தாள்—உரை
யாற்றி முடித்தே இறங்கிவந்தாள்! 13

வந்தவ ளை,யிரு கையணைத்தே—அன்னை
வாழ்த்துரை கூறி வரவேற்றே—ஒரு
சொந்தங்கொண் டாடி யருகமர்த்த—நெய்தல்
சொக்கி உளம்,உயிர் தாமலர்ந்தாள்! 14

பசித்துக் கிடந்தவன் பாலமுதை—வாங்கிப்
பார்க்கையில் நாய்வந்து கொண்டதுபோல்—அங்கு
விசித்துக் குழைந்துளம் நொந்தழுதாள்,—அவள்
விசிய தீயுரை கேட்டதிர்ந்தே! 15

குறிஞ்சி உரைத்த பெரும்பழிச்சொல்—என்றும்
கொள்ளத் தகாதவோர் பொய்யுரையாய்--முற்றும்
வெறுஞ்சொலாய்ப் போய்விட வேண்டுமென்றே—
[நெய்தல்
வேண்டி இறைவன் வழுத்திநின்றாள்! 16

16.

ஐயையும் பேரிடி தாங்கலுற்றாள்—இனி
ஆர்வந்து தேற்றினும் தான் திரும்பாள்!

(வேறு)

செய்தவம் முற்றும் திரண்டெழுந்தே--ஒன்று
சேர்ந்துரு வாய்வந்த கற்புடையாள்,
நெய்தல் வராமையின் காரணத்தைக்--காண
வேண்டுமென் றே,மகன் சேரனிடம்
வெய்துயர் உற்றே உளம்வருந்திச்--சொல்லி
வெந்து புழுங்கி உடல்நலிந்தாள்!
செய்துநின் ற,வினை ஒன்றுமின்றி—ஒரு
சேர வெறுத்ததை எண்ணிநொந்தாள்!

அன்னை உடல்நலம் குன்றியதும்—சேரன்
ஆரா உளத்துயர் கொண்டுவிட்டான்!
"முன்னை யிருந்த மகிழ்ச்சியில்லை—அன்னை
மொய்குழல் பற்றியே எண்ணுகின்றார்!
என்னை யிதாம்ஒரு பெண்வரவுக்—கிவர்
ஏங்கி வருந்தும் வகையெதுவோ?
அன்னவளும்அன்று சொன்னதுபோல்—ஏன்
அங்கு வரவில்லை?" என்றுநொந்தான்! 2

"நெய்தலைக் கண்டதும் ஓர்முறைதான்—அங்கு
நின்றுரை யாடிய தும்,நொடிதான்!
எய்திய துன்பமோ குன்றளவாய்—வந்தே
எங்ஙனம் அன்னையைப் பற்றிவிடும்?
மெய்தவழ் நெஞ்சில் அவள்நினைவே—வந்து
மேவித் துயர்செய்யும் என்பதில்லை!
எய்திய எண்ணமும் ஒன்றிருக்கும்;—அதில்
என்றன் நினைவும் மிகுந்திருக்கும்!" 3

—என்றவன் எண்ணி வருந்தலுற்றான்!—இனி
என்செய்வ தென்றறி யாதிருந்தான்!
அன்றொரு நாளில்அந் நெய்தலினைக்—கண்டே
ஆர்ந்த பெருந்துயர் கொண்டவனாய்
நின்றனன் அன்னை அருகினிலே;—அவள்
நேர்ந்தது கேட்டிடத் தானழுது
மென்று விழுங்கிய வாறவனும்—வந்து
மேவிய வெம்பழி கூறலுற்றான்! 4

குன்று வெடித்துச் சிதர்ந்ததுபோல்—ஒரு
கோடிமின் னல்வந் தெரித்ததுபோல்,
நின்ற கடல்பொங்கி வந்ததுபோல்—கனல்
நீள எரிந்து சுழன்றதுபோல்,
சென்ற கதிரற்று வீழ்ந்ததுபோல்—ஒரு
சீற்றப் புயல்வந்து சீர்த்ததுபோல்,
கொன்று சிதைத்துத்தன் ஊனுடலை—பல
கோடிக் கழுகுகள் தின்றதுபோல், 5

நின்றது போல்,அங்கு வீழ்ந்ததுபோல்—விழி
நேருக்கு வேல்வந்து பாய்ந்ததுபோல்,
சென்றது போல்,அங் கிருந்ததுபோல்—அவள்
செத்தது போல்,உயிர் வந்ததுபோல்,
வென்றது போல்,உடன் தோற்றதுபோல்—உடல்
வெள்ளெலும் பெல்லாம் எழுந்ததுபோல்,
மென்றுதன் ஊன்தசை தான்விழுங்கி—தன்
மேனி அரத்தம் குடித்ததுபோல், 6

ஐயையும் பேரிடி தாங்கலுற்றாள்—இனி
ஆர்வந்து தேற்றினுந் தான்திரும்பாள்!
“பொய்யைச் சுவையென உண்டுநிதம்வாழும்
போக்கிலிச் சூரர் மறைவரைக்கும்,
மெய்யுக்கு வாழ்வில்லை” என்றுரைத்தாள்!—தன்
மேனித் தசைவற்ற வெய்துயிர்த்தாள்!
“கையுக்குக் கையாகக் கொண்டுவிட்டேன்—உயிர்க்
காவல் எனக்கில்லை” என்றுசொன்னாள்! 7

"தம்பி,நீ ஒன்றுசெய்; இன்றேசெய்வாய்—எனைக்
துண்ணி யறுத்துப் புதைத்துவிடு!—உடன்
அம்பர் உலகிற்கு நானுஞ்சென்றே—என்னை
அன்று படைத்த இறைவனிடம்—என்
வெம்பு துயரெனக் கீந்தீரெனா—ஒரு
விளக்கம் அறிந்திட வேண்டு"மென்றாள்!
அம்புடல் எங்கணும் பாய்ந்ததுபோல்—மகன்
ஆங்கது கேட்டே அலறினனே! 8

"வாழ்ந்தநாள் முற்றும் அடுக்கடுக்காய்—மேல்
வந்த தொடர்துயர் யாவையினும்
சூழ்ந்துள இப்பழி போல்துயரம்—என்றும்
சூழ்ந்ததும் சூழ்வதும் இல்லை;யிக்கால்
ஆழ்ந்த துயர்,இறு தித்துயராம்—இனி
அண்டுந் துயர்க்கழ நீருமில்லை;
விழ்ந்ததென் வாழ்க்கை;ஆ னாலும்உன்னை—இன்னே
விட்டுநான் போய்விட மாட்டேன்" என்றான்! 9

"இவ்வுயிர் போதற்குள் எண்டுவந்த—பழி
இல்லையென் றாக்கிட வேண்டுமன்றோ?
அவ்வொரு நாள்வரை நானிருப்பேன்!—நான்
அன்றுசொல் வேன்;தம்பி, அன்றைக்கு,நீ
இவ்வுடல் தன்னை,யந் நெய்தல்முன்னே—கொண்டு
எதிரில்வை நம்பழி போக்கிவிட்டே
வெவ்வுயிர் தன்னை விடுப்பேன்"என்றே—ஐயை
விறுகொண் டாளாய்,மு ழக்கமிட்டாள்! 10

சொல்லி முடித்தவள், சோர்ந்துவிட்டாள்—இனிச்
சொல்லுதற் கேதுமி லாதவள்போல்!
நல்ல உறக்கமும் ஊணுமின்றிப்—பின்னர்
நாளுக்கு நாளும் படிப்படியாய்
மெல்ல உடல்நலம் குன்றியளாய்—நிலை
மேலுற மேலுற நோய்மிகுந்து,
வல்ல நடைகுன்றி மெய்தளர்ந்து—ஐயை
வாடிக் குலைந்து படுத்துவிட்டாள்! 11



## 17.

குன்றாத ஓலமங்குக் குமிழியிட்டுப் பாயும்!
குறைவில்லாக் கற்பமைந்த கன்னிமனம் ஓயும்!

(வேறு)

அன்றொருநாள் விடியலிலே
ஐயையுடை பேச்சும்
அடங்கியதும் கண்ணலைந்து
பார்த்தபடி யிருந்தாள்!
நின்றிருந்தான் செல்லமகன்;
நீட்டுவிரல் காட்டி,
நெய்தலிடம் கூட்டிச்செல்லக்
கையசைத்துக் கேட்டாள்!
சென்றழைத்தான் வண்டியினை;
செவ்வாழைத் தண்டாய்ச்
சிறுத்துவிட்ட பொன்னுடலைக்
கைதாங்கி வைத்தான்!
குன்றனைத்த தோள்சார்த்திக்
கொங்குதமிழ்ச் செல்வி
குலுங்காமல் பார்த்துடலை
நெய்தல்மனை சேர்த்தான்!

ஓடோடி நெய்தல்வந்தாள்;
பெற்றோரும் வந்தார்!
ஒவ்வொருவர் கைதாங்கி
ஒண்படுக்கை சேர்த்தார்!
கூடோடி விட்ட உயிர்
கொண்ட கடமைக்கே
குடிபுகுந்து மெல்லுடலில்
சிறிதுசிறி தாகப்
பூடோடித் தண்டோடி
நரம்பிலெலாம் ஓடிப்
பொலிந்தமுகத் திணைந்தோடி
இமைப்பரப்பில் ஓடி,
ஊடோடி நின்றிடவும்,
ஒண்டொடியாள் கண்கள்
ஒருவாறு மெதுமெதுவாய்த்
திறந்தனவே, அங்கே! 2

திறந்தவிழி சுழற்றிமனைக்
கூரையெல்லாம் நோக்கித்
திரண்டுதனைச் சூழ்ந்திருந்த
கூட்டமதைக் காண,
இறந்தவுணர் வெழுந்ததுள்ளம்
எழுந்துநினை வெழவும்,
ஏறெடுத்துத் தனித்தனியாய்க்
கூர்ந்துமுகம் பார்த்தாள்!

சிறந்தமகன் அருகிருந்தான்;
நெய்தலும்நின் றிருந்தாள்
சிரித்தபடி பெற்றோரும்
அவளருகில் நின்றார்!
மறந்தநினை வோங்கிடவும்
நெய்தலின்கை பற்றி
மார்பினிலும் மலர்முகத்தும்
வைத்துவிழி நீர்த்தாள்!

வாயிதழ்கள் துடிதுடிக்க,
மிகமுயன்று மெல்ல,
"வா,அம்மா! அருகில்"—என
அவள்முகத்தை நீவி,
"நீயிதுநாள் வரையிலென்னை
ஏன்மறந்தாய் கண்ணே!
நிலைத்தமணம் பற்றியன்று
பேசினையே, அதுதான்,
போயிருந்த உயிரைக்கொஞ்சம்
நிறுத்தியதாம்" என்றே
பொங்குவிழி நீர்மிகுக்க
நின்றுநின்று சொன்னாள்!
வேயிருந்த தோள்குலுங்கி
ஐயையுடன் நெய்தல்
விசித்தழுதாள்; மகனழுதான்;
பெற்றோரும் அழுதார்!

ஆர்ந்தழுத அன்னவரைக்
கையமர்த்தி ஐயை,
"அழவேண்டா" எனவேண்டி,
அங்கிருந்த சுவர்மேல்,
நேர்ந்தவிழி நாட்டியவள்
நிலைகுத்திப் போனாள்!
நெஞ்சடைத்துக் கொண்டவளாய்
உவகைமிகப் பெற்றே,
சார்ந்திருந்த புகைப்படத்தை
இருகையால் நீட்டிச்
சாற்றியளாய்ச் "செம்மலிதோ
செம்மலிதோ" வென்றாள்!
கூர்ந்திருந்த பெரியவராம்
நெய்தலின்நற் றந்தை
கொக்கியிருந் தப்படத்தைத்
தூக்கிவந்து தந்தார்! 5

"ஆம், அம்மா! இவர்செம்மல்,
இவரோடிப் படத்தில்
அருகிருப்ப தென்தங்கை
'தும்பை'யென்று சொன்னார்!
ஆம், அம்மா, ஆம்ஐயா,
ஆம்நெய்தல் இவர்தாம்
அத்தைமகன் செம்மல், நான்
... ஐயை, ஐயை" என்றாள்!

"நாமொன்று நினைத்திருக்க
தெய்வமொன்று நினைக்கும்;
நடப்பதெல்லாம் பேரிறைவன்
திருவுளமே" என்று
ஊமென்று குழந்தையைப்போல்
தேம்பிமிகத் தேம்பி
ஒருநாழிப் பொழுதழுதாள்
உயர்கற்பின் செல்வி!

தந்தையர்தாய் முகமறியாச்
சேரனவன் தேம்பித்
தாய்க்குத்தாய் ஐயைமுகம்
விழ்ந்தழுதான் அங்கே!
"எந்தையுமாய் அன்னையுமாய்
இருந்தபெருந் தேவி!
என்னைவிட்டுப் போகாதீர்"
என்றழுதான்; அவனை
வந்தமர்த்தி மாமனவர்
தோளணைத்துத் தேற்ற
வாய்த்திருந்த மாமியரும்
"அழவேண்டா தம்பி,
சொந்தமினி ஆகிவிட்டோம்;
வேறில்லை" என்றாள்;
சொன்னமொழி கேட்டு,ஐயை
உளங்குளிர்ந்து போனாள்!

பின்னரவர், செம்மலினைத்
தும்பையினைப் பற்றிப்
பேரன்பின் ஐயைபற்றித்
தெரிந்தவகை கூறி,
இன்னுமவர் பிள்ளையினை
எவரெடுத்து வளர்த்தார்
எனுஞ்செய்தி தாமறியா
திருந்தநிலை சொன்னார்!
அன்னவரும் தனக்குறவாய்
அமைந்தபின்னர், நெய்தல்
'அத்தை'யென்று கத்தியவா
றையைமடி வீழ்ந்தாள்!
'இன்னுமொரு நூறுமுறை
சொல்,இனிக்க!'' என்ன,
ஏந்திழையும் ''அத்தையத்தை''
என்றலறிச் சாய்ந்தாள்! 8

ஆங்கதன்பின் பேரமைதி
வாய்த்திடஎல் லாரும்,
ஐயையினைச் சுற்றிநின்றே
உளம்விசித்து நின்றார்!
தேங்குமுத முகமலர்ந்து,
வாயடங்கிக் கண்கள்
திறந்தபடி நீரொழுகப்
படுத்திருந்தாள் ஐயை!


தாங்குகிலாத் துயரமுழுத்த
சேரனொரு பாங்கும்
தளிர்கொடியாள் நெய்தலொரு
மருங்கினிலும், பெற்றோர்
நீங்கிலராய் எதிர்ப்புறத்தும்
நின்றிருந்தார்; செம்மல்
நிழற்படத்தை ஐயையவள்
மார்பணைத்தி ருந்தாள்! 9

பேச்சில்லை; பார்வையில்லை;
உயிர்மட்டும் கொஞ்சம்
பேரமர்க்கண் உட்புறத்தில்
ஊசலிட்டு நிற்கும்!
மூச்சுயரப் பார்த்திருந்தார்;
அந்நிலையில் ஐயை
மூடியகண் தான்திறந்தாள்:
பெரியவரை அழைத்தாள்!
“ஆச்சின்னும் சிலநொடிகள்
அண்ணா” வென்றழுதே,
“அறிவுநிறை நெய்தலுக்கே
சேரன்” என்று சொன்னாள்!
மாச்சில்போல் “ஆகட்டும்,
அம்மா” வென் றுரைத்தார்!
மற்றதன்பின் சேரனவன்
முகம்நீவிச் சொல்வாள்! 10

''கண்மணியே! என்னுயிரே!
நெய்தலினைக் கண்போல்
காத்துக்கொள்! என்றுனக்கே
உனக்கொன்று சொல்வேன்!
விண்,மழை,நீர், காற்றெல்லாம்
என்கதையைச் சொல்லும்;
ஆனாலும், விளங்குகிலாப்
பேதையிதைச் சொல்வேன்!
திண்குன்றில், எனைக்கவர்ந்த
செம்மல்வர வெண்மணிச்
சேர்த்திருக்கும் கற்களுடன்
எனைப்புதைத்தே, ஆங்கோர்
வெண்மேடை கட்டி,நிரை
மேய்த்திருந்த என்போல்,
வெண்பளிங்குச் சிலையொன்றை
நீ,வைத்தல் வேண்டும்'' 11

—என்றுரைத்தே; அன்புமகன்
கையெடுத்து, நெய்தல்
இளங்கையோ டிணைத்துவைத்தாள்!
இமைமூடி விட்டாள்!
சென்றதவள் வல்லுயிரும்;
நின்றதவள் பேச்சு!
சீர்த்ததுயர், பொங்குவிழி,
நீர்வீழ்ச்சி—எல்லாம்

நின்றதினி! ஐயையில்லை;
நினைவலைகள் இல்லை;
நெட்டுயிர்த்த பெருமூச்சு
பெருந்துன்பம் இல்லை;
குன்றாத ஓலமங்குக்
குமிழியிட்டுப் பாயும்!
குறைவில்லாக் கற்பமைந்த
கன்னிமனம் ஓயும்! 12



18

அல்லிவிழி மூடியிங்கே தூங்குவீரோ அன்னாய்
அத்தை யங்கே காத்திருப்பார்; தூங்குவீரோ அன்னாய்!

(வேறு)

ஐயையவள் விருப்பம்போல், புதினிக் குன்றில்
அவளுடலைச் சேரனவன் அடக்கம் செய்து,
துய்யவெள்ளைப் பளிங்காலோர் சிலையும் வைத்தான்!
தோகைமயில் நெய்தலையும் மணந்து கொண்டான்!
செய்யபசும் பொன்மனத்து மனைவி யோடு
செய்துவைத்த சிலையின்முன் திங்கள் தோறும்
எய்யுமதி யத்தன்று, நினைந்து பாடும்
இரங்கற்பா இக்காலும் எழுதல் கேட்கும்:

(வேறு)

*சேரன் பாடுவது :*

ஆநிரைகள் மேய்ந்துவரும்!
    ஆடுகளும் மேல்திரியும்!
பூநிறையும் கூந்தலிலே;
    பொட்டிருக்கும் நெற்றியிலே;
பூநிறைந்த கூந்தலுக்கும்
    பொட்டிருக்கும் நெற்றிக்கும்
கீழிருக்கும் கண்ணயர்ந்து
    தூங்குவிரோ அன்னாய்!
கீழ்க்கதிரோன் சாய்ந்துவிட்டான்
    தூங்குவிரோ! அன்னாய்! 2

*நெய்தல் பாடுவது :*

ஊர்க்குவரும் சாலையிலே
    ஓர் உருவம் காணுமென்று
நீர்மறைக்கும் கண்பார்த்து
    நின்றிருந்தீர்! நின்றிருந்தீர்!
நீர்மறைக்கும் கண்பார்த்து
    நின்றிருந்து நின்றிருந்து,
பார்த்தகண்ணும் பூத்ததினித்
    தூங்குவிரோ அத்தை!
பகலவனும் வீழ்ந்துவிட்டான்
    தூங்குவிரோ அத்தை! 3

சேரன் பாவேது:

கொல்லையிலே பூப்பூக்கும்;
கொட்டிலிலே மாடசையும்!
முல்லையினைக் கோத்தெடுத்து,
மொந்தையிலே பால்கறந்தீர்!
முல்லைமலர் காத்திருக்கும்!
மொந்தைப்பால் மேல்புளிக்கும்!
அல்லிவிழி மூடியிங்கே
தூங்குவீரோ அன்னாய்!
அத்தையங்கே காத்திருப்பார்
தூங்குவீரோ அன்னாய்! 4

நெய்தல் பாவேது:

எட்டாத ஆசைவைத்தே
ஏறாத குன்றேறிப்
பட்டாளம் போனவரைப்
பார்த்திருந்தீர்! பார்த்திருந்தீர்!
பட்டாளம் போனவரைப்
பார்த்திருந்து பார்த்திருந்து
கொட்டாவி வந்ததினித்
தூங்குவீரோ அத்தை!
கும்மிருளும் சூழ்ந்ததினித்
தூங்குவீரோ அத்தை! 5

சேரன் பாடுவது :

பந்தலிலே காய்கனக்கும்;
　　பாலுறைந்து தயிராகும்!
சந்தனத்தைப் பூசிடுவார்;
　　சாந்தெடுத்துத் தான்குழைப்பார்!
சந்தனத்துப் பூச்சுக்கும்
　　சாந்திழைக்கும் வேலைக்கும்
வந்தவரைக் காணவில்லை;
　　தூங்குவீரோ அன்னாய்!
வாசலிலே பந்தலில்லை;
　　தூங்குவீரோ அன்னாய்! 6

நெய்தல் பாடுவது :

கொட்டாத மேளம்!
　　குழலில்லா நாகசுரம்!
கட்டாத தாலிக்குக்
　　காத்திருந்தீர்! காத்திருந்தீர்!
கட்டாத தாலிக்குக்
　　காத்திருந்து காத்திருந்து
கழுத்தும் சுளுக்கிற்றெனத்
　　தூங்குவீரோ அத்தை!
காலம் இருண்டதெனத்
　　தூங்குவீரோ அத்தை! 7

சேரன் பாடுவது :

பெற்றவளும் மெய்சலித்தாள்;
　　பேணவந்தோன் கைசலித்தான்!
உற்றவரும் கண்டதில்லை;
　　உங்களைத்தான் பற்றவந்தேன்;
உற்றவரைக் காட்டிவிட்டே
　　உங்கள்தோள் கீழிறக்கிப்
பற்றிலராய்க் கண்ணயர்ந்து
　　தூங்குவிரோ அன்னாய்!
பணிபுரியக் காத்திருப்போம்!
　　தூங்குவிரோ அன்னாய்! 8

நெய்தல் பாடுவது :

குன்றதிரப் பாட்டிசைக்கும்;
　　குழல்விழப் பூவுதிரும்;
கன்றுக்குக் காத்திருந்தீர்!
　　காளைக்குப் பார்த்திருந்தீர்!
கன்றுக்கும் வேலையில்லை;
　　காளையும்ஊர் சென்றதினி,
என்றைக்கு நேரம்வரும்?
　　தூங்குவிரோ அத்தை!
என்வயிறு பூக்கும்வரை
　　தூங்குவிரோ அத்தை! 9

*சேரன் பாடுவது:*

பஞ்சடிகள் நைந்திருக்கும்;
பாய்நனைந்து பிய்ந்திருக்கும்!
பிஞ்சுவிரல் காய்த்திருக்கும்;
பேச்சொலியும் ஓய்ந்திருக்கும்!
பிஞ்சுவிரல் தேயாமல்,
பேச்சொலியும் மாயாமல்,
நெஞ்சஇமை மூடியிங்கே
தூங்குவிரோ அன்னாய்!
நினைவெல்லாம் தாலாட்டும்;
தூங்குவிரோ அன்னாய்! 10

*நெய்தல் பாடுவது:*

பூக்காமல் பூத்தமலர்;
பூவுதிராப் பச்சைக்கொடி!
வாய்க்காத கூடத்துக்கு
வந்ததிரை நீங்குமென்றும்,
காய்க்காத பேய்மரத்தில்
கல்லெறிந்து காத்திருந்தும்
சாய்க்காத கண்மூடித்
தூங்குவிரோ அத்தை!
சலங்கைசெய்து காத்திருப்போம்
தூங்குவிரோ அத்தை! 11

—(முற்றும்)—

# பாவலரேறு ஐயா பெருஞ்சித்திரனார் அவர்களின் நூல்கள்

○○○

| | | |
|---|---|---|
| 1. | கொய்யாக்கனி *(பாவியம்)* | 16.00 |
| 2. | ஐயை | 30.00 |
| 3. | பாவியக் கொத்து | 22.00 |
| 4. | கற்பனை ஊற்று | 40.00 |
| 5. | பள்ளிப் பறவைகள் *(குழந்தைப் பாடல்கள்)* | 18.00 |
| 6. | நூறாசிரியம் *(விளக்க உரையுடன்)* | 100.00 |
| 7. | திருக்குறள் மெய்ப்பொருளுரை *(முதற்பகுதி)* | 150.00 |
| 8. | உலகியல் நூறு *(பொழிப்புரையுடன்)* | 10.00 |
| 9. | பாவலரேறு பாடல்கள் – கனிச்சாறு *(ஆறு தொகுதிகளாக)* | (அச்சில்) |
| 10. | மகபுகு வஞ்சி | (அச்சில்) |
| 11. | எண்சுவை எண்பது | (அச்சில்) |
| 12. | அறுபருவத்திருக்கூத்து | (அச்சில்) |
| 13. | கழுதை அழுத கதை | (அச்சில்) |
| 14. | தன்னுணர்வு | 3.00 |
| 15. | பாவேந்தர் பாரதிதாசன் | 25.00 |
| 16. | இலக்கியத்துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப்பணிகள் | 5.00 |
| 17. | ஆரியப்பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள் | 7.00 |
| 18. | இனம் ஒன்றுபடவேண்டும் என்பது எதற்கு ? | 2.00 |
| 19. | சாதித் தீமைகளும் அதை ஒழிக்கும் திட்டமும் | 3.00 |
| 20. | செயலும் செயல்திறனும் | 45.00 |
| 21. | தமிழீழம் | (அச்சில்) |
| 22. | ஓ ! ஓ ! தமிழர்களே ! | 11.00 |
| 23. | தனித்தமிழ் இயக்கத் தோற்றமும் வளர்ச்சி வரலாறும் | 10.00 |
| 24. | நெருப்பாற்றில் எதிர்நீச்சல் | 6.00 |
| 25. | இளமை விடியல் | 50.00 |
| 26. | இட்ட சாவம் முட்டியது | (அச்சில்) |
| 27. | பாவலரேறு பெருஞ்சித்திரனார் நினைவு மலர் | 60.00 |
| 28. | தென்மொழி *(பாவலரேறு ஐயா அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவு மலர்)* | 16.00 |